www.tamilarangam.net

# உரிமைப் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகள்



மாத்தளை - ரோகிணி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உரிமைப் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகள்

இலங்கை மலையகத் தோட்டத் தொழிலாளர் போராட்ட வரலாறு

PUBA & Co.
65 SKEFFINGTON ROAD
EAST HAM
LONDON E6 2NA
TEL: 081 552 2901

மாத்தளை—ரோகிணி

இளவழகன் பதிப்பகம்
4, இரண்டாவது தெரு,
ஆண்டவர் நகர், கோடம்பாக்கம்,
சென்னை-600 024

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வெளியீட்டுரை

மலையக மக்களின் வரலாறு போராட்டம் நிறைந்ததாகும். போராட்டமே வரலாறாகக் கொண்டவர்கள் இந்த மக்கள். இத்தகைய போராட்டங்களில் பல வழிகளில் உயிர்த்தியாகம் செய்தவர்கள் பலர். அவர்களுக்குத் தலை வணங்கி அஞ்சலி செலுத்துவதும் நினைவு கூர்வதும் இன்றைய சந்ததியினரின் கடமையாகும். ஆனால் இன்று இவர்களைப் பற்றி சிந்திப்பார் யாரும் இல்லை என்பது வேதனைக்குரிய விடயம்.

இன்றைய மலையக மக்களின் வாழ்வு முன்னோர் புரிந்த உயிர்த் தியாகங்களில் இருந்து கட்டியெழுப்பப் பட்டுள்ள தென்பதை சமுதாய உணர்வுள்ள எவரும் மறுப்பதற்கில்லை. இவர்கள் அனைவரும் ஒரு சமூகத்தின் போராட்ட வரலாற்றில் உயிர்த் தியாகம் செய்து உரம் சேர்த்தவர்கள் என்பதைமலையகமக்கள் மறக்காமல்இருப்பதற்காகத் திரு. அய்யாத்துரை (மாத்தளை—ரோகிணி) அவர்கள் போராட்டத்தில் உயிர் நீத்தவர்களின் வரலாற்றை இன்றைய சமூகத்தினர் அறியும்படி முழுமை யாகவே இந்நூலில்வடித்துத் தந்துள்ளார்கள். முல்லோயா கோவிந்தன் முதல் பத்தனை டெவன் சிவனு லெட்சுமணன் வரை இதில் காண முடிகின்றது. இவர்கள் அனைவரையும் நினைவு கூர்வதுடன் இன்றைய தலைமுறையினர் இவர்களைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கும் இந்நூல் பயனுள்ளதாகும். இந்நூலை வெளியிட உதவிய பதிப்பகத்தாருக்கும், தம்பி வே. கருணாநிதி அவர்களுக்கும் நன்றி! வணக்கம்.

**மாத்தளை—கார்த்திகேசு**
**குறிஞ்சி வெளியீடு**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களின் தவறான போக்கினாலும், சுயநலத் தன்மைகளினாலும் தொழிலாளர் சந்ததியினரின் மகத்துவம், போராட்ட உணர்வுகள் மழுங்கடிக்கப்பட்டதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்டுவது எனது கடமையாகும்.

பல்வேறு தொழிற்சங்க சக்திகள் மலையகத்தில் புகுந்த போதுதான் தொழிலாளி உணர்ச்சியோடும், உணர்வுகளோடும் உரிமைக்குக் குரல் கொடுக்க எழுந்தான். அந்தப் போராட்டம். தியாகம் வரலாற்றுக் காவியமாகத் திகழ வேண்டியதொன்று என்பதைக்கூட தொழிற்சங்கங்கள் அக்கறை காட்டத் தவறி விட்டது

இந்த நிலையில்தான் மலையக மக்களின் அன்புக்கும், மதிப்பிற்கும் உரிய மலையக அண்ணாவாகத் திகழ்ந்த வீ. கே, வெள்ளையன் அவர்கள் 1965 ஆம் ஆண்டு தொழிலாளர் தலைமையில் தொழிற்சங்கத்தை அட்டன் மாநகரில் ஸ்தாபித்து தொழிலாளர்களின் உரிமைக்குப் போர் முரசு கொட்டினார்

இந்த அமைப்புத்தான் மலையக அரசியல் தொழிற் சங்கத் தலைவர்களையும் தொழிலாள தியாகிகளையும் முதன் முதலாக கௌரவித்தது. மலையக எழுத்தாளர்களும், கவிஞர்களும், ஆய்வாளர்களும் கௌரவிக்கப்பட வேண்டுமென்ற கொள்கை கொண்டிருந்த அவர், மலையக மூத்த தொழிற்சங்கவாதியும், எழுத்தாளரும், கவிஞருமான ஸி. வி. வேலுப்பிள்ளை அவர்களையும் தன்னோடு இணைத்துக் கொண்டு தொழிற்சங்கப் பலத்தையும், சக்தியையும் ஒன்று திரட்ட செயல்பட்டார்.

அந்த அடிச்சுவட்டில் தொழிற்சங்கத் தலைமையேற்ற தொழிலாளி என்ற வகையில், தோட்டப்புறங்களில் தொழிலாளர்கள் நடத்திய பல்வேறு உரிமைப் போராட்டங்களில் உயிர்த்தியாகம் செய்த தொழிலாளர்கள் வரலாற்றை வெளிக்கொணர வேண்டுமென்ற உத்வேகம் என்னுள் இலட்சியமாக எழுந்ததால், போராட்டக் களங்களை நோக்கிப் புறப்பட்டேன்.



போராட்டக் காலத்தில் சக போராளிகளில் ஒருவராக போர்க் கொடி காட்டி நின்றவர்களில் சிலர் இன்னும் விழுப் புண்களோடும், எலும்பும் தோலுமாக காட்சி தந்து கொண்டிருக்கிறார்கள். அத்தகைய எமது மதிப்பிற்குரிய பெரியவர்களைச் சந்தித்து உரையாடி எடுத்த உண்மைச் சம்பவங்களை, போராட்ட வரலாற்றை உலகத்தின் முன் கொண்டுவர எடுத்த முயற்சி மேலும் சில விபரங்களை தெரிந்து கொள்ள முடியாது போனதால் தடைப் பட்டது. இருந்தும் மனம் தளர்ந்து விடாமல், பதினாறு போராட்டங்களின் விபரங்களையும் திரட்டி தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஏடான ''மாவலி'' பத்திரிகையில் பிரசுரிக்க ஏற்பாடு செய்தேன்.

அத்தோடு நின்று விடாமல் இதைப் புத்தக உருவில் கொண்டு வந்து மலையக எதிர்கால இளம் சந்ததியினர், எழுத்தாளர், கவிஞர், ஆய்வாளர்கள்பால் இந்த வரலாற்று உண்மையைத் தெளிவுபடுத்த எண்ணம் கொண்டேன். அந்த எண்ணத்தை எனது நெருங்கிய நண்பர் மாத்தளை கார்த்திகேசு அவர்களிடம் சொன்னபோது அவர் புன்முறுவலோடு, இது நம்ம வீட்டு வரலாறு அல்லவா, இதை புத்தகமாக வெளிக்கொணர வேண்டியது எமது கடமை என்று கூறியதோடு, அதைப் புத்தக உருவில் கொண்டு வரும் பொறுப்பையும் அவர் ஏற்றுக் கொண்டார்.

இதை வாசிக்கும்போது உங்களுக்குச் சிந்தனை துளிர் விடலாம். அதன் மூலம் இந்த வரலாற்றை மேலும் ஆழமாக ஆராய முற்பட்டு புதிய காவியம் படைக்கலாம். அதற்கு இந்தப் போராட்ட வரலாறு ஓர் உந்து சக்தியாக அமைந்தால் அதுவே எனக்கு மகிழ்ச்சியும், ஆத்ம திருப்தியையும் அளிக்கும் என நம்புகிறேன்.

அன்புடன்,

இல, 51/ 1, ஆற்றங்கரை வீதி,
களுதாவெல,
மாத்தளை.

**மாத்தளை-ரோகிணி**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## முக்கிய குறிப்பு

1940ம் ஆண்டு முதல் எழுதப்பட்ட இந்த வீரப் போராட்ட வரலாற்றில் ஒரு சிலரின் விபரங்களைப் பெற முடியாமல் போய் விட்டது. அவர்களின் குறிப்புகளும், விபரங்களும் இதில் அடங்கவில்லை.

இதன்கீழ் குறிப்பிடப்படும் விபரங்கள் வருமாறு;

- 1942ம் ஆண்டு புப்புரஸ்ஸ கந்தா தோட்டப் போராட்டத்தில் உயிர்நீத்த வேலாயுதம் வீராசாமி.
- 1953ம் ஆண்டு என்சாவெல தெபுவான தோட்டத்தில் உயிர்நீத்த எட்வின் நோனா.
- 1953ம் ஆண்டு நெபொட வேங்டேல் தோட்டப் போராட்டத்தில் உயிர்நீத்த வேதன்.
- 1958ம் ஆண்டு இரத்தினபுரி ஹேய்ஸ் குருப் போராட்டத்தில் உயிர்நீத்த நடேசன்.
- எட்டியாந்தொட்ட வெற்றிலையூர் பம்பேசும தோட்டப் போராட்டத்தில் உயிர்நீத்த மாமுண்டு.
- 1960ம் ஆண்டு றக்குவானை மூக்களாஞ்சேனை தோட்டப்போராட்டத்தில் உயிர்நீத்த தங்கவேலு.
- 1960ம் ஆண்டு நிட்டம்புவ மல்வான தோட்டப் போராட்டத்தில் உயிர்நீத்த திதம்பரம்.
- 1980ம் ஆண்டு கண்டி பல்லேகல தோட்டத்தில் உயிர்நீத்த பழனிவேல்.

இவர்கள் சம்பந்தமாக இவர்கள் சார்ந்த தொழிற் சங்கங்களோடு தொடர்பு கொண்டும் விபரங்கள் கிடைக்கவில்லை.

ஆனால் போராட்ட வரலாற்றில் இவர்களின் பெயர்களையும் இணைத்துக் கொண்டு மலைநாட்டுப் போராட்ட வரலாற்றைத் தொட்டுள்ளோம். இந்தத் தியாகிகளுக்கு தொழிற்சங்க ரீதியாக நினைவு கூராவிட்டாலும், இவர்கள் தொழிலாளர்கள் தங்கள் இதயங்களில் நிறைவான இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளார்கள். அந்த தியாகிகளை எதிர்கால சந்ததியினரும் நினைவு கூர்ந்து தங்களின் உரிமைப் போராட்டத்தை தொடங்க வேண்டும் என்பதே இந்த வரலாற்று நூலின் எதிர்பார்ப்பாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பதிப்புரை

எமது வெளியீடுகளில் இது ஏழாவது வெளியீடு. 'உரிமைப் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகள்' எனுந் தலைப்பிலான திருவாளர் மாத்தளை-ரோகிணி அவர்களுடைய இந்நூல் மலையக மக்களின் போராட்ட வரலாறு பற்றிப் பேசுகிறது. இவருடைய நாவல் ஒன்றும் எமது வெளியீடாக அடுத்து வரவுள்ளது. தமிழக-இலங்கை வாசகர்களின் ஆதரவு அடிப்படையில் எமது வெளியீடுகள் தொடரும்.

கொழும்பு குறிஞ்சி வெளியீட்டின் அனுசரணையுடன் இந்நூல் இளவழகன் பதிப்பக வெளியீடாகத் தமிழகத்தில் வெளி வருகிறது.

இந்நூலை நாம் வெளியிட அனுமதி அளித்த மாத்தளை-ரோகிணி அவர்களுக்கும், குறிஞ்சி வெளியீட்டின் உரிமையாளர் மாத்தளை கார்த்திகேசு அவர்கட்கும் எமது நன்றி! மற்றும் இவ்வெளியீட்டில் உதவிய ஸ்ரீ கோமதி அச்சக உரிமையாளர் திரு. சரவணகுமார், அச்சக ஊழியர்கள், கவிஞர் நெ. அ. பூபதி அனைவருக்கும் எமது நன்றி.

சென்னை-24

**வே. கருணாநிதி**
**இளவழகன் பதிப்பகம்**

# உரிமைப் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகள்

## மலையகப் போராட்டத் தியாகிகளின் வரலாறு

இலங்கையில் பெருந் தோட்டத் தொழிற்துறை ஆரம்பிக்கப்பட்டு சுமார் ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு மேலாகிறது. 1873-ம் ஆண்டு தேயிலை பயிர்செய்கை முதன் முதலாக மத்திய மாகாணத்தில் லூல்கந்தலா என்ற தோட்டத்தில் பயிரிடப்பட்டது. தேயிலைக்கு நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் பெருந்தோட்டத் தொழிற்துறையின் உற்பத்தியில் நேரடியாகப் பங்கு கொண்ட தொழிலாளர்களைச் சம்பந்தப்படுத்தாமல், துரைமார்களின் மனைவிமார்கள் பங்கு பற்றினார்கள்.

பெருந் தோட்டத் தொழிற்துறை ஆரம்பமும், இந்திய தொழிலாளர்கள் குடியேற்றமும் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது தேயிலை உற்பத்திக்கு முன்பு கோப்பி பயிர் செய்கை 1824 ம் ஆண்டு மத்திய மாகாணத்தில் சிங்காப்பிட்டிய என்ற இடத்தில் பயிரிடப்பட்டது. காலப் போக்கில் இவைகள் அழிந்து விட்டன.

கொக்கோ பயிர் செய்கை 1950க்கு முன்பு முதன் முதலில் மத்திய மாகாணத்தில் கம்பளை மரியாவத்தை தோட்டத்தில் பயிரிடப்பட்டது. ஏனைய பகுதிகளில் சீதோசன நிலைமைக்கேற்ப ரப்பர், தென்னை பயிரிடப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பட்டன. இத்துறையில் தன் ஊனையும், உயிரையும் மண்ணுக்கு அர்ப்பணித்து உற்பத்தி செய்தவர்கள் இந்திய வம்சாவளி தமிழ் தொழிலாளர்கள் என்பது வரலாறு கூறும் உண்மையாகும்.

பெருந் தோட்டத் தொழிற்துறை பிரித்தானியருக்கும் பிரித்தானிய கம்பெனிகளுக்குமே சொந்தமாக இருந்தன. இத்தோட்டங்களில் தொழில் புரிய அமர்த்தப்பட்ட தமிழ் தொழிலாளர்கள் இக்கம்பெனிகளின் அடக்குமுறைக்கு ஆளாகிப் பேச்சுரிமையும், மனிதவுரிமையும் மறுக்கப்பட்ட ஒருஜடமாக வாழ்க்கையை நடத்தினர். இந்த வாழ்க்கையை வரலாற்று வல்லுனர்கள் மனித வாழ்க்கைக்கு அப்பாற் பட்ட இயந்திர வாழ்க்கைக்கு ஒப்பிட்டுள்ளனர்.

1947ம் ஆண்டு இலங்கை நாடு பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற்ற பின்பும் மலையகப் பெருந்தோட்டத் தொழிற் துறையிலுள்ள மக்களின் சமூகப் பொருளாதார அம்சங்கள் பிரித்தானிய கம்பெனிகளிடமும், இலங்கை முதலாளிமார்களிடமுமே தங்கியிருந்தன. அரசியல் சுதந்திரத்தின் மகிமையை உணராத வண்ணம் இம்மக்கள் அடிமைப்படுத்தப்பட்டிருந்தனர். தோட்டங்களில் துரைமார்களின் அடக்கு முறையும், பெரிய கங்காணிகளின் தலைமைத்துவமும் இம்மக்களை சிறையில் வாழும் கைதிகளைப் போன்று நடத்தப்பயன்பட்டன.இக்காலகட்டத்தில் தோட்டத்தை விட்டு வெளியேற்றுதல், சவுக்கடி தண்டனைகள் நிறைந்திருந்தன. இதன் சோக வரலாற்றை எழுதியவர்கள், ‘ஆபிரிக்கா கண்டத்தில் இருள் சூழ்ந்த அடிமை நிலையினைப் பெருந்தோட்டத் தொழில் துறையிலுள்ள தொழிலாளர்கள் அனுபவித்து வருகின்றனர்.’ எனக் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த மக்களின் வரலாறு மண்ணோடு மண்ணாகக் கலந்தவை. செழுமைக்கு உரமாக்கப்பட்டவர்கள். அவர்களின் எலும்புக் கூடுகள் மனிதர்களுக்கு வழிகாட்டும்



பாதைகளாகக்காட்சியளித்தன. இலங்கையின் உண்மையான பொருளாதார வரலாற்றை ஆராயும் ஆய்வாளர்கள் இந்த மக்களின் எலும்புக் கூடுகளின் மேல் நின்றுதான் எழுத வேண்டும். அதுவே உண்மையான வரலாறாக இருக்க முடியும்.

இந்த நூற்றாண்டில் இந்த மக்களின் உழைப்பு, தியாகம் அனைத்தும் கூலிக்கு வந்த மக்களாக, கூலித் தொழிலாளர்கள் என்ற கருத்தைப் பிரதிபலிக்கச் செய்கின்றன. இந்த போலி தத்துவத்தைப் புள்ளி விபரத்தோடு மூழ்கடித்து, சமூகம் இந்த நாட்டின் மீதும், மண்ணின் மீதும் கொண்டுள்ள பற்றும், உயிர்ஜீவ நாடியாக இருக்கும் உழைப்பும் நாட்டின் சுதந்திரத்தைக் கட்டியெழுப்பு இம்மக்கள் ஆற்றிய பங்கும் பொன்னெழுத்துக்களால் வரலாற்றில் பதிக்கப்பட வேண்டியவையாகும்.

நாடு சுதந்திரம் பெற்றதோடு ஏற்பட்ட அரசியல் மாற்றம், தொழிற்சங்க நடவடிக்கைகள், விஸ்தரிக்கப் பட்டது. தொழிற்சங்கம் 1939ம் ஆண்டில் ஸ்தாபிக்கப் பட்டது. இதன் தாக்கம் பெருந் தோட்டத் தொழிற்துறை தொழிலாளர்களையும் ஈர்த்துக் கொண்டது. தொழிற் சங்கத்தை தொழிலாளர்கள் ஸ்தாபிக்கவும், உழைப்புக் கேற்ற ஊதியம், மனித ரீதியான உரிமைகள், அடக்கு முறைக்கெதிரான சிந்தனைகள் போராட்டங்களாக வெடித்தன.

இந்த ரீதியில் 1939ம் ஆண்டு தோட்டங்களில் தொழிற் சங்கத்தை ஸ்தாபித்து தொழிலாளர்களின் உரிமைக்குப் போர் முரசு கொட்டினர். இதற்கு எதிராகத் தோட்ட முதலாளிகள் பொலிஸாரின் துணை கொண்டு அடக்க முற்பட்டனர். இதில் பலியான தொழிலாளர்கள்தான் எத்தனை! எத்தனை! இப்போராட்டத்தில் தங்களின் உயிர்களைத் தியாகம் செய்த தொழிலாளர்களின் எண்ணிக்கை கணக்கில் அடங்கா.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்த வகையில் இலங்கை பெருந் தோட்டந் தொழிற் துறையில் எழுந்த போராட்டங்களையும், அப்போராட்டத்தில் உயிர்த் தியாகம் செய்த தொழிலாள தியாகிகளையும் இங்கே நாம் நினைவு கூர்வது சாலப் பொருந்தும்.

## 1940ம் ஆண்டின் சம்பள உயர்வுப் போராட்டம்

1940ம் ஆண்டு முதலாம் திகதி மத்திய மாகாண ஏவாயெட்டப் பகுதியிலுள்ள முல்லோயா தோட்டத் தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோரி போராட்டத்தை ஆரம்பித்தனர். இலங்கை பெருந் தோட்டத் தொழிற்துறை வரலாற்றில் முதலாவதாக எழுந்த போராட்டமும் இதுவேயாகும்.

இத்தோட்டத்தில் பதினாறு சதம் சம்பள உயர்வும், அத்தோடு ஆறு அம்சக் கோரிக்கைகளையும் முன்வைத்து பதின்மூன்று நாட்கள் போராட்டம் நடத்தினர். இப்போராட்டத்தை நசுக்க தோட்ட நிர்வாகம் எடுத்த சகல சாகசங்களையும் தொழிலாளர்கள் தவிடு பொடியாக்கினர் இப்போராட்டத்திற்கு ஈடுகொடுக்க முடியாத நிர்வாகம், பேச்சுவார்த்தைக்கு இணங்கியது. இப்பேச்சுவார்த்தையில் காணப்பட்ட இணக்கத்தின் பெருமிதத்தால் தொழிலாளர்கள் ஜனவரி பதினைந்தாம் திகதி வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு வேலைக்குத் திரும்பினர்.

பதினைந்தாம் திகதி 12.00 மணிக்கு தொழிலாளர்கள் பகல் உணவிற்காக வீட்டிற்கு வந்திருந்த நேரம், ஹங்குராங்கெத்த போலிஸ் சார்ஜண்ட் சுரவீர தலைமையில் போலிஸ் கோஷ்டி ஒன்று ஜீப்பில் வந்து தோட்டத்தில் இறங்கியது. இறங்கிய போலிஸ்காரர்கள் கைகளில் துப்பாக்கியுடன் லயத்தை (தொழிலாளர் குடியிருப்பு) நோக்கி ஓடினார்கள். அங்கே எதிர்ப்பட்ட தொழிலாளர்களிடம் "யார்டா தோட்டத்தில் சங்கம் சேர்த்து குழப்பம் விளைவிப்பவன்? எங்கே அந்தத் தலைவன்" என்று கூச்சலிட்டதோடு நில்லாமல், எதிர்ப்பட்ட தொழிலாளர்களை இழுத்துப் போட்டு அடித்துத் துன்புறுத்தினார்கள்.



இதனால் தோட்டம் அல்லோல கல்லோலப்பட்டது. என்னவோ ஏதோவென்றறிய தொழிலாளர்கள் ஒன்று திரண்டு விட்டார்கள். இதை தூரத்தே தேயிலை தொழிற்சாலையில் தொழில் செய்து கொண்டிருந்த கோவிந்தன் என்ற தொழிலாளி கண்டு விட்டான். முழுக்க முழுக்க உடல் உழைப்பால் தினவெடுத்த தோள்கள் கொண்ட கட்டிளங்காளையான கோவிந்தன் போலிஸார் தொழிலாளர்களைத் துன்புறுத்தும் செயல் கண்டு பொங்கி எழுந்தான். தேயிலை தொழிற்சாலையில் தேயிலை கொழுந்தைச் சேகரிக்கும் மட்டையைக் (சீலை தட்டும் மட்டை) கையில் எடுத்தவன் லயத்தை நோக்கி ஓடி வந்தான்.

இதை தூரத்தில் போலிஸ் ஜீப்பில் அமர்ந்த வண்ணம் பார்த்துக் கொண்டிருந்த போலிஸ் சார்ஜண்ட் சுரவீரவுக்கு "அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்பது போல கோவிந்தன் கையிலிருந்த சீலை தட்டும் கட்டை கண்ணுக்குப் பயங்கர ஆயுதமாகத் தென்பட்டது. இதைக் கண்டு அரண்டு போன சுரவீர தன்னை சுதாகரித்துக் கொண்டு தன்னைத் தாக்கவே வருகிறான் என்று ஜீப்பில் இருந்தவாறே துப்பாக்கியை எடுத்து எதிரே வந்த கோவிந்தனை குறிவைத்து விசையைத் தட்டிவிட, குண்டுகள் கோவிந்தனின் மார்பைத் துளைத்துக் கொண்டு சென்றது துடிதுடித்து மண்ணில் சாய்ந்தவன் அவ்விடத்திலேயே உயிர் துறந்தான்.

இச்செய்தி மலையகமெங்கும் காட்டுத் தீ போல் பரவியது. போலிஸ்காரர்களின் இந்த ஈனச் செயல் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களை உற்சாகப்படுத்தின, தொழிலாளர்களின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உணர்ச்சியைத் தூண்டியது. உரிமைப் போராட்டத்தின் மகிமையை ஊரறிய, உலகறியச் செய்து, தொழிலாளர் வரலாற்றில் உரிமைப் போராட்டத்தில் உயிரைப் பலி கொடுத்து, தியாக வரலாற்றினைத் தொடக்கி வைத்தான் கோவிந்தன்.

இத்தியாகியின் இறுதிக் கிரியையில் லங்கா சமசமாஜக் கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் முக்கிய தலைவர்கள் பங்கு கொண்டு பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் புடைசூழ ஈமக்கிரியைகள் நடத்தப்பட்டன. அன்றே இவ்வடக்கு முறைக்கு சாவு மணி அடிக்கப்பட்ட நாளாகும்.

பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு எதிரான வழக்கில் தொழிலாளர்களுக்கு வெற்றி கிடைத்தாலும், நிர்வாகத்தின் கையாளான குற்றவாளி சார்ஜண்ட் சுரவீரவுக்கு அரசு பதவி உயர்வும், சன்மானமும் வழங்கி கௌரவித்தது. இந்த வழக்கில் தியாகி கோவிந்தன் குடும்பத்திற்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று தீர்ப்புக் கூறப்பட்டது. இப்போராட்டத்தின் மூலம் பெருந்தோட்டத் தொழிற்துறையில் ஈடுபட்டுழைக்கும் தொழிலாளர்களின் நாட் சம்பளம் பதினாறு சதமாக உயர்த்தப்பட்டது. அத்தோடு தொழிலாளர்கள் தொழிற்சங்கம் அமைக்கும் உரிமையையும் பெற்றார்கள்.

தியாகி கோவிந்தனின் இளம் மனைவி பெயர் பொட்டு. ஒரே மகன் இராமையா. இவர்களுக்குத் தோட்டத்துரை ஸ்பாலி நீதிமன்ற தீர்ப்பை ஏற்று இந்தியாவுக்கு அழைத்துச் சென்று அவர்களுக்குக் காணியும், வீடும் கிடைக்க ஆவன செய்தார். அவரோடு வாழ்ந்த தொழிலாளர்களை நேரில் சந்தித்துக் கேட்டபோது இத்தகவலை வெளியிட்டனர். இப்போராட்டமே மலையகத்தின் தொழிலாளர்களின் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல உந்து சக்தியாக அமைந்தது.



## 1946ம் ஆண்டின் காணி சுவீகரிப்புப் போராட்டம்

1939ம் ஆண்டின் பின்பு இந்திய துவேசம், தொழிலாளர்கள் வெளியேற்றம் போன்ற நடவடிக்கைகளை இலங்கையின் சிங்கள அரசியல் தலைவர்கள் புகுத்தினர். இந்திய தொழிலாளர்கள் ஹாபர், அரசாங்கத்துறை, ரெயில்வே போன்ற சேவைகளிலிருந்து வெளியேற்றப்பட்டனர். இலங்கை தொழிலாளர்கள் நியமனம் பெற வேண்டும் என்ற நோக்கில் இந்திய துவேசப் பிரச்சாரம் ஆரம்பிக்கப்பட்டது.

இதே போன்று இந்தியர்கள் அரசாங்கக் காணிகளில் குடியேறுவதையும், விவசாயம் செய்வதையும் தடை செய்யும் சட்டம் 1942ம் ஆண்டில் கொண்டுவரப்பட்டது. இந்திய மக்களின் காணிகளைப் பறிமுதல் செய்யும் வேலையை முதன் முதலாக 1942ம் ஆண்டு நுவரெலியா—கந்தப்பல பகுதியில் ஆரம்பித்தனர். இதன் பயனாக அங்கு அரசாங்கக் காணிகளில் விவசாயம் செய்த இந்திய வம்சாவளி மக்கள் வெளியேற்றப்பட்டு, அக்காணிகளில் உள்ளூர் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர்.

1946ம் ஆண்டு கிராம விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் பெருந்தோட்டக் காணிகளை சுவீகரித்து கிராம மக்களுக்கு பகிர்ந்தளிக்கும் திட்டத்தையும் கொண்டு வந்தார்கள். அன்று ஆரம்பிக்கப்பட்ட இந்த கிராம விஸ்தரிப்புத் திட்டமும், இந்திய வம்சாவளி மக்களை அச்சுறுத்தி நசுக்கி வெளியேற்றும் திட்டமும் இன்று வரை ஆட்சிகள் மாறினாலும், ஆட்கள் மாறினாலும் தொடர்கதையாகவே இருக்கின்றன.

1946ம் ஆண்டு பெருந் தோட்டக் காணிகளை சுவீகரிக்கும் திட்டத்தை எட்டியாந்தொட்டை வெற்றிலையூர் புவக்கோபிட்டிய பகுதியைச் சேர்ந்த உருளவள்ளி தோட்டத்தில் ஆரம்பித்தனர். இந்த தோட்டத்தில் வாழ்ந்த 500 தொழிலாளர்களும், அவர்களின் பிள்ளைகளும் இதனால் பெரும் பாதிப்பை எதிர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நோக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதை உணர்ந்து தொழிலாளர்கள் காணி சுவீகரிப்பை எதிர்த்து போர் முரசு கொட்டினர்.

இக்காலத்தில் பாராளுமன்ற ஆட்சி முறை இல்லாது 'ஸ்டேட்கவுன்சில் ஆட்சி முறை இருந்தது. வெள்ளையர்கள் நாட்டை பரிபாலனம் செய்த காலம். இந்த ஸ்டேட்கவுன்சில் காணி அமைச்சராக நாட்டில் முதலாவது பிரதமர் பதவியை ஏற்ற டி. எஸ். சேனாநாயக்க இருந்தார். அவரின் ஆணைப்படிதான் உருளவள்ளி தோட்டக் காணியை சுவீகரித்து தொழிலாளர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தொழிலாளர்கள் தோட்டத்தைவிட்டு வெளியேற மறுப்புத் தெரிவித்து வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அரசாங்கம் நீதிமன்றத்தின் மூலமாக அத்து மீறி குடியேற்றம் என்ற சட்டத்தின் கீழ் அவர்களை வெளியேற்ற உத்தரவு பெற்று அவைகள் தொழிலாளர் அறைக் கதவுகளில் ஒட்டப்பட்டது. இத்தொழிலாளர்களின் போராட்டத்தை ஆதரித்து களனிவெளி, கேகாலை, எட்டியாந்தொட்டை, அவிசாவெல பகுதியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான தொழிலாளர்களும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கினர்.

இப்போராட்டத்திற்குத் தொழிலாளர்களால் மதிக்கப்பட்ட, நன்மதிப்புள்ள இலங்கை—இந்தியக் காங்கிரஸ் தலைவர் கே. ஜி. எஸ். நாயர் தலைமை தாங்கினார். அரசாங்கத்தின் இந்த இனவாத நடவடிக்கையை கண்டித்து தொழிலாளர்கள் ஒரு மாதத்திற்கு மேலாக போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

போராட்டத்தின் உஸ்ணத்தை உணர்ந்த அரசாங்கம் உருளவள்ளி தோட்டத்திற்குள் தொழிற்சங்கத்தலைவர்கள் நுழைவதைத் தடை செய்தனர். தொழிலாளர்கள் அதையும் மீறி தொழிற்சங்கத் தலைவர்களைச் சந்திக்க முயன்றதால்



தொழிலாளர்களின் குடியிருப்புகளைச் சுற்றி முட்கம்பி வேலி போட்டு தடுத்தனர். குடி தண்ணீர், கக்கூஸ் வசதிகள் போன்றவற்றையும் தடுத்தனர். உயிர்வாழ உணவுப் பொருட்கள் பெற முடியாத நிலைமையையும் அரசாங்கம் தோற்றுவித்தது. அரசாங்க அதிகாரிகளின் காட்டுமிராண்டித் தனத்தையும் எதிர்த்து தொழிலாளர்கள் போராட்டத்தை நடத்தினார்கள்.

அரசாங்கம் அசைந்து கொடுக்காததன் காரணமாக அட்டன் மாநிலத்தைச் சேர்ந்த 75,000 தொழிலாளர்கள் இலங்கை—இந்திய காங்கிரஸின் முக்கிய தொழிற்சங்கத் தலைவரான ஸி. வி வேலுப்பிள்ளை அவர்கள் தலைமையில் உருளவள்ளி தோட்டப் போராட்டத்தை முடுக்கி விட்டனர். 21 நாட்கள் நடைபெற்ற மாபெரும் போராட்டத்தை உஸ்ணபடுத்த மலையக நாடோடிப் பாடகர்கள் உருளவள்ளி தோட்டத் தொழிலாளர்களின் கொடுமைகளைப் பாடல்களாக இயற்றி அச்சிட்டு மலையகமெங்கும் எதிரொலிக்கச் செய்தனர். பிரச்சார சாதனங்கள் இல்லாத காலத்தில் மலைநாட்டுப் பாடகர்கள்தோட்டங்களில் நடக்கும் அட்டூழியங்களைப் பாடல்களாக இயற்றி மக்களை உற்சாகப்படுத்தி வந்தனர்.

இத்தனை கொடுமைகளையும் கண்டு அஞ்சாத உருளவள்ளி தோட்டத் தொழிலாளர்களை வெளியேற்ற முடியாத இக்கட்டான நிலைமை அரசாங்கத்திற்குத் தோன்றியது. அரசாங்கம் தொழிலாளர்கள் மீது (கிரிமினல் ட்ரஸ்பஸ்) அத்துமீறிகுடியேற்றம் என்று வழக்குதொடுத்தது. இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் சட்ட விரோதக் குடியேற்றம் என்பதை உறுதிப்படுத்தி தீர்ப்புக் கூறியதோடு, தொழிலாளர்களை உடனடியாகத் தோட்டத்தைவிட்டு வெளியேற வேண்டுமென்றும் உத்தரவு பிறப்பித்தது.

www.tamilarangam.net



இத்தீர்ப்பை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்யப்பட்டது. அத்தோடு, தொழிலாளர்களையும், அப் பகுதியில் வேறு தோட்டங்களில் குடியேற்ற ஏற்பாடு செய்யப்பட்டது. சுப்ரீம் கோர்ட்டில் விசாரணை நடத்தப் பட்டது. மாவட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்றுக் கொண்டு அதன்படி தீர்ப்பு வழங்கியது.

சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை எதிர்த்து லண்டன் பிரிவு கவுன்சிலுக்கு தொழிற்சங்கம் அப்பீல் செய்தது. இலங்கைத் தொழிற்சங்க வரலாற்றில் முதன் முதலாகத் தொழிலாளர் சார்பாக லண்டன் பிரிவு கவுன்ஸிலுக்குக் கொண்டு செல்லப் பட்ட வழக்கு இதுவாகும். இந்த மேன் முறையீட்டை பரிசீலனை செய்த பிரிவுகவுன்ஸில் தலைவர் தனது தீர்ப்பில் தோட்டத் தொழிலாளர்கள் மீது கிரிமினல் ட்ரஸ்பஸ் வழக்கு தாக்கல் செய்யமுடியாது, சிவில் வழக்குதான் தாக்கல் செய்ய முடியுமென்று தீர்ப்பு வழங்கினார்.

இத்தீர்ப்பு மீண்டும் தொழிலாளர்களை உருளவள்ளி தோட்டத்தில் குடியேற்ற உதவாவிட்டாலும், இக்காலக் கட்டத்தில் பெருந்தோட்டத் தொழிற்துறை தொழிலாளர் கள் மீது மாவட்ட நீதி மன்றங்களில் தாக்கல் செய்திருந்த ஆயிரக்கணக்கான கிரிமினல்ட்ரஸ்பஸ் வழக்கிலிருந்து விடுதலை பெற்றுக் கொடுக்க பேருதவியாக இருந்தது. இந்த வெற்றி உருளவள்ளி தோட்டத் தொழிலாளர்கள் நடத்திய உயிர்வதைப் போராட்டத்தின் மூலமும், இப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்த உறுதியாகப் போராடிய லட்சக் கணக்கான தொழிலாளர்களின் மூலமும் கிடைத்த வெற்றியாகும்.

இன்று பெருந்தோட்டக் காணிகளை சுவீகரித்து கிராம விவசாயிகளுக்கு வழங்கப்படுவதை எதிர்த்து 1946ம் ஆண்டே தொழிலாளர்கள் ஒன்று திரண்டு போராட்டம், நடத்தினர். அன்று தொழிலாளர்கள் தொடுத்த போராட்டம், இன்று வரைதொடர்கின்றது. அரசாங்கமோ சட்டத்தின் வாயிலாகத்தோட்டக் காணிகளை அபிவிருத்தி



திட்டமென்ற பெயரால் தொடர்ந்து சுவீகரித்து அக்காணி களில் கிராம சிங்கள விவசாயிகளைக் குடியேற்றி இந்திய வம்சாவளி மக்களின் கூட்டுப் பலத்தைப் பாதிப்புடையச் செய்து வந்துள்ளது.

நாட்டிலுள்ள பல பகுதிகளில் இத்தகைய காணி சுவீகரிப்புத் திட்டத்தின் கீழ் காணிகளை சுவீகரித்து தொழி லாளர்களை வெளியேற்றி வருகின்றனர். இதை எதிர்க்க வேண்டிய தொழிற்சங்க சக்திகள் அரசுக்கு ஆலவட்டம் வீசுவதும், நட்டஈடு தருகின்றோம் என்றும், வேறு இடத் திற்கு குடிபெயர்வுக்கு உதவியும் செய்வோம் என்றும் ஆசை வார்த்தைகள் மூலம் தொழிலாளர்களின் போராட்ட உணர்வையும், சக்தியையும் பலவீனப்படுத்தி வருகின்றனர். இன்று மத்திய மாகாணத்தில்கூட, பெருந்தோட்டத் தொழிற்துறையில் தொழிலாளர்களின் பலம் குறைந்து கிராம மக்களின் குடியேற்றம் அதிகரித்து வருகின்றது. இது எதிர்காலத்தில் ஒரு சுய உரிமைப் போராட்டத்திற்கு வழி வகுக்கும் பாரிய பரிமாணங்கள் மலையகத்தில் இப்போதே அங்குமிங்கும் கிளர்ந்தெழ ஆரம்பித்துள்ளன என்பதை உணர முடிகிறது.

## 1950ம் ஆண்டில் அன்றாடப் பிரச்சினைகளை வென்றெடுக்க தோட்டக் கமிட்டித் தலைவர் நடத்திய போராட்டம்

தோட்டத் தொழிலாளர்கள் தங்களின் உரிமைகளைப் பெற எத்தனையோ போராட்டங்களை நடத்தியும். உயிர்த் தியாகம் செய்துமிருக்கிறார்கள். அந்த வரிசையில் தாலவாக்கெல்ல டெவன் தோட்டப் போராட்டம், தோட்டக் கமிட்டித் தலைவனையே பழி கொண்ட போராட்டமாகும்.

ஆம். அப்போது தோட்டங்கள் தனியாருக்குச் சொந்த மாக இருந்த காலம். தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டி ஏப்பம்விட்ட தோட்ட முதலாளிமார்கள், அவர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களின் உழைப்பை மாத்திரம் பெறுவதில்தான் அக்கறை கொண்டார்களே அன்றி, அத்தொழிலாளர்களை மனிதர்களாக மதிக்கவோ, அவர்களின் அன்றாடப் பிரச்சினைகளைக்கூட தீர்த்து வைக்கவோ முற்படவில்லை.

தோட்ட முதலாளிமார்களின் இந்த அநீதியின் விளைவாகத் தொழிலாளர்கள் வாழ்வில் நாளுக்கு நாள்பிரச்சினைகள் ஏற்பட்டு, அதன் நெருக்கடியால் அவர்கள் அல்லலுறுவதைக் கண்டு பொங்கி எழுந்தான் அத்தோட்டத்தைச் சேர்ந்த வைத்திலிங்கம் என்ற இளைஞன். இளம் காளையான இவர் தோட்டத்தில் தொழிற்சங்கத்தை ஸ்தாபித்து தொழிலாளர்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முற்பட்டான்.

அத்தோட்ட மக்களின் பிரச்சினைகளோ சாதாரணமானவைகளாகும். தொழிலாளர்களை மனிதர்களாக மதித்து தீர்க்க வேண்டிய பிரச்சினைகளாகும். அவர்கள் முன்வைத்த ஆறு கோரிக்கைகள் பின்வருமாறு:

1. காலை ஆறு மணி முதல் மாலை ஆறு மணிவரை தொழில் செய்ய முடியாது. காலை 7-30க்கு தொழில் ஆரம்பித்து மாலை 4-30க்கு முடிக்க வேண்டும்.
2. தொழிலாளர்கள் குடியிருக்கும் லயத்தின் தகரக் கூரைகள் பழுதடைந்திருப்பதால், மழைக் காலங்களில் வீடுகள் ஒழுகி தொழிலாளர்கள் அவதிப்படுவதால் கூரைத் தகரம் மாற்றப்பட வேண்டும்.
3. தொழில் செய்வதற்கு ஏற்ற வயதை அடைந்த பிள்ளைகளை பெயர் பதிந்து தொழில் வழங்க வேண்டும்.
4. குடிநீர் வசதியில்லாது தொழிலாளர்கள் சிரமப்படுவதால், குடிநீர் வசதி செய்து கொடுக்க வேண்டும். இத்தோட்டத்தில் திரும்பிய பக்கமெல்லாம் தண்ணீர் ஊற்றெடுப்பதால் இந்த பிரச்சினையைத் தீர்ப்பதில் சிரமம் இருக்காது. ஆகவே இதை உடனடியாகச் சீர் செய்து குடிநீர் வசதி செய்து கொடுக்க வேண்டும்
5. மலசலக் கூடங்கள் லயன்களுக்கு வீடுகள் அடிப்படையில் கட்டிக் கொடுக்கப்பட வேண்டும்.
6. குழந்தைகளுக்குப் பால் கொடுக்கும் தாய்மார்களை காலை 10-00 மணிக்கும், மாலை 3-00 மணிக்கும் அனுப்ப வேண்டும்



மேற்கண்ட பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு தோட்ட நிர்வாகத்தோடு பேச்சுவார்த்தை நடத்த முற்பட்ட போது, நிர்வாகம் பேச்சு வார்த்தை நடத்த மறுத்து விட்டதால், இப்பிரச்சினைகளைத்தொழில் இலாக்கா மூலம் தீர்ப்பதென்று தோட்டக் கமிட்டி செய்த முடிவின்படி, இப்பிரச்சினைகள் தொழில் இலாக்காவுக்கு ஒப்படைக்கப்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களை வைத்திலிங்கம்தான் தூண்டி விடுகிறான் என்ற குற்றச்சாட்டின் பேரில் இவரின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி பல அச்சுறுத்தல்களைச் செய்து வந்தது. எதற்கும் அடிபணியாத அஞ்சா நெஞ்சமும், உறுதியும் கொண்ட வைத்திலிங்கம் தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுக்கத் தொடர்ந்தும் செயல்பட்டார்.

இதனால் ஆத்திரமடைந்த நிர்வாகம் ஆளையே தீர்த்துக் கட்ட திட்டமிட்டு, சில கைக் கூலிகளான பாவாடை மாரிமுத்து, பாவாடை இராமலிங்கம், பாவாடை செல்வன் என்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்களைத் தன்வசப்படுத்தி அவர்களுக்கு ஆசை வார்த்தைகளைக் கூறி வைத்திலிங்கத்தை எப்படியாவது தீர்த்துக் கட்டிவிட வேண்டுமென்று திட்டம் தீட்டியது. அவர்கள் திட்டமிட்ட நாளும் வந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆம்... 1950ஆம் ஆண்டு மார்ச் 2ஆம் திகதி இரவு ஒன்பது, பத்து மணிக்கிடையில் 15ஆம் இலக்க லயன் காம்பிராவில் வசித்து வந்த வைத்திலிங்கம் இரவு உணவை முடித்துக் கொண்டு படுக்கைக்குத் தயாரான போது, கைக் கூலிகள் வீட்டைத் தட்டி, தோட்டத்துரை உன்னை அழைத்து வரும்படி சொல்கிறார் என்று சொன்னதும், சூதுவாது அறியாத வைத்திலிங்கம், அடுத்து என்ன நடக்கப் போகிறது என்பதை உணராது வந்தவர்களுடன் தோட்டத் துரை பங்களாவை நோக்கிப் புறப்பட்டுச் சென்றான்.

ஏற்கனவே வகுத்திருந்த திட்டப்படி,பங்களா செல்லும் வழியில் மற்ற இரண்டு பேரும் ஆயுதங்களோடு தேயிலை செடியின் மறைவில் ஒளிந்திருந்தனர். கடுமையாக இருள் சூழ்ந்த நேரம். ஒரு திருப்பத்தில் திரும்பும்போது ஒளிந் திருந்தவர்கள் வெளிப்பட்டு கையிலிருந்த ஆயுதத்தால் வைத்திலிங்கத்தைத் தாக்கினர். வைத்திலிங்கம் அவ்விடத் திலேயே உயிர் நீத்தான்.

வீட்டைவிட்டுச் சென்றவனைக் காணவில்லையே என குடும்பத்திலுள்ளவர்கள் எதிர்பார்த்துக் காத்திருந்தனர். குறிப்பிட்ட நேரத்திற்குள்ளும் இவர் வராததால், அவரைத் தேடிப் போனார்கள். வழியில் இரத்த வெள்ளத்தில் உயிரற்றப் பிரேதமாக வைத்திலிங்கம் கிடக்கக் கண்டார்கள்.

மறுநாள் விடிந்ததும் விடியாததுமாகத் தோட்டம் முழுவதுமே செய்தி பரவி விட்டது தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லாமல், தமது தலைவரின் நிலையறிந்து கண்ணீர்விட்டுக் கதறினார்கள்.

இத்தகவல் உடனடியாக பொலிசிற்குத் தெரிவிக்கப் பட்டது. தோட்டத்திற்கு வந்த பொலிசார் சந்தேக நபர் களைக் கைது செய்தனர். மரண விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. மரண விசாரணை நடத்திய அதிகாரி ஆயுதங்களால் தாக்கப்பட்டு மரணமடைந்துள்ளார் என்று



தீர்ப்புக் கூறினார்கள். சந்தேக நபர்கள் மீது போலீசார் வழக்குத் தொடர்ந்தனர். இக்கொலை வழக்கு அட்டன் நீதிமன்றத்தில் நடந்தது. மரணமடைந்த வைத்திலிங் கத்தின் சார்பில் திரு அனில் முணசிங்க, திரு. ராஜகாரிய, திரு. கனகரட்ணம் ஆகியோர் ஆஜராகி வாதாடினர்.

இக்கொலை வழக்கு அட்டனிலிருந்து நுவரெலியாவுக்கு மாற்றப்பட்டு பின்பு கண்டி உயர்நீதிமன்றத்தில் இவ்வழக்கு நடைபெற்றது. எதிரிகள் சார்பில் திரு. ஜி.ஜி. பொன்னம் பலம், திரு. செல்லதுரை, திரு. லெப்ரோய் ஆகியோர் ஆஜராகி வாதாடினார்கள் இறுதியில் பண பலத்தாலும், உண்மையை நேரில் கண்ட சாட்சிகள் ஏதும் இல்லாத தாலும் எதிரிகள் வழக்கில் வெற்றி பெற்றனர்.

அமரர் வைத்திலிங்கம் முனியாண்டி, நல்லம்மாள் தம்பதிகளின் புதல்வன். 24 வயதுடைய இவர், கந்தையா, வீராயி, தங்கம்மாள் ஆகியோரின் சகோதரருமாவார்.

இவரின் இறுதிக் கிரியைகளில் லங்கா சமசமாஜ கட்சித் தலைவர் கொல்வின் ஆர். டி. சில்வா உட்பட, பல்வேறு தொழிற்சங்கத் தலைவர்களும் கலந்து கொண்டார்கள்.

அமரர் வைத்திலிங்கம் சுறுசுறுப்பும், உறுதியும் மிக்க தோட்டக் கமிட்டித் தலைவராகவும், தொழிலாளர்களின் தோழனாகவும் திகழ்ந்து தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுக்க இறுதிவரை போராடியவர். முதலாளித்துவ இரும்புப் பிடிக்குள் சிக்காமல் போராடிய இந்த தியாகத் தலைவனை முதலாளித்துவவாதிகள் கைக் கூலிகளைக் கொண்டு, நட்பு, பாசம் போன்ற பிணைப்பால் சிக்க வைத்து உயிரைப் பலி கொண்டு விட்டனர்,

தோட்டக் கமிட்டித் தலைவனை, போராட்ட வீரனை, தோட்ட நிர்வாகம் பலி கொண்டு விட்டாலும், தொழிலாளர்களின் போராட்டம் ஓய்ந்து விடவில்லை. மேலும் மேலும் தொழிலாளர்கள் உறுதியுடன் உரிமைகளை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வென்றெடுக்கப் போராடி அடக்கு முறையை அடிபணிய வைத்து உரிமைகளை வென்றெடுக்க தொடர்ந்தும் போராடினார்கள்.

தொழிற்சங்க சரித்திரத்தில் தொழிலாளர்களின் உரிமைக்குப் போராடி உயிரை பணயம் வைத்த தியாகி என்ற புனித நாமத்தைப் பெற்று தொழிலாளர்கள் உள்ளங்களில் நிறைவுடன் வாழ்கின்றார் அமரர் வைத்திலிங்கம்.

வாழ்க அன்னாரின் நாமம்.

**1953ம் ஆண்டில் தொழிற்சங்கத்தை ஸ்தாபிப்பதில் எழுந்த போராட்டம்**

கம்பெனி தோட்டங்களைவிட தனியார் தோட்டங்களில் தொழிற்சங்கத்தை ஆரம்பிப்பதென்றால், அது மரணப் போராட்டமாகும். இத்தகைய போராட்டங்களில் ஒன்றுதான் சாமிமலையைச் சேர்ந்த கல்தோணி தோட்டப் போராட்டம்.

கல்தோணி தோட்டம் (மீரியா கோட்டை) டொனல் ரணவீரவுக்குச்சொந்தமானதோட்டமாகும். இத்தோட்டத்தில் பெரிய கங்காணி ஆட்சியும் நிலவியது. இத்தோட்டத்தில் தொழிலாளர்கள் அடிமைகளாக, அடக்கி, ஒடுக்கி பயமுறுத்தப்பட்டு வந்தனர். தோட்ட நிர்வாகத்தின் கெடுபிடிகளுக்குப் பெரிய கங்காணியும் உடந்தையாக இருந்தார்.

இந்த கெடுபிடிக்கும், அடக்கு முறைக்கும் முடிவு கட்டி தொழிலாளர்களுக்கு விமோசனம் ஏற்படுத்த வேண்டுமென்று அதிமுக்கிய தொழிலாளர்கள் ஒன்றுகூடி தோட்டத்தில் தொழிற்சங்கத்தை ஸ்தாபிக்க முன்வந்து உழைத்தனர். இதை உளவாளி மூலம் அறிந்த பெரிய கங்காணி தொழிற்சங்கம் ஸ்தாபிக்க முயன்ற தொழிலாளர்கள்மீது பலகுற்றச்



சாட்டுகளை சுமத்தி தோட்ட நிர்வாகத்தின் தண்டனைக்கு ஆளாக்கி வந்தார்.

இக்காலக் கட்டத்தில் தொழிற்சங்கக் கூட்டங்கள், மினிட் எழுதுவது, தீர்மானம் எடுப்பது போன்ற நடவடிக்கைகளை லயங்களில் செய்ய முடியாதிருந்தது. அத்தகைய கெடுபிடிகளும் சூழ்ந்திருந்தன. தோட்டக் கமிட்டி முக்கியஸ்தர்கள் தனித் தனியாகச்சென்று அடர்ந்து வளர்ந்த தேயிலை செடிகள் நிறைந்த இடங்களில் இரவில் ஒன்று கூடி புட்டிலாம்பு வைத்துக் கொண்டு கூட்டம் நடத்தினர். தீர்மானங்கள் எடுத்தனர். மினிட் புத்தகம் எழுதினர்.

அத்தகைய கெடுபிடிகளுக்கு மத்தியில் தொழிற்சங்கத்தை தோட்டத்தில் ஸ்தாபித்து தொழிலாளர்களின் உரிமைகளுக்குக் குரல் எழுப்பினர். இதைச் சகிக்காத தோட்டநிர்வாகம் பெரிய கங்காணியின் உதவியை நாடியது. எந்த வகையிலும் தொழிலாளர்களையும், தொழிற்சங்கங்களையும், நசுக்க முடியாது என்பதை அறிந்த தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களை போலிஸின் வலையில் சிக்கிவிட, பெரிய கங்காணியின் ஆலோசனைகளோடு காரியத்தில் இறங்கியது.

ஒருநாள் காலை தொழிற்சங்க முக்கியஸ்தர்களில் ஒருவரான முத்துலிங்கம் என்பவருடைய ஆடு ஒன்று பட்டியைவிட்டு வெளியில் வந்து தேயிலை மலையில் புல் மேய்ந்தது இதைக் கண்ட காவல்காரன் பெரிய கங்காணியிடம் போய் முத்துலிங்கம் ஆடுகளை வேண்டுமென்றே தேயிலைச் செடிகளில் மேயவிட்டான். இதனால் தேயிலைச் செடிகள் நாசமாக்கப்பட்டு விட்டதாகத் தோட்ட நிர்வாகத்திடம் புகார் செய்தான்.

உடனடியாக அன்று மாலை தோட்ட நிர்வாகம் விசாரணைக்கு ஏற்பாடு செய்து முத்துலிங்கத்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அழைத்திருந்தது. சம்பந்தப்பட்டவருடன் தோட்டக் கமிட்டி உறுப்பினர்களும் தோட்டக் காரியாலயத்தில் நடைபெற்ற விசாரணையில் ஆஜரானார்கள். இதை விரும்பாத நிர்வாகம் விசாரணையை நடத்தாமல், முத்துலிங்கத்திற்கு இன்றிலிருந்து வேலையில்லை என்று கூறிவிட்டது. துரைமார்கள் கோபத்துடன் பங்களாவை நோக்கிச் சென்றுவிட்டனர்.

அன்று மாலை நிர்வாகம் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஒரு ஜீப்பில் போலிஸ் கோஸ்டி ஒன்று தோட்ட பங்களா விற்கு வந்து இரவு 12-00 மணிவரை பங்களாவிலிருந்த போலிஸ் கோஸ்டி முத்துலிங்கம் குடியிருந்த லயத்தை நோக்கிச் சென்றது. உறங்கிக் கொண்டிருந்த முத்துலிங்கத் தின் வீட்டுக் கதவைத் தட்டி வெளியில் வரும்படி கூப்பிட்டனர். இத்தோடு, பக்கத்து வீடுகளான ராமையா, சிங்காரம், பொறவி, கலியப்பெருமாள் ஆகியோரையும் வெளியே கொண்டு வந்தனர். வெளியே வந்த இவர்களை போலிசார் அடித்து துன்புறுத்தினர். இதைக் கண்டு ஏனைய தொழிலாளர்கள் பீதியுடன் சத்தமிடவே, தொழிலாளர்கள் அங்கு திரண்டனர். நிலைமை மோசமாவதைக் கண்ட போலிசார் மேற்குறிப்பிட்ட நபர் களை விசாரணைக்கு மஸ்கெலியா போலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். இந்த விசயத்தை தொழிற்சங்கக் காரியாலயத்தில் முறைப்பாடு செய்ய முக்கியஸ்தர்கள் இரவோடு இரவாக அட்டன் சென்று விட்டனர்.

மறுநாள் வழக்கமாக தொழிலாளர்கள் அமைதியாக தொழில் செய்து கொண்டிருந்தபோது, அவர்கள் வேலை செய்யும் இடத்தை நோக்கி போலிசார் வந்தனர். தோட்டத் தில் குழப்பம் விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் இருபத்திநான்கு தொழிலாளர்களைத் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்கள் நேரடியாக நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர். தொழிலாளர்கள் மூலமாக விசயத்தைக் கேள்விப்பட்ட வி. கே. வெள்ளையன் அவர்கள்



சட்டத்தரணியுடன் நீதிமன்றத்திற்குச் சென்று இருபத்தி நான்கு தொழிலாளர்களையும் பிணையில் எடுக்க ஏற்பாடு செய்தார். இத்தோட்டத் தொழிலாளர்கள் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்களாகவே இருந் தார்கள்.

மறுதினம் இருபத்திநான்கு தொழிலாளர்களையும் தோட்ட நிர்வாகம் வேலை நிறுத்தம் செய்தது. இந்த இருபத்திநான்கு தொழிலாளர்களுக்கும் தொழில் வழங்கு மாறு தோட்டக் கமிட்டியினர் நிர்வாகத்தைக் கேட்டுக் கொண்டனர். ஆனால் தோட்ட நிர்வாகம் தொழில் வழங்க மறுத்ததோடு, தோட்டத்தில் தொழிற்சங்கம் இருந்தால் அனைவரையும் சுட்டுப் பொசுக்கி விடுவோ மென்று தொழிலாளர்களைப் பயமுறுத்தினர்.

இத்தகைய செயலையும், அடக்கு முறையையும் ஆட்சேபித்து 1953ஆம் ஆண்டு நவம்பர் மாத நடுப்பகுதியில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடு பட்டனர். இப்போராட்டம் பதினாறு நாட்கள் தொடர்ந்தன. வேலை நிறுத்தப் போராட்டத்தை முறியடிக்க தோட்ட நிர்வாகம் பெரிய கங்காணியார் உதவி யுடன் வெளியிலிருந்து நாற்பது தொழிலாளர்களை தோட்டத்தில் தொழில் செய்ய அனுமதித்தது. இவர் களுக்கு பாதுகாவலாக காவல்காரர்களும் துப்பாக்கிகளுடன் நிறுத்தப்பட்டனர். தோட்ட அதிகாரியும் பாதுகாப்புடன் வேலைத்தளம் சென்றுவர ஏற்பாடு செய்து கொண்டார்.

தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தை முறியடிக்க நிர்வாகம் எடுத்த சகல முயற்சிகளும் முறியடிக் கப்பட்டன. வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு எதிராக ஈடுபட்டவர்களில் சில்லறை கங்காணியும் ஒருவர். இவர் வேலை நேரத்தின்போது தேநீர் அருந்த லயத்தை நோக்கிச் சென்றார். தேநீர் அருந்திவிட்டுத் திரும்பும்போது, வழியில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செல்லம்மா என்ற பெண் நிற்கக் கண்டு "வேலைக்குப் போகாமல் ஏன் வீணாக வீட்டிலிருக்கிறீர்கள்" என்று கங்காணி கேட்க, செல்லம்மா என்ற பெண் கங்காணியை வாய்க்கு வந்தபடியெல்லாம் ஏச "ஐயோ என்னை எல்லோரும் அடிக்கிறார்களே" என்று கங்காணி சத்தம் போட, சத்தத்தைக் கேட்ட ஏனைய தொழிலாளர்கள் என்ன என்று அறிய அவ்விடத்தில் கூடி விட்டனர். இதை வேலைத் தளத்திலுள்ள காவல்காரர்கள் கண்டு துப்பாக்கியுடன் ஓடோடி வந்து கேட்பாரற்ற நிலையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இத்துப்பாக்கிப் பிரயோகத்தில் பதினேழு தொழிலாளர்கள் காயமுற்றனர். உடனடியாக இவர்கள் மஸ்கெலியா அரசாங்க மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். கண்டியில் வைத்து பி. வெள்ளையன் காலமானார். அவரின் பிரேதத்தை தோட்டத்திற்கு கொண்டு வந்து அடக்கம் செய்ய நிர்வாகம் மறுப்புத் தெரிவித்தது

தொழிலாளர்கள் அட்டன் சென்று வீ.கே. வெள்ளையன் அவர்களிடம் முறையிட, அவர் இவ்விடயத்தில் உடனடியாகத் தலையிட்டு நடவடிக்கை எடுத்ததன் பயனாக, பிரேதம் தோட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பெருந்திரளான தொழிலாளர்கள் இச்செய்தி கேட்டு வெள்ளையனுக்கு அஞ்சலி செலுத்த கல்தோணி தோட்டத்தில் (மீறியா கோட்டை) கூடி விட்டனர். தொழிற்சங்கத் தலைவர்கள் புடை சூழ வீ.கே. வெள்ளையன் அவர்கள் தலைமையில் மறைந்த பி. வெள்ளையனின் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

தோட்ட நிர்வாகத்திற்கெதிராகத் தொழிலாளர்கள் அட்டன் கோர்ட்டில் வழக்குத் தொடுத்தனர். இவ்வழக்கில் தொழிலாளர்களுக்குப் பாதகமாகத் தீர்ப்பு வழங்கப்பட்டதால், அத்தோட்டத்தை விட்டு தொழிலாளர்கள் வெளியேறி விட்டனர். இதனால் இத்தோட்டம் தொழில் செய்ய ஆட்களின்றி அடர்ந்த காடாக மாறி விட்டது.



தொழிற்சங்கத்தை ஸ்தாபிக்க புறப்பட்ட தொழிலாளர்களுக்குத் துப்பாக்கிச் சூடும், கடுமையான போலீஸ் நடவடிக்கைகளுமே கிடைத்தன. சர்வதேச தொழிற்சங்க ஜனநாயக உரிமைகளை ஏற்றுக் கொண்ட எமது நாட்டில் தொழிசங்கம் ஸ்தாபிப்பதற்குத் தனிப்பட்ட முதலாளிமார்கள் விதித்த தடையை தொழிலாளர்கள் தங்களின் ஒன்றுபட்ட சக்தியால் பிற்காலத்தில் உடைத்தெறிந்தார்கள்.

**1956ம் ஆண்டில் தொழிலாளி தான் விரும்பிய தொழிற் சங்கத்தில் சேருவதற்குப் போராட்டம்**

தோட்டங்கள் தனியாருக்குச் சொந்தமாக இருந்த காலத்தில், தோட்டங்களில் தொழிலாளர்கள் அனுபவித்த துன்பங்களும், கொடுமைகளும் கொஞ்ச நஞ்சமல்ல. இக்காலக் கட்டத்தை இருண்ட காலமென்று பின்னால் வர்ணிக்கப்பட்டது. இப்படிப்பட்ட காலக்கட்டத்தில் தொழிலாளர்கள் தாங்கள் விரும்பிய தொழிற்சங்கத்தில் சேருவதென்பது தனக்குத் தானே தூக்குக் கயிற்றை மாட்டிக் கொள்ளும் கதையாகும். ஆனால் தொழிலாளர்கள் இதற்கெல்லாம் அஞ்சிடாது துணிவுடன் தொழிற் சங்கத்தில் அங்கம் வகித்தனர்.

தொழிலாளர்கள் தங்களின் உரிமைகளை தொழிற்சங்க ரீதியாகப் பெறவேண்டுமென்று வீறு கொண்டு எழுந்து விட்டால், அதைத் தடுப்பதற்காக நிர்வாகங்கள் எடுக்கும் சகல நடவடிக்கைகளையும் அவர்கள் துணிந்து எதிர்ப்பதுண்டு. இந்த சந்தர்ப்பத்தில் நிர்வாகம் தனக்கு ஆதரவாகச் செயல்படும் தொழிற்சங்கத்தைப் பயன்படுத்தி மாற்றுத் தொழிற்சங்க அங்கத்தினர்களை அடக்குவதுமுண்டு. இத்தகைய தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களின் நலனைவிட, முதலாளிமார்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கே முக்கிய பணி புரிந்தன. இதில் அங்கம் வகிக்கும் தொழிலாளர்கள் முதலாளிமார்களின் கெடுபிடிகளுக்குப் பயந்து கைக் கூலிகளாக மாறி விடுவதுமுண்டு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இக்காலக் கட்டத்தில்தான் மஸ்கெலியா நல்லதண்ணி தோட்டத்திலுள்ள பெருந்தொகையான தொழிலாளர்கள் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் அங்கம் வகித்தனர், ஆனால் இத்தொழிற்சங்கம் தோட்ட நிர்வாகத்திற்கு ஆதரவாக இருந்ததோடு, தொழிலாளர்களை அடிமைப்படுத்தி, அவர்களின் உழைப்பைத் தோட்ட நிர்வாகம் உறிஞ்சுவதற்கும் உடந்தையாக இருந்தது. இந்த தோட்டத்தில் வேலை நேரம், வேலை அளவு நிர்ணயம் இல்லாமல்' காலை ஆறு மணி முதல், மாலை ஆறு மணிவரை கடுமையாக உழைக்கத் தொழிலாளர்கள் வற்புறுத்தப்பட்டனர். முழுநாள் தொழில் செய்தும் அரை நாள் போடுவது; எதிர்த்துப் பேசினால் தோட்டத்தைவிட்டு விரட்டுவது; தொழிலாளர்களின் உரிமையைப் பற்றிப் பேசினால் உடன் பற்றுச் சீட்டுப் போன்ற கொடுமைகள் இத்தோட்டத்தில் நிலவியது.

இத்தோட்டம் முத்தையாபிள்ளை என்பவருக்குச் சொந்தமாக இருந்தது. இங்கு நடக்கும் கெடுபிடிகள் ஊருக்குத் தெரியாது என்பதற்காக தான் தனக்குச் சாதமாக ஒரு தொழிற்சங்கத்தைக் கொண்டு தொழிலாளர்களை அங்கம் வகிக்கச் செய்து தனக்கு வேண்டியவரைத் தலைவராக்கி, தங்கள் விருப்பத்தையும், சுய லாபத்தையும் ஈட்டிக் கொண்டார். இக்கொடுமைகளுக்கு முடிவில்லையா? என்று உணர்ச்சியுள்ள தொழிலாளர்கள் கொந்தளிக்கத் தொடங்கினர். இதன் பயனாக ஒரு சிலர் ஒன்று கூடி தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுக்க மாற்றுத் தொழிற்சங்கத்தை (ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ்) தோட்டத்தில் ஸ்தாபிக்க முற்பட்டனர்.

புதிய தொழிற்சங்கத்திற்குக் கட்டிளங்காளையான கருமலை என்ற தொழிலாளி தலைமை தாங்கினார். அப்போது அவருக்கு வயது பதினெட்டு. இதை விரும்பாத தோட்ட நிர்வாகம் இத்தொழிற்சங்கத்தில் தொழிலாளர்கள் சேருவதைத்தடுக்கப்பல தந்திரோபாயங்களையெல்லாம் கையாண்டது. நிர்வாகத்தை ஆதரித்த தொழிற்சங்கமும்



இதற்கு ஒத்துழைப்பு நல்கியது. தொழிலாளர்களை பழிவாங்கும் எண்ணத்துடன் புதிய தொழிற்சங்க அங்கத்தவர்கள் குடியிருக்கும் லயன்களுக்கு இரவில் கல்லடிக்க ஆரம்பித்தனர். மறுநாள் புதிய தொழிற்சங்க அங்கத்தவர்கள் தொழிலாளர் லயன்களுக்கு கல்லடித்ததாக மஸ்கெலியா போலிசில் புகார் செய்யப்பட்டது. இப்புகார்கள் தொடர்பாக 40 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டு வழக்கு போடப்பட்டது. இவ்வழக்கில் கருமலை என்ற இளைஞர் மாத்திரம் கைது செய்யப்படாமல் விடுபட்டுவிட்டார். இந்த இளைஞனை எப்படியும் தீர்த்துக்கட்ட வேண்டுமென்று நிர்வாகம் திட்டம் தீட்டியது.

சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த தோட்ட நிர்வாகம் காவல்காரனைக் கருமலை மீது ஏவியது. இரண்டு பேருக்குமிடையில் பேச்சுவார்த்தை நடந்தது. ஆனால் இப்பேச்சுவார்த்தை பலனளிக்காமல் போகவேகைகலப்பு ஏற்பட்டது. இதில் ஏனைய தொழிலாளர்களும் கலந்து கொண்டார்கள். இரு பக்கமும் பலத்த மோதல் ஏற்பட்டது. இக்குழப்பத்தில் பெண்களும் பங்குபற்றினார்கள். இக்கைகலப்பின்போது பார்வதி என்ற பெண் தொழிலாளி ஒருவரின் கையை கத்தியால் வெட்டித் துண்டித்துவிட்டாள். நிலைமை மோசமாகி விடவே, மஸ்கெலியா போலிஸ் அழைக்கப்பட்டது. இக்குழப்பத்தில் பார்வதி கைது செய்யப்பட்டு அட்டன் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். அவர் பெயரில் வழக்கும் தொடுக்கப்பட்டது. இவ்வழக்கில் பார்வதிக்குச் சாதகமான தீர்ப்புக்கூறி விடுவிக்கப்பட்டார்.

இதனால் ஆத்திரம் கொண்ட நிர்வாகம் தொழிற்சங்கத்தை ஒழித்துக் கட்டுவது மாத்திரமல்ல, கருமலை என்ற இளம் தொழிலாளியையும் தீர்த்துக் கட்டத் தீர்மானித்தது. நிர்வாகத்தின் இத்திட்டம் அவர்களின் கையாட்களால் நிறைவேற்றப்பட்டது.

ஆம்... பதினெட்டு வயது நிரம்பிய கட்டிளங்காளையான கருமலை நிர்வாகத்தின் கையாட்களால் அடித்துக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொல்லப்பட்டார். கையாட்கள் நான்கு பேரும் போலிஸாரால் கைது செய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப் பட்டனர். அட்டன் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றது. தோட்ட அனுசரணையோடு எதிரிகள் சார்பில் ஜி.ஜி. பொன்னம்பலம் ஆஜராகி வாதாடினார்.

இவ்வழக்கு அட்டன் நீதிமன்றத்திலிருந்து நுவரெலியா விற்கும் பின்பு கண்டி நீதிமன்றத்திற்கும் மாற்றப்பட்டு ஏழு வருடங்கள் தொடர்ந்து நடந்தன. சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நான்கு பேரும் ஏழு வருடங்கள் பிணையின்றி ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர். இறுதியாக சாட்சியங்கள் ஒழுங்காக இல்லாதக் காரணத்தால் வழக்கு தள்ளுபடியானது.

1956ம் ஆண்டு நல்லதண்ணி தோட்டத்தில் நடந்த இப்போராட்டமும், கொலையும், தொழிலாளர்கள் மத்தியில் ஒரு உத்வேகத்தையும், ஆர்த்தெழும் போராட்ட உணர்வையும் ஏற்படுத்தியது. கருமலையின் இறுதிச் சடங்கில் தொழிங்சங்கத் தலைவர்களும், தொழிலாளர் களும் பெருந் திரளாகக் கலந்து கொண்டு கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

பெரியசாமி - வள்ளியம்மா ஆகியோருக்குப் பிறந்த ஒன்பது பிள்ளைகளில் ஒருவர்தான் தியாகி கருமலை.

இப்படியாகத் தொழிற்சங்கத்தை ஸ்தாபிக்கவும், தொழிலாளர்களின் உரிமைக்களுக்குப் போராட்டம் நடத்தியும் எத்தனை எத்தனை இளைஞர்கள் தங்களின் உயிர்களைப் பணயம் வைத்துள்ளார்கள். இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம்; தொழிற்சங்க ஜனநாயக மரபுகள் முதலாளி வர்க்கத்தினால் நிர்மூலமாக்கப்பட்டு, தொழிற் சங்கத்தை முதலாளிகளின் கைப்பாவையாக்கிக் கொண்டு சுகபோகத்தை அனுபவித்து, தொழிலாளர்களின் உரிமை களைக் குழிதோண்டிப் புதைத்த முதலாளித்துவ தொழிற் சங்கத் தலைமைகளேயாகும்.



**1956ம் ஆண்டில் முதலாளித்துவ தொழிற்சங்கத் தலைமை இரண்டாகப் பிரிந்தது; தொழிலாளர்களும் இரண்டாகப் பிரிந்தனர்.**

1956ம் ஆண்டு மே மாதம் 48 நாட்கள் தொழிலாளர்கள் போராட்டம் நடத்தி வெற்றிகண்ட மாபெரும் போராட்டம் டயகம தோட்டப் போராட்டமாகும். இத்தோட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இருந்தது. தொழிலாளர்கள் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸில் அங்கம் வகித்தனர். இத்தொழிற்சங்கத்தை முதலாளிமார் சம்மேளனம் ஏற்க மறுத்தது. இதை தொழிலாளர்கள் எதிர்த்ததோடு இப்போராட்டம் ஆரம்பமானது.

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்தால் பதிவு செய்யப்பட்டிருந்தாலும், முதலாளிமார் சம்மேளனம் அதை ஏற்க மறுத்ததால் தோட்டங்களில் தொழிலாளர் களிடையே அடிக்கடி மோதல்கள் இடம்பெற்றது. இ.தொ.கா.வுக்கு எதிரான தொழிற்சங்கம் தோட்டத் திற்குள் நுழைவதை தோட்ட முதலாளிமார் சம்மேளனம் தடுக்க பல தந்திரோபாயங்களைக் கையாண்டது. இதற்கு முற்றுப் புள்ளி வைக்க எடுத்த போராட்டந்தான் அக்கரப்பத்தனை டயகம தோட்டத் தொழிலாளர்களின் நாற்பத்தியெட்டு நாட்கள் போராட்டம்.

தொழிலாளர்களின் கோரிக்கைகளைத் தோட்ட நிர்வாகம் தீர்க்க முன்வரவில்லை. இதனை முன்னிட்டு அட்டன் தொழில் திணைக்களத்தின் மூலம் பேச்சு வார்த்தைக்குஏற்பாடு செய்யப்பட்டது. பேச்சுவார்த்தைக்கு வர மறுத்த தோட்ட நிர்வாகத்தின் செயலைக் கண்டித்து டயகம பகுதி எட்டுப் பிரிவைச் சேர்ந்த தொழிலாளர்களே இப்போராட்டத்தைத் தொடங்கினர்.

1956 மே 2ம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்ட இப்போராட்டம் இரண்டு வாரங்கள் தொடர்ந்தும்தோட்ட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நிர்வாகம் செவிசாய்க்க மறுத்து விட்டதால், இப்போராட்டத்தை ஆதரித்து அக்கரப்பத்தனை மாவட்டத்தைச் சேர்ந்த 10,000 தொழிலாளர்கள் போராட்டத்தில் குதித்தனர். எதற்கும் அசைந்து கொடுக்காத தோட்ட நிர்வாகம் போராட்டத்தை நிர்மூலமாக்க பல தில்லு-முல்லுகளைச் செய்தது. வேலைக்குத் திரும்பும் தொழிலாளர்களுக்கு போலீஸ் பாதுகாப்பு வழங்கப்படும் என அறிவித்தது. வேலை நிறுத்தத்தை முறியடிப்பதில் இ.தொ.கா.முக்கிய பங்கு கொண்டதால், இத்தொழிற்சங்கத்தைச் சார்ந்த தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்ப முடிவு செய்தனர். வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர்கள் தங்களுக்கு எதிராக வேலைக்குச் செல்ல வேண்டாமென எவ்வளவோ பணிவோடு கெஞ்சியும், மறுத்து 17-5-56 அன்று நூற்றுக்கும் மேற்பட்ட இ.தொ கா.தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர். இதனால் ஆத்திரம் கொண்ட தொழிலாளர்கள் மோதலில் ஈடுபடும் சூழ்நிலை உருவாகியது.

இந்நிலையில் மறுநாள் இளம் சிங்கம் ஏப்ரகாம் சிங்கோ தலைமையில் ஒரு குழு 18-5-56 அன்று தொழிலாளர்களை அமைதியோடு வீடு திரும்புமாறு கேட்டுக் கொண்டது. ஏப்ரகாம் சிங்கோவின் வேண்டுகோளை ஏற்றுக் கொள்ள மறுத்த தொழிலாளர்கள் இவர்களுடன் வாய்த் தர்க்கம் செய்ய முற்பட்டனர். இதனால் இருசாராரும் அடிதடியில் இறங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. வேலைசெய்யும்தொழிலாளர்களைத் தாக்க வந்ததாகத் தோட்டத்துரைக்கு உடனடியாக அறிவிக்கப்பட்டது பாதுகாப்புக்கு பங்களாவில் தயாராக இருந்த போலிஸ் கோஸ்டி வேலைத் தளத்திற்குச் சென்று விசாரணை ஏதும் செய்யாமல் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. இத்துப்பாக்கிப் பிரயோகத்தில் இருபத்திமூன்று வயது இளங் காளையான ஏப்ரகாம் சிங்கோ குண்டடிப்பட்டு ஸ்தலத்திலேயே மரணமடைந்தார்.



டயகம தோட்டத்தில் நடந்த இத்துப்பாக்கிப் பிரயோகம் நாடு பூராவும் எதிரொலிக்கச் செய்தது. அக்காலக் கட்டத்தில் இ.தொ.கா.தலைவராக இருந்த மலையக காந்தி கே இராஜலிங்கம் அவர்கள் டயகம தோட்டத் துப்பாக்கிப் பிரயோகத்தில் தொழிலாளி சூடுபட்டு இறந்த செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்து மயக்கம் போட்டு விழுந்து விட்டார். இவரை உடனடியாககொழும்பு ரட்ணம் தனியார் மருத்துவமனையில் அனுமதித்தனர். இரண்டு வாரகாலம் மருத்துவமனையில் ஓய்வு எடுத்துக் கொண்டார் கே. இராஜலிங்கம் அவர்கள். தொழிலாளர்களின் வாழ்வின் உயர்வுக்காக அல்லும்—பகலும் பாடுபட்ட தியாகி அல்லவா! அவரால் இச்செய்தியை ஜீரணிக்க முடியாமல் போனதில் வியப்பில்லை.

ஏப்ரகாம் சிங்கோவின் உடல் கொட்டக்கொல அரசாங்க மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிரேத பரிசோதனைக்குப் பின் 19-5-56 அன்று மீண்டும் தோட்டத்திற்குக் கொண்டு வந்து பொது மக்களின் அஞ்சலிக்காக அவரது இல்லத்தில் வைக்கப்பட்டது. இச்செய்தி கேட்டவுடன் வி. வி. வேலுப்பிள்ளை அவர்கள் ஸ்தலத்திற்கு விரைந்து சென்று சகல நடவடிக்கைகளையும் அவரே மேற்கொண்டார். ஏப்ரகாம் சிங்கோவின் உடலுக்கு அஞ்சலி செலுத்தியதோடு, அவரின் குடும்பத்தாருக்கு மலையகத் தொழிலாளர்களின் சார்பில் தனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டார். இறுதி யாத்திரைக்கான ஏற்பாட்டையும் இவரே நேரில் நின்று செய்தார்.

ஏப்ரகாம் சிங்கோவின் மரணச்செய்தி கேட்டு தோட்டத் தொழிலாளர்கள் சங்கப் பேதங்களை மறந்து வேலை நிறுத்தம் செய்து அஞ்சலி செலுத்த டயகம தோட்டத்தில் குழுமியிருந்தனர். தொழிற்சங்கத் தலைவர்கள் கலந்துக் கொண்டு அஞ்சலி செலுத்திய பின்பு இறுதி யாத்திரை ஆரம்பமானது. இரண்டு மைல் நீளம் புறப்பட்ட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஊர்வலத்தில் 30,000க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்து கொண்டார்கள். தொழிற்சங்கத் தலைவர்கள் அஞ்சலி உரை நிகழ்த்தினார்கள்.

அங்கு உரையாற்றிய ஸி.வி. வேலுப்பிள்ளை அவர்கள்; தொழிற்சங்கத்தைத் தோட்டங்களில் ஸ்தாபிப்பதற்கு தொழிலாளர்கள் தங்களின் உயிரைப்பலிகொடுத்த நிகழ்ச்சி 1940 முதல் தொடர்ச்சியாக இன்றுவரை இருந்து வருகிறது. இவைகள் மலையக தொழிற்சங்க சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை. டயகம தோட்டத்தில் புதிய தொழிற்சங்கத்தை முதலாளி மார் சம்மேளனமும், தோட்ட நிர்வாகங்களும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று எழுந்த போராட்டத்தில் கிடைக்கும் வெற்றி ஏனைய தோட்டத் தொழிலாளர் களுக்கும் உற்சாகமூட்டுவதாக இருக்கும். இத்தகையதொரு போராட்டத்திற்கு நான் தலைமை ஏற்க வேண்டிய சந்தர்ப்பம் கிடைத்ததை என் வாழ்நாளிலேயே மறக்க முடியாத ஒரு நிகழ்ச்சியாகக் கருத வேண்டியுள்ளது என்று உருக்கமாக உரையாற்றினார்.

ஏப்ரகாம் சிங்கோவின் மரணத்திற்குப் பின்பும் 48 நாட்கள் டயகம தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டம் செய்தனர். இத்துப்பாக்கிப் பிரயோகத்தின் எதிரொலியாக அன்று பிரதமராக இருந்த எஸ். டபில்யூ—ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்கள் உடனடியாகத் தொழில் ஆணையாளர், தோட்ட முதலாளிமார் சம்மேளனம், தொழிற்சங்கத் தலைவர்கள் அடங்கிய ஒரு மாநாட்டைக் கூட்டிப் பதிவு செய்யப்பட்ட அனைத்துத் தொழிற்சங்கத்தையும் தோட்ட முதலாளிமார் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தார். தோட்டங்களில் போலிசார் அத்து மீறி பிரவேசிக்கக் கூடாதெனவும் உத்தரவிடப்பட்டது. இது இப்போராட்டத்திற்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.



இதன் பின்பு தோட்டங்களில் தொழிற்சங்கப் பலத்தைக் கட்டுப்படுத்தி தொழிலாளர்களை அடிமைப் படுத்த பல திட்டங்களை முதலாளிமார் சம்மேளனத்தில் கொண்டு வந்தார்கள். தோட்டத்திலுள்ள முழு அங்கத்த வர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் அல்லாத தொழிலாளர் கள் வேறு தொழிற்சங்கத்திற்குச் சமமாக இருந்தால், இரண்டு பேருமே கமிட்டி அமைத்து மினிட் புத்தகம் பாவிக்க முடியாது. அவர்கள் சார்பில் பேச்சாளர் ஒருவர் மாத்திரமே நியமிக்க முடியும் என்று சட்டம் கொண்டு வந்தனர். இதற்குச் சாதகமாகதோட்டங்களில்தொழிலாளர் களை புதிய தொழிற்சங்கத்தில் சேர விடாமல் தடுத்தனர். அதன் பின்பு லேபர் கண்ட்ரோல் மூலமாக தோட்டக் காரியாலயத்தில் வாக்கெடுப்பு நடத்தி சங்கத்தில் பலத்தை நிருபிக்க வேண்டுமென்ற திட்டத்தையும் கொண்டு வந்தனர்.

தோட்டங்களில் வாக்கெடுப்பு என்றால் அது நாட்டில் நடக்கும் பொதுத் தேர்தலைவிட மோசமாக நடக்கும். இரவில் தொழிற்சங்கத்திற்கு சாதகமாக இருக்கும் தொழிலாளர்கள் காலை வாக்கெடுப்பில் கலந்து கொள்ள மாட்டார்கள். இதனால் தோட்டங்களில் தொழிற்சங்கத்தை முன்னின்று ஸ்தாபிக்க உழைக்கும் தொழிலாளர்கள் பெரும் சிரமத்தையும், துன்பத்தையும் ஏன் தோட்டத்தைவிட்டு இரவோடு இரவாக ஓட வேண்டிய சூழ்நிலையும் உருவாகியது. தொழிற்சங்கப் பலத்தை நிருபிக்க தொழிற்சங்கம் கமிட்டி அமைத்து மினிட் புத்தகம் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முற்பட வேண்டும்.

இந்த வகையில் டயகம தோட்டப் போராட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த போராட்டமாகும். ஏப்ரகாம் சிங்கோவின் மரணம் தொழிலாளர்களின் வர்க்க ரீதியான போராட்டத்திற்கு முத்தாய்ப்பு வைத்தது.

அல்விஸ் அப்புகாமி, முதியான்சலாகே உக்குமெனிக்கா ஆகியோருக்குப் பிறந்த ஆறு பிள்ளைகளில் ஒருவர்தான்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏப்ரகாம் சிங்கோ. இந்தப் போராட்டம் தொழிற்சங்க வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது.

**1957ஆம் ஆண்டின் தொழிற்சங்கக் காரியாலயம் அமைப்பதற்கான போராட்டம்**

தொழிலாளர்கள் தொழிற்சங்கத்தில் அங்கத்துவம் வகிப்பதற்கும் உரிமைகளைப் பெறுவதற்கும்,— சம்பள உயர்வு கோரியும், இன்னும் பல பிரச்சினைகளை வென்றெடுக்கவும் போராட்டம் நடத்தியுள்ளார்கள். ஆனால் தொழிற் சங்கக் காரியாலயம் ஒன்றை நிறுவவும், தோட்டங்களில் தொழிலாளர்கள் போராட்டம் நடத்தி உயிர்த்தியாகம் செய்த வரலாறும் உண்டு.

வலப்பனை தேர்தல் தொகுதியைச் சேர்ந்த உடபுசல்லாவ நகரில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் கிளைக் காரியாலயம் ஒன்று 1957ஆம் ஆண்டு ஜூலை 13ஆம் திகதி எம். கே. விஜயசுந்தரம் அவர்கள் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. இத்திறப்பு விழாவில் அப்பகுதியைச் சேர்ந்த தொழிலாளர்களும், இளைஞர்களும், மாதர்களும் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.

இந்நகரில் தொழிற்சங்கக்காரியாலயத்தை நிறுவுவதற்கு தோட்ட முதலாளிமார்களும், நகர வர்த்தகர்களும் எதிர்ப்பு தெரிவித்தனர். இவ்வெதிர்ப்பு முறியடிக்கப்பட்டதால் ஆத்திரமுற்ற இவர்கள் கிராம சிங்கள மக்களையும், நகரில் உள்ள காடையர்களையும் தூண்டிவிட்டு இக்காரியாலயத்தை தகர்க்கத் திட்டம் தீட்டினர். இவர்களின் திட்டத்தை நிறைவேற்ற தயார் செய்த கும்பலொன்று காரியாலயம் திறந்த மறுநாள் அதாவது 1957ஆம் ஆண்டு ஜூலை 14ஆம் திகதி இக்காரியாலயத்தை உடைத்து, அங்கிருந்த பொருட்களைச் சூறையாடி கட்டிடத்தை தீயிட்டுக் கொளுத்தினர்.

அதோடு நின்று விடாது, ரப்பானை தோட்டத்தைச் சேர்ந்த பெரிய கங்காணி சிதம்பரம் என்பவருக்குச் சொந்தமான நகரிலிருந்த கடையொன்றையும் உடைத்து பொருட்களையும், பணத்தையும் சூறையாடி, கட்டிடத்தையும் எரித்து விட்டார்கள். இதனால் நகர் அல்லோலகல்லோலப்பட்டது. தொழிற்சங்கக் காரியாலயமும், தமிழர் கடைகளும் எரிக்கப்பட்டது என்ற செய்தி காட்டுத்தீ போல் இரவோடு இரவாகத் தோட்டத் தொழிலாளர்களிடையே பரவியது. இச்செய்தி கேட்ட தோட்டத் தொழிலாளர்கள் ஆத்திரமுற்றனர்.



மறுநாள் 15ஆம் திகதி அப்பகுதியிலுள்ள ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இச்செயலைக் கண்டித்து வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அதேநேரத்தில் அன்று ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் உடபுசல்லாவ நகரில் திரண்டு வன் செயலுக்கும், முதலாளிமார்களின் அடக்கு முறைகளுக்கும் எதிராகக் கண்டனம் தெரிவித்தும், கோஷம் எழுப்பியும் ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆத்திரமுற்றுக் கொதித்தெழுந்து நகரில் திரண்ட தொழிலாளர்களை நகரிலிருந்து அப்புறப்படுத்த போலிசார் எடுத்த நடவடிக்கைகள் தோல்வியில் முடிந்தது. இதனால் ஆத்திரமுற்ற பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இத்துப்பாக்கிப் பிரயோகத்தில் எனிக் தோட்டத்தைச் சேர்ந்த இரண்டு தொழிலாளர்கள் உயிர் துறந்தனர். இவர்கள் கொம்பாடி (வயது 57) பொன்னையா (வயது 7) ஆவர். தொழிலாளர்கள் குண்டடிப்பட்டு இறந்த செய்தி தோட்டங்களுக்குப் பரவியதால், தொழிலாளர்கள் மேலும் ஆவேசம் கொண்டு நகரில் அணி திரள ஆரம்பித்தனர். நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே, உடனடியாக தொழிற்சங்கத் தலைவர்கள் உடபுசல்லாவ நகருக்கு அழைக்கப்பட்டனர். தொழிற்சங்கத் தலைவர்களின் வருகை தொழிலாளர்களுக்கு உற்சாகமூட்டுபவையாக அமைந்தது. தொழிற்சங்கத் தலைவர்கள் தொழிலாளர்கள் மத்தியில் அமைதியை ஏற்படுத்தினர் அதன் பின்பு

www.tamilarangam.net



துப்பாக்கிப் பிரயோகத்தில் பலியான கொம்பாடி, பொன்னையா ஆகிய இரு சகோதர தொழிலாளர்களின் உடல்களை ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் புடைசூழ உடபுசல்லாவ நகரிலிருந்து ஊர்வலமாக அவர்கள் வசித்த எனிக் தோட்டத்திற்கு எடுத்துச் சென்று அவர்களின் இல்லத்தில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

எனிக் தோட்டத்தில் 16-7-57 அன்று வீரத் தியாகிகளின் உடல்கள் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு, தொழிலாளர்களின் கண்ணீர் நிலத்தில் சிந்த தோட்டப் பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவர்களின் இறுதிக் கிரியைகளில் தொழிற்சங்கத் தலைவர்களான திருவாளர்கள்; எஸ். தொண்டமான், வீ கே. வெள்ளையன், எம். எஸ். செல்லசாமி, வி, அண்ணாமலை எம். கே. விஜயசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தி அஞ்சலி உரையும் நிகழ்த்தினார்கள்.

அன்று தொழிலாளர்கள் இந்த அடக்கு முறையையும், வன்செயலையும் கண்டித்துப் போராட்டத்தைத்தொடங்கியிருக்காவிட்டால், இன்று பல இடங்களில் தொழிற்சங்கக் காரியாலயங்கள் திறந்திருக்கவேமுடியாது.இப்போராட்டத்தின் பின்பு ஒரு வருடத்திற்கு மேலாக உடபுசல்லாவ நகருக்குச் செல்வதை தோட்டத் தொழிலாளர்கள் நிறுத்தியிருந்தார்கள் கடைகளில் பொருட்கள் வாங்குவதை நிறுத்தினார்கள். இதனால் வர்த்தகர்கள் பெரிதும் பாதிப்படைந்தனர். உணவுப் பொருட்கள் பழுதாகியும், வியாபாரம் இல்லாமலும் நட்டத்தையும், கஷ்டத்தையும் எதிர்நோக்கினர். இறுதியில் ஒருசிலர் கடைகளையும் மூடிவிட்டனர். வறுமை வாட்ட, இதிலிருந்து மீள முதலாளிமார்கள் ஒன்று திரண்டு தொழிலாளர்களை சந்தித்துப் பேசுவதென்று முடிவு செய்தனர்.

இம்முடிவை அமுல்படுத்த நகர வியாபாரிகளில் ஒரு குழுவினர் தொழிற்சங்கப்பிரதிநிதிகளைச்சந்தித்து அவர்கள்



மூலமாக தோட்டக் கமிட்டித் தலைவர்களையும், முதலாளிமார்களையும் கண்டுபேச ஏற்பாடு செய்யப்பட்டது, இங்கு நடந்த அசம்பாவிதங்களுக்கு முதலாளிமார்கள் மன்னிப்புக் கோரினர். இதனால் மீண்டும் தொழிலாளர்கள் நடந்ததை மறந்து நகருக்குச் சென்றனர். இதனால் நகரில் புதிய களை கட்டியது, கடைகள் திறக்கப்பட்டன. தொழிலாளர்கள் வியாபாரிகள் மத்தியில் சமாதானத்திற்கு வழியேற்பட்டது.

இக்காலக் கட்டத்தில் இப்பகுதியின் முக்கிய தொழிற்சங்கத் தலைவராகத் திகழ்ந்தவர் திரு. எஸ். செல்லையா. இவர் இப்போது சர்வதேச தொழிற்சங்க சம்மேளனத்தின் கிராமிய தொழிலாளர் அபிவிருத்தி ஆசியப் பிராந்திய பிரதிநிதியாக புதுடில்லியில் கடமை புரிகின்றார்.

மலையகத்தில் தொழிற்சங்கத்தை ஸ்தாபிக்கவும் தொழிற்சங்கக் காரியாலயத்தை திறக்கவும் மாபெரும் போராட்டம் நடத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டது. தொழிலாளர்களின் உதிரத்தால், தியாகத்தால் கட்டியெழுப்பப்பட்ட தொழிற்சங்கம் தொழிலாளர்களின் மேம்பாட்டிற்குப் பாடுபடுவதைவிட முதலாளிமார்களின் நலனையும், ஆட்சியாளர்களின் நலனையும் பேணுவதில் மிகவும் அக்கறை கொண்டுள்ளது கண்டு தொழிலாளி இவ்வாறு இரத்தக் கண்ணீர் வடிக்கிறான்.

''பழுதிலா அவர்க்கோர்
கல்லறை இல்லை
பரிந்தவர் நினைவுநாள்
பகருவாருமில்லை''

ஆம்...தொழிலாளார்களின் நிலையையெண்ணிக்கண்ணீர் விட்ட ஸி வி. வேலுப்பிள்ளை அவர்கள் தனது உயிருள்ள கவிதைகளால் தொழிலாளர்களின் நிலைக்கு மனம் புழுங்கி இப்படிப் பாடியுள்ளார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**1958ம் ஆண்டில் மொழிப் போராட்டத்தில் வரலாறு படைத்த மலையகம்**

மலையக இளைஞர்கள் தொழிற்சங்கப் போராட்டத்தில் மாத்திரம் உயிர்த் தியாகம் செய்யவில்லை. வரலாற்றுச் சிறப்பு மிக்க மொழிப் போராட்டத்திலும் உயிர்த் தியாகம் செய்து வரலாறு படைத்துள்ளனர்.

1958ம் ஆண்டு நாட்டை ஆட்சி செய்த பண்டார நாயக்கா அரசாங்கம், அரச கரும மொழியாக இருந்த ஆங்கிலத்தை அகற்றிவிட்டு சிங்களத்தை அரியாசனம் ஏற்றியது. இச்சட்டத்தை எதிர்த்து தமிழர்கள் கிளர்ச்சி செய்தனர்.

வட-கிழக்குப் பகுதியில் தமிழர்களின் கிளர்ச்சியை அடக்க இராணுவம் அனுப்பப்பட்டது. அன்று இராணுவத்தை எதிர்த்துக் கிளர்ச்சியை ஏற்படுத்தினர் சிங்களப் பகுதியில் தமிழர்கள் இனவாதிகளால் தாக்கப் பட்டனர். அவர்களின் உடமைகள் சூறையாடப்பட்டன. உயிர்கள் பறிக்கப்பட்டன. பெண்கள், பிள்ளைகளை எரியும் தணலில் போட்டு மிருகத் தனமாகக் கொலை செய்தனர்.

தனி சிங்கள மொழிச் சட்டத்தின்கீழ் வாகனங்களில் பொறிக்கப்பட்டிருந்த ஆங்கில எழுத்துக்கள் அகற்றப் பட்டு, சிங்கள ஸ்ரீ எழுத்துப் பொறிக்கப்பட்டு வாகனங்கள் ஓடின. இதேபோன்று தமிழ் பகுதிகளில் ஆங்கிலத்திற்குப் பதிலாக தமிழ் ஸ்ரீ எழுத்துப் பொறிக்கப்பட்டு அவைகளை வாகனங்களில் ஒட்டி விட்டனர். இந்தப் போராட்டம் ஸ்ரீ போராட்டமாக மாறியது. மொழிப் போராட்டம் மலையக தமிழ் இளைஞர்களையும் சிந்திக்க வைத்தது. மலையகத் தமிழ் இளைஞர்கள் மொழிக்காக உயிரையும் தியாகம் செய்யத் தயாராக இருந்தனர். "தமிழை இகழ்ந்தவனை தாய் தடுத்தாலும் விடேன்" என்பதுபோல் மலையகத்திலும் இப்போராட்டத்தில் தமிழ் இளைஞர் களின் கவனம் திரும்பியது.



1958ம் ஆண்டு மார்ச் மாதம் 30ம் திகதி 4-30 மணி யளவில் அட்டனிலிருந்து வந்த இ. போ. ச. (இலங்கை போக்குவரத்து சபை) பஸ் கொட்டியாக்கலையை நோக்கி வந்தது. இந்த பஸ்ஸில் இருந்த ஆங்கில எழுத்து அகற்றப் பட்டு சிங்கள ஸ்ரீ எழுத்துப் பொறிக்கப்பட்டிருந்ததை இளைஞர்கள் கண்டார்கள். உடனடியாக பஸ்ஸை நிறுத்தி சிங்கள ஸ்ரீ எழுத்தை அழித்து தமிழ் ஸ்ரீ எழுத்தைப் பொறித்தார்கள். பஸ் பொகவந்தலாவ நகரில் நிறுத்தப் படாமல், உடனடியாக அட்டன் நோக்கிப் புறப்பட்டுச் சென்றது. இதன் பின்பு நகரில் தமிழ் இளைஞர்கள் மொழிப் போராட்டத்தைத் துவக்கி வைத்தனர்.

இப்போராட்டத்தைத் தடுக்க போலிசார் முற்பட்ட போது இரு சாராருக்குமிடையே ஏற்பட்ட தகராறு கைகலப்பாக மாறியது. செய்வதறியாது தவித்த போலிசார் இளைஞர் கூட்டத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இத்துப்பாக்கிப் பிரயோகத்தில் ஐயாவு, பிரான்சிஸ் ஆகிய இருவரும் குண்டடிபட்டு ஸ்தலத்திலேயே மரண மடைந்தனர்.

இச்செய்தி காட்டுத் தீ போல் சகல தோட்டங்களுக்கும் பரவியது. ஏப்பரல் 1ம் திகதி காலை சகல போக்குவரத்துப் பாதைகளையும் வெளியார் உட்புகாதவாறு தொழிலாளர் கள் தடையை ஏற்படுத்தினர். பாலங்கள் தகர்க்கப்பட்டன. தந்தி கம்பிகள் அறுக்கப்பட்டன. நிலைமை மோசமாகவே போலிசார் இராணுவ உதவியை நாடினர், இராணுவமும் வந்தது. நோர்வூட்டிலிருந்து பொகவந்தலாவ பத்து மைல் தூரத்தைக் கொண்டது. வழி நெடுகிலும் போடப்பட்ட தடைகளை அகற்றி இராணுவ உதவியோடு போலிசார் பொகவந்தலாவ நகரத்தை அடைந்தனர்.

இப்போராட்டத்தின்போது நேரடியாக ஸ்தலத்திற்கு விரைந்த, இப்போது தொழிலாளர் தேசிய சங்க நீதிச் செயலாளராக இருக்கும் திரு பி. பெருமாள் (அப்போது

www.tamilarangam.net



இவர் காங்கிரஸில் அங்கம் வகித்தார்) நிலைமையை கட்டுப்படுத்தினார். அதன் பின் நேரடியாக அட்டன் வந்தார். மாலை கொழும்பிலிருந்து அட்டன் திரும்பிய வீ. கே. வெள்ளையன் அவர்களோடு மீண்டும் பொகவந்தலாவ சென்றபோது பெரிய அரைத் தோட்டத்திற்கு அப்பால் காரில் செல்ல முடியாமல் போய் விட்டது. அதன் பின்பு இருவரும் மோனார் தோட்டம் வழியாகச்சென்றனர். அன்று மாலை ஆறு மணிக்கு பொகவந்தலாவ நகரில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டதால், நகருக்குப் போக முடியாது கொட்டியாகலை மேல் கணக்கு தோமஸ் பெரிய கங்காணி வீட்டில் தங்கி, அடுத்த நாள் காலை வீ. கே. வெள்ளையன் அவர்கள் நகருக்குச் சென்று ஐயாவு, பிரான்சிஸ் இருவரின் பிரேதங்களையும் பொறுப்பெடுத்தார்.

மறுநாள் 2ம் திகதி பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் புடைசூழ பொகவந்தலாவ கொட்டியாக்கலை கீழ் பிரிவில் பிரதான பாதைக்கருகில் ஐயாவு, பிரான்சிஸ் ஆகியோரின் பூதவுடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டன. இங்கு நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் வீ. கே. வெள்ளையன் அவர்கள், திரு தொண்டமான், ஜனாப் ஏ. சி. எஸ். அஸீஸ் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். இங்கு முக்கிய தொழிற்சங்கப் பிரதிநிதியாக திரு ஜே. எம். செபஸ்தியான் இருந்தார். இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு திருவாளர்கள், பி. பெருமாள், வீ. கே. வெள்ளையன் ஆகியோர் திரும்பும் வழியில் அட்டன் பஸ் நிலையத்தில் வைத்து சிங்கள காடையர்கள் வழிமறித்து கலாட்டா செய்தனர். இதனால் அட்டன் நகரில் ஏற்பட்ட பதட்டத்தைச் சமாளிக்க விசேச போலிஸ் அதிகாரிகளை வெளியிலிருந்து அழைத்து பாதுகாப்பு ஸ்திரப்படுத்தப்பட்டது.

இப்போராட்டச் சமயத்தில் பொகவந்தலாவ நகரில் தொழிலாளர்கள் ஆவேசம் கொண்டு கற்களை வீசியதில்



ஒருவர் படுகாயமுற்று இறக்க நேரிட்டது இது சம்பந்தமாக போலிசார் விசாரணையில் சந்தேகத்தின்பேரில் பொகவான தோட்டத்தைச் சேர்ந்த மூக்கன், முத்துசாமி பெரியரை தோட்டத்தைச் சேர்ந்த கருப்பண்ணன், முனியாண்டி, சிவனு ஆகியோர் கைது செய்யப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது இந்த வழக்கில் தொழிலாளர்கள் சார்பில் ஜீ. ஜீ. பொன்னம்பலம் அட்டன் நீதிமன்றத்தில் ஆஜராகி வாதாடினார். தீர்ப்பில் இவர்கள் குற்றவாளிகள் அல்ல என நீதிபதி தீர்ப்புக்கூறி ஐந்து பேரையும் விடுதலை செய்தார்.

முத்து -செல்லாயி, ஆகியோருக்குப் பிறந்த ஐந்து பிள்ளைகளில் ஒருவர்தான் ஐயாவு. இவர் சூடுபட்டு இறக்கும்போது வயது 21 அந்தோனி – அஞ்சலை ஆகியோருக்குப் பிறந்த ஏழு பிள்ளைகளில் ஒருவர்தான் பிரான்சிஸ், இவர் இறக்கும்போது வயது 23, இந்த கட்டிளங்காளைகளே மொழிப் போராட்டத்தில் உயிர் நீத்து, மொழிப் போராட்டத்தில் மலையக மக்களின் பங்கையும், போராட்ட உணர்வையும் உலகறியச் செய்த வீரத்தியாகிகள்.

## 1959 ம் ஆண்டில் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு எதிராக ஐம்பதாயிரம் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

மாத்தாளை கல்கடுவையைச் சேர்ந்தது சக்கரவத்தைத் தோட்டம். (மாத்தென்னை) இத்தோட்டம் கம்பெனித் தோட்டம். இத்தோட்டத்தின் முகாமையாளராக திரு. போலிங் என்ற பறங்கியர் கடமையாற்றினார். இவரின் மகன் திரு. போலிங் மொரிஸ் என்பவர் சின்னத்துரையாக (உதவி அதிபர்) கடமை புரிந்தார்.

இத்தோட்டம் கம்பெனிக்குச் சொந்தமாக இருந்த போதிலும், தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளைக் கூட வழங்க மறுத்து வந்தனர். தொழிலாளர்கள் கம்பெனிக் காவல் நாய்களுக்கு உள்ள உரிமைகளைக்கூட அனுபவிக்க முடியாது. அந்தளவிற்கு அவர்கள் அடக்கி ஒடுக்கப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பட்டிருந்தனர். இந்த அடக்கு முறைக்கெதிராக தொழிலாளர்கள் ஒன்று திரண்டு உரிமைக்குரல் எழுப்பினர்.

இத்தோட்டத்திலுள்ள தொழிலாளர்கள் இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் அங்கம் வகித்து வந்தார்கள். இச்சங்கம் மூலம் தோட்டக் கமிட்டியினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்தனர். பேச்சுவார்த்தைக்கு முன்வராத தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களை இம்சைப்படுத்தி, அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்து விட்டது. தொழிலாளர்களின் ஒன்றுபட்ட சக்தியின் காரணமாக நிர்வாகத்தின் கெடுபிடிகள் செல்லுபடியற்றதாகி விட்டது.

பேச்சுவார்த்தைக்கு இணங்காத தோட்ட நிர்வாகம் தொழிற்சங்கத்தைக் கூறுபோடும் பணியில் செயல்பட்டது. இத்திட்டத்திற்கு ஒருசில தொழிலாளர்களின் குடும்பங்கள் தங்களின் ஒத்துழைப்பை நல்கின. அதன் நிமித்தம் மாற்றுத் தொழிற்சங்கத்தை தோட்டத்திற்குள் நிர்வாகத்தின் அனுசரணையோடு கொண்டு வந்தனர். ஆதரவு காட்டிய தொழிலாளர்களுக்கு அற்ப சலுகைகளாக இலேசு வேலைகள் போன்றவற்றை வழங்கி, தொழிலாளர்களைப் பெருமளவில் புதிய தொழிற்சங்கத்தில் சேருவதற்கு ஆசை வார்த்தைகளைக் கூறினர். இதில் ஒரு சில தொழிலாளர்கள் அகப்பட்டுக் கொண்டார்களே ஒழிய, பெருந்தொகையான தொழிலாளர்கள் கட்டுக் கோப்பாக இருந்தனர்.

நிர்வாகத்தின் இந்த நடவடிக்கைகளுக்கு எதிராகவும், தங்களின் உரிமைகளையும், பிரச்சினைகளையும் வென்றெடுக்கும் முகமாகவும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிக்கப் போவதாக தொழிலாளர்கள் முன்னறிவித்தல் ஒன்றை நிர்வாகத்திற்குக் கொடுத்தனர். தொழிலாளர்களின் கோரிக்கைகளை உதாசினப்படுத்தியதால் குறிப்பிட்ட நாளில் தொழிலாளர்கள் போராட்டத்தில் குதித்தனர். புதிய தொழிற்சங்கத்திலுள்ள



தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை எதிர்த்து நிர்வாகத்திற்கு ஆதரவாகவேலைக்குச் சென்றனர். இத்தொழிலாளர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு கொடுக்கப்பட்டது.

முதல் நாள் வேலைக்குச் சென்ற தொழிலாளர்களை வேலைக்குப் போக வேண்டாமெனத் தடுத்தனர். இதைப் பொருட்படுத்தாமல் நிர்வாகத்தின் ஆசை வார்த்தைக்கு மயங்கி தொடர்ந்து வேலைக்குச் செல்லும் தொழிலாளர்களைச் சமாதானமாகக் கேட்டுக்கொள்வதென்று ஒரு குழு சென்றது. அக்குழுவை நிர்வாகத்தின் அனுசரணையுடன் காவல் புரிந்த ஆயுதந் தரித்த குழுவொன்று தடுத்தது. இருசாராருக்குமிடையே வாய்த் தகராறு முற்றவே, ஆயுதந்தரித்த குழுவினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால் ஆத்திரமுற்ற தொழிலாளர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளகற்களை எடுத்து வீசினர். இச்செய்தி முழுத் தோட்டத்திற்கும் காட்டுத் தீபோல் பரவியதால், தொழிலாளர்கள் அங்கு சென்று ஒன்று திரண்டு விட்டனர். இரு சாராரின் போராட்டம் உக்கிரமடையவே, நிர்வாகத்தின் கட்டளைப்படி செய்த துப்பாக்கிப் பிரயோகத்தினால் காலக்கார முத்துசாமி குண்டடிபட்டார். இச்செய்தி அப்பகுதியில் பரவி விடவே, தோட்டங்களில் 50,000க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இத்துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டித்து உடனடியாக வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கினர்

துப்பாக்கிப் பிரயோகத்தின்போது குண்டடிபட்ட காலக்கார முத்துசாமி உடனடியாக கண்டி அரசாங்க மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு அவர் மரணமானார்.

1959ம் ஆண்டு நவம்பர் மாதம் நடந்த இத்துப்பாக்கிப் பிரயோகத்தில் பலியான காலக்கார முத்துசாமியின் உடல் கண்டி அரசாங்க மருத்துவமனையிலிருந்து தோட்டத்திற்கு வாகனம் மூலம் எடுத்துச் செல்லப்பட்டது. எல்கடுவை நகரில் வாகனத்திலிருந்து இறக்கப்பட்ட காலக்கார

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முத்துசாமியின் பூதவுடலை எல்கடுவ நகரிலிருந்து சக்கரவத்தை தோட்டத்திற்கு (இரண்டு மைல்தூரம் கொண்டது) பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் புடைசூழ சுமந்து சென்று அன்னாரின் இல்லத்தில் தொழிலாளர்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இந்த காலக்கார முத்துசாமியின் இறுதிக் கிரியையில் மாத்தளை மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்துத் தொழிலாளர்களும் கலந்து கொண்டனர். அங்கு நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில், அக்காலத்தில் மாத்தளை மாநிலப் பிரதிநிதியாகக் கடமையாற்றிய அமரர் ஜேசுதாசன் தலைமை வகித்தார். மற்றும் திருவாளர்கள்; தொண்டமான், அண்ணாமலை, வீ. கே. வெள்ளையன் ஆகியோரும் இவ்வஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

காலக்கார முத்துசாமிக்குச் செல்லையா, கருப்பையா, ராமலிங்கம் என்று மூன்று மகன்மார் இருக்கின்றனர். அவரது மனைவியான திருமதி பெரியம்மாள் முத்துசாமி அண்மையில் காலமானார். இப்போராட்டக் காலத்தில் சிவனு என்பவர் தோட்டக்கமிட்டித்தலைவராக இருந்தார். இத்துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பாகத் தோட்டத்திற்குச் சென்று அக்காலத்தில் கங்காணியாகத் தொழில் புரிந்த வேலு என்பவரைச் சந்திக்கச் சென்றபோது, அறுபத்தைந்து வயதைக் கொண்ட இவர், தொழில் செய்யச் சென்றதாகக் கேள்வியுற்று அவர் வரவை எதிர் நோக்கிக் காத்திருந்தோம். எதிர்பாராமல் அவ்விடத்திற்கு வந்த திருமதி. சிவனாய் என்ற அம்மையார் எங்களைப் பற்றி விசாரித்துவிட்டு இத்துப்பாக்கிப் பிரயோகம் பற்றிய விபரங்களைச் சொல்ல முன் வந்தார்.

''1959ம் ஆண்டு நான் குமரியாக இருந்தபோதிருந்தே இத்தோட்டத்தில் தொழில் செய்து வருகிறேன். தற்போது எனக்கு வயது 55'' என்று, தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட அவர், மேலும் துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமாக மேற்கண்ட விபரங்களைச் சொன்னார்



இத்துப்பாக்கிப் பிரயோகத்தின் பின்பும் தொடர்ந்து தொழிலாளர்கள் இருபத்தைந்து நாட்கள் போராட்டம் செய்தனர். இப்போராட்டத்தின் காரணமாக மூர்க்கத்தனயாகத் தொழிலாளர்களின் உரிமைகளை, வழங்க மறுத்து வந்த தோட்ட நிர்வாகத்தின் கெடுபிடு தளர்ந்து பேச்சுவார்த்தைக்கு இணக்கம் காணப்பட்டது

மாத்தளை தொழில் காரியாலயத்தில் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தையில், தொழிலாளர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தைக் கைவிட்டு வேலைக்குத் திரும்பினர்.

இத்துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டு, மாத்தளை நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது. வழக்கில் சரியான சாட்சியங்கள் இல்லாத காரணத்தால் வழக்கை நீதிபதி தள்ளுபடி செய்தார். நிர்வாகம் செய்த துப்பாக்கிப் பிரயோகத்தில், தொழிலாளர்களை வழிமறித்து அணிவகுத்து நின்ற ஆயுதந் தரித்த குழுவில் அங்கம் வகித்த முக்கிய பிரமுகர்தான் திரு. சுப்பிரமணியம் கே. பி. இவருக்கு வயது எழுபத்தைந்து.

இது சம்பந்தமாக விசாரிப்பதற்காக நாம் அவரைச் சந்தித்தபோது, பெருமூச்சு விட்ட அவர், மௌனம் சாதித்தார். பின்பு எங்களை நிமிர்ந்து பார்த்து ''இது ஒரு துரதிஷ்டமான செயல், பாவம் காலக்கார முத்துசாமி. நல்ல கெட்டிக்காரரர். அவர் எனது நெருங்கிய நண்பர்'' என்று சொல்லும்போது அவரின் கண்கள் கலங்கி விட்டன. அத்தோடு பழையதை கிளர வேண்டாமென்று பிடிவாதமாக எங்களுக்கு விடை கொடுத்தார்.

நாங்கள் வெளியேறும்போது, இப்படியெல்லாம் நிர்வாகத்தை நடத்த பாடுபட்ட எனக்கு இன்னும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பென்சன் கிடைக்கவில்லை என்றார். இதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்று கேட்டபோது, காங்கிரஸ் காரர்களிடம் கொடுத்தோம், இன்னும் தீர்ப்பு இல்லை என்றார்.

ஆகவே பிரச்சினைகள் ஓரிடத்தில் மறைந்தாலும், மறு இடத்தில் அது விஸ்வரூபம் எடுப்பதைக் காணலாம் ஆகவே தொழிற்சங்க சரித்திரத்தில் முதலாளிமார்களின் துப்பாக்கிக் குப் பலியான தியாகிகளில் காலக்கார முத்துசாமி பெறுமதி மிக்க மனிதராக தொழிலாளர்களால் மதிக்கப்பட்டவராகி விட்டார்.

## 1961ல் ஹாலியின் அடக்குமுறையை எதிர்த்து எழுந்த போராட்டம்

நாவலப்பிட்டிய நகரிலிருந்து சுமார் எட்டு மைல் தொலைவிலுள்ளது லெட்சுமித் தோட்டம். (மொண்டிசிரஸ்டோ) இத்தோட்டம் ஹாலி என்ற பறங்கியருக்குச் சொந்தமான தோட்டம், மெக்வூட்ஸ் ஏஜன்சி கம்பெனியின் கீழ் இணைக்கப்பட்டிருந்தது. தோட்ட முதலாளிமார் சம்மேளனத்திலும் அங்கத்துவம் பெற்றிருந்தது.

கம்பெனியோடு இணைக்கப்பட்டிருந்தாலும், தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தில் அங்கத்துவம் வகித்தாலும் தொழிலாளர்கள் இடத்தில் இவைகளுக்குரிய சட்ட திட்டங்களை அனுஷ்டித்தது கிடையாது. இந்த நியதி களுக்கு இவர் கட்டுப்படவுமில்லை, தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவே இந்த நிறுவனங்களுடன் இவர் இணைந்திருந் தார்.

தோட்ட முதலாளிமார் சம்மேளனத்திலுள்ள ஏனைய தோட்டங்களில் தொழிலாளர்கள் உரிமையும், தொழிற் சங்கம் அமைக்கும் உரிமையும் பெற்றிருந்தார்கள். ஆனால் லெட்சுமி தோட்டத்தில் தொழிலாளர்கள் தொழிற்சங்கத்



தில் சேருவதற்கோ, தொழிலாளர்களின் உரிமைகளைப் பற்றிப் பேசுவதற்கோ அவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

தொழிற்சங்கம் என்ற வார்த்தையை உபயோகித்தவன் இரவோடு இரவாகத் தோட்டத்தைவிட்டு வெளியேற்றப் பட்டுள்ளான். நியாயம் கேட்பவன் கிராம, நகர காடையர் களால் தாக்கப்பட்டான். இத்தகைய அடக்குமுறை களோடு நின்றுவிடவில்லை. அடுத்த தோட்டத்துத் தொழிலாளர்கள் லெட்சுமி தோட்டம் வழியாகச் செல்வது தடுக்கப்பட்டது. தெரியாமல் தப்பித் தவறி சென்று விட்டால், அவர்கள் தண்டனை அனுபவித்தே ஆகவேண்டும். ஆகவே இத்தோட்டத் தொழிலாளர்கள் வீட்டுக்கு வேறு தோட்டத்திலிருந்து விருந்தினர்களாக யாராவது வந்தால் விருந்தினர் எத்தனை நாட்கள் தோட்டத்தில் தங்குவார் என்று தோட்டத்துரையிடம் அனுமதி பெற வேண்டும். இதன்படி நடக்கிறதா என்பதை அறிய காவல்காரர் அடிக்கடி சம்பந்தப்பட்ட வீட்டை கண்காணித்து வருவார்.

திருமணம், சடங்கு போன்ற நிகழ்ச்சிகள் கூட தொழிலாளர்களின் விருப்பத்திற்கு நடத்த முடியாது. குறிப்பிட்ட நேரத்தில் செய்து முடிக்க வேண்டும். கோவில் திருவிழாக்கள்கூட தோட்டத்துரை ஹாலியின் கட்டுப் பாட்டின் கீழ்தான் நடத்தப்பட வேண்டும். இத்தகைய மனிதாபிமானமற்ற அடக்கு முறைக்கு எதிராக ஒருசில தொழிலாளர்கள் ஒன்று திரண்டு இரவோடு இரவாக தொழிற்சங்கம் அமைக்கும் பணியில் ஈடுபட்டனர். அந்த நாட்களில் செக்ரோலில் சந்தாப் பணம் கழிப்பதில்லை. ஆதலால் நிர்வாகத்திற்கு எதிராக தொழிலாளர்கள் தொழிற்சங்கத்தில் இணைந்திருப்பது தெரியவராது. உரிமைக்கு தொழிலாளர்கள் குரல் எழுப்பும்போதுதான் இவர்கள் தங்களை தொழிற்சங்க ரீதியாக அறிமுகப் படுத்திக் கொள்வார்கள். அதன் பின்பு ஏற்படும் விளைவு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களைத் தொழிலாளர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக வேண்டும்.

ஆக லெட்சுமி தோட்டத்தில் தொழிலாளர்கள் தொழிற்சங்கத்தில் இணைந்துள்ளார்கள் என்ற செய்தியை கைக்கூலிகள் ஊடாகத் துரை தெரிந்து கொண்டார். ஆனாலும் தொழிலாளர்கள் சளைக்காமல் எதிர் விளைவு களைப் பற்றிச் சிந்திக்காது. தொழிலாளர்களின் உரிமை களை வென்றெடுக்கவும், அடக்குமுறையிலிருந்து விடுபடவும் ஒரு தொழிற்சங்கத்தை நிறுவினர். தோட்டத்துரை ஹாலியும் தொழிலாளர்களின் இந்த நடவடிக்கையைத் தடுக்க பல தந்திரோபாயங்களை மேற்கொண்டதோடு, போலிசாரின் உறுதுணையும் பெற்றுக் கொண்டார்.

தொழிலாளர்களின் வேலை நேரம், வேலை அளவு போன்றவற்றை தங்களின் வசதிக்கேற்றவாறு ஏற்படுத்திக் கொண்டு தொழிலாளர்களை நசுக்க ஆரம்பித்தனர், இந்த நிலையில் தோட்டத்தில் எந்த நேரத்திலும் எதுவும் நடக்க லாம் என்ற பதட்ட நிலை நிலவியதால் தொழிலாளர் களும் எச்சரிக்கையாக இருந்தனர். அடிக்கடி தொழிற்சங்கக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டனர். இப்படி தொழிற்சங்கக் காரியாலயம் செல்லும்போது தோட்டக் கமிட்டி முக்கியஸ்தர்களும் காடையர்களால் வழி மறித்து தாக்கப்பட்டனர்.

தோட்டத்தின் சூழ்நிலையைப் பயன்படுத்தி யுத்தம் ஒன்றுக்குத் தொழிலாளர்களும், தோட்டத்துரையும் தயார் செய்வது போன்று தோட்டத்தின் பங்களாவைச் சுற்றி பொலிசார் நிறுத்தப்பட்டிருந்தார்கள். தொழிலாளர் கள் எதற்கும் அஞ்சாமல், தொழில் செய்ததோடு, உரிமை களைப் பெறும் வழிவகைகளையும் மேற்கொண்டனர். இதனால் ஆத்திரமுற்ற ஹாலி கிராமத்து காடையர்களை அழைத்து தொழிலாளர்களின் குடியிருப்புக்களுக்கு வந்து அவர்களைப் பயமுறுத்தித் தாக்குதல் நடத்த ஏற்பாடு



செய்தார். இதனால் தொழிலாளர்கள் தோட்டத்தை விட்டு நகருக்குச் செல்வது தடுக்கப்பட்டது.

தொழிலாளர்களோ பட்டினி கிடந்தாலும் பரவா யில்லை, தொழிற்சங்கத்தை அமைத்து உரிமைக்குப் போராடுவது என்ற உறுதியில் செயல்பட்டனர். இந்த நிலைமையை சகிக்க முடியாத தோட்டத்துரை போராட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

ஆம்...1961ம் ஆண்டு நவம்பர் மாதம் ஒரு ஞாயிற்றுக் கிழமை காலை 9-00 மணியளவிலே எதுவிதமான போராட்டமோ, தகராரோ இல்லாமல் தொழிலாளர்கள் அமைதியாக வீடுகளில் இருந்தனர். திடீரென தோட்டத்திற் குள் ஜீப்புக்களில் போலிசார் வந்து தொழிலாளர்களின் குடியிருப்புகளுக்கு அருகில் இறங்கி காரணமின்றி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். ஏதோ அசம்பாவிதம் நடந்து கொண்டிருக்கிறது என்பதை அறிய தொழிலாளர் கள் லயங்களைவிட்டு வெளியில் வந்து பார்த்தனர். போலிசார்களோ எதுவித தயக்கமுமின்றி வெளியில் வந்த தொழிலாளர்கள் மீது சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

போலிசாரின் கட்டுப்பாடற்ற இத்துப்பாக்கிப் பிரயோகத்தின்போது நான்கு தொழிலாளர்கள் குண்டடி பட்டு ஸ்தலத்திலேயே மாண்டார்கள். இறந்தவர்கள் ஆராயி, நடேசன், செல்லையா, மாரியப்பன் ஆகியோர். திடீரென எழுந்த இந்த ஆயுதப் போராட்டத்தில் தொழிலாளர்கள் கதிகலங்கிப் போனார்கள். இச்செய்தியை வெளியிடங்களுக்கு அறிவிக்கக் கூட முடியாதவாறு நகருக்குள் செல்லும் சகல வழிகளும் தடைசெய்யப்பட்டது, பக்கத்து தோட்டத்திற்கு எப்படியோ செய்தி எட்டியது. அவர்கள் மூலமாக துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமான செய்தி நாடு பூராவும் பரவியது. போலிசாரின் இத்துப் பாக்கிப் பிரயோகத்தைக் கண்டித்து தொழிலாளர்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முறையே மாபெரும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்தனர்.

இத்துப்பாக்கிப் பிரயோகத்தின் பின்பு தொழிலாளர்கள் வெளியார்களின் தாக்குதலுக்கு உள்ளாகினர். உடனடியாக கம்பளை ஏ. எஸ். பி.க்கு அறிவிக்கப்பட்டது. அவர் தலைமையில் போலிசார் லெட்சுமித் தோட்டத்திற்கு விரைந்தனர். வெளியார்களின் தாக்குதலுக்கு உள்ளான தொழிலாளர்கள் குடும்பத்துடன் தோட்டத்தைவிட்டு வெளியேறினர். இச்செய்தி தொழிற்சங்கத் தலைவர்களுக்கு உடனடியாக அறிவிக்கப்பட்டது. உடனடியாக தலைவர் வீ. கே. வெள்ளையன் அவர்கள் லெட்சுமித் தோட்டம் சென்று அங்கு நடந்துள்ள நிகழ்வுகளை நேரில் பார்வையிட்டதோடு, நீதிபதி விசாரணையிலும் தொழிலாளர்கள் சார்பில் கலந்து கொண்டார். அத்தோடு, நான்கு பேருடைய சடலங்களையும் பொறுப்பெடுத்துக் கொண்டார்.

இத்துப்பாக்கிப் பிரயோகத்தை கேள்விப்பட்டு பல தொழிற்சங்கத் தலைவர்கள் தோட்டத்திற்கு நேரடியாக வருகை தந்தனர். இதில் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, பீட்டர் கெனமன் போன்றவர்களும் அடங்குவர். இத்துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமாக விசாரணை செய்ய தனி நபர் கமிட்டிகள் நியமிக்கப்பட்டன. இலங்கையின் தலைசிறந்த வழக்கறிஞர்களான அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் உட்பட பலர் கலந்து கொண்டார்கள். நீதிமன்றத்திலும் வழக்கு நடந்தது. நீதிமன்றம், போலிசார் சென்ற வாகனத்தையும், போலிசாரையும் தொழிலாளர்கள் தாக்கியதால் போலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேர்ந்ததென்று தீர்ப்பை வழங்கியது. அதேபோன்று தனி நபர் கமிட்டியின் தீர்ப்பு தோட்டத்துரை ஹாலிக்குச் சாதகமாகவே அமைந்தது.



இக்கால கட்டத்தில் நாவலப்பிட்டிய இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதியாக திரு. பி. வி. கந்தையா அவர்கள் (இவர் இப்போது தொழிலாளர் தேசிய சங்கப் பொதுச் செயலாளராக கடமையாற்றுகிறார்) கடமையாற்றினார். போராட்டத்தின் போதும், வெளியேற்றத்தின் போதும் தொழிலாளர்களை ஆதரித்து பாதுகாப்புக் கொடுத்தார். இவருக்குத்துணையாக நாவலப்பிட்டிய மாவட்டத்தைச்சேர்ந்த தொழிலாளர்கள்சங்க பேதங்களை மறந்து தோட்டத் தொழிலாளர்களின் போராட்டத்திற்கு உறுதுணையாக ஆதரவும், உணவுப் பொருட்களையும் வழங்கினார்கள்.

1961ம் ஆண்டு நாவலப்பிட்டி நகரையே அதிர்ச்சியடையச் செய்த போராட்டம் லெட்சுமி தோட்டப் போராட்டமாகும்.

இப்போராட்டத்தின்போது மரணமடைந்த நான்கு தொழிலாளாகளின் இறுதிக்கிரியைகளில் ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் கலந்து கொண்டார்கள். தொழிற்சங்கத் தலைவர்கள் அஞ்சலி உரை நிகழ்த்தினார்கள்.

தொழிற்சங்க வரலாற்றில் தொழிலாளர்களுக்கெதிரான அடக்குமுறையை எதிர்த்து நடந்த மாபெரும் போராட்டம் இதுவாகும். இப்போராட்டத்தைப் பற்றி மலையக நாடோடிப் பாடகர்களான கோவிந்தசாமித் தேவர், பெரியாம்பிள்ளை போன்றவர்கள் பாடல்கள் இயற்றி மலையகம் முழுக்க எதிரொலிக்கச் செய்தனர். தொழிற்சங்கத்தைத் தோட்டங்களில் ஸ்தாபிக்க தொழிலாளர்கள் எத்தகைய போராட்டங்களை நடத்தினார்கள் என்பதும், அவர்களுக்கு எதிராக நிர்வாகம் கையாண்ட நடவடிக்கைகள் எத்தகையது என்பதும் தெளிவாக இப்போராட்டத்தின் மூலம் நிரூபனமானது.

www.tamilarangam.net



**1964ம் ஆண்டின் அடக்குமுறைக்கு எதிராக எழுந்த போராட்டம்**

மாத்தளை மாவட்டத்தைச் சேர்ந்த கந்தநுவர தோட்டத்தில் நிர்வாகத்தின் அடக்கு முறைக்கெதிராக தொழிலாளர்கள் திரண்டெழுந்து 1964ம் ஆண்டு போராட்டத்தில் குதித்தனர். இப்போராட்டத்தில் முதலாளிமார்களின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு அழகர், ரெங்கசாமி ஆகிய இரு தொழிலாளர்கள் பலியாகினர்.

இத்தோட்டம் கம்பெனிக்குச் சொந்தமான தோட்டம். இதை 1962ம் ஆண்டு மாத்தளை மீசான் கம்பெனி விலைக்கு வாங்கியது. இத்தோட்டத்தில் தொழிலாளர்கள் ஏற்கனவே அனுபவித்து வந்த பல உரிமைகளையும் சலுகைகளையும் புதிய நிர்வாகத்தினர் பறித்து, தொழிலாளர்களை அடிமைப்படுத்த முனைந்தனர். இதைத் தொழிலாளர்கள் ஆட்சேபித்துதடுக்க நடவடிக்கை எடுத்தனர்.

இதனால் ஆத்திரமுற்று குமுறிய தோட்ட நிர்வாகம் காட்டுமிராண்டித் தனமான செயல்களிலும், பலாத்கார நடவடிக்கைகளிலும் இறங்கியது. இத்தோட்டத்தில் பெரும் பகுதி தொழிலாளர்கள் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் அங்கத்துவம் வகித்தனர். இவர்கள் தோட்ட நிர்வாகத்தின் அடக்கு முறைக்குப் பயந்து அதன் நடவடிக்கைக்கு ஆதரவாகச் செயல்படத் தொடங்கினர்.

தோட்ட நிர்வாகி அம்சார், அமிர் ஆகிய இருவரும் இத்தொழிலாளர்களின் ஆதரவோடு தோட்டத்தில் தொழிலாளர்களைத்தங்கள்இஸ்டம்போல்ஆட்டிப்படைத்தனர். கன்னிப் பெண்களைப் பலாத்காரம் செய்வதிலும் ஈடுபட்டனர். இதற்கெதிராக கம்யூனிஸ்ட் கட்சி தொழிற் சங்கம் எடுத்த நடவடிக்கைகள் அனைத்தும் பண பலத்தாலும், நகரிலுள்ள காடையர்களின் உதவியோடும் நிர்மூலமாக்கி வந்தனர்.



இறுதியாக 1963ம் ஆண்டு டிசம்பர் மாதம் தொழிற் சங்கக் காரியாலய அதிகாரி (லேபர் கொண்ட்ரோல்) மூலமாக தோட்டத்தில் முழு தொழிற்சங்கத்தின் பலத்தையும் பரீட்சிக்க வாக்கெடுப்பு நடத்த ஏற்பாடு செய்யப் பட்டது. இந்த வாக்கெடுப்பில் கம்யூனிஸ்ட் கட்சியின் தொழிற்சங்கத்திற்கே பெரும்பான்மை பலம் இருந்ததும் நிரூபிக்கப்பட்டது. இவ்வாக்கெடுப்பின்போது தோட்ட நிர்வாகம் செய்த பல தில்லு முல்லுகளுக்கும் அஞ்சாமல் தொழிலாளர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொண்டது குறிப்பிடத் தக்கது.

தொழிலாளர்களின் துணிவுமிக்க இந்த நடவடிக்கையால் ஆத்திரம் கொண்ட தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களை மேலும் இம்சைப்படுத்த முனைந்தது. இதற்கு சற்றும் சளைக்காத தொழிலாளர்கள் தொடர்ந்தும் உரிமைகளுக்காகப் போராடினார்கள். (லேபர் கொண்ட்ரோல்) தொழிற்காரியாலய விசாரணை எல்லாம் பலனளிக்காமல் போகவே, 1964ம் ஆண்டு மே மாதம் 26ம் திகதி வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்தனர்.

தோட்டநிர்வாகத்திற்கு ஆதரவாகஇருந்த இ.தொ.கா. அங்கத்தவர்கள் வேலை நிறுத்தத்திற்கு எதிராகவேலைக்குச் சென்றனர். வேலைக்குச் சென்ற நாற்பது தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புக் கருதி, ஆயுதம் தாங்கிய தோட்டக் காவல்காரர்களுடன் நகரிலுள்ள காடையர்களையும் அவர்களைச் சுற்றி நிறுத்தியிருந்தனர். மறுநாள் வேலைக்குப் போகும் தொழிலாளர்களை வேலைக்குப் போக வேண்டாம் என்றும், ஒவ்வொருவரையும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுமாறும் வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள் தயவுடன் கேட்டுக் கொண்டார்கள். ஆனால் அதையும் மீறி பாதுகாப்பு ஆட்களுடன் வேலைக்குச் சென்றனர். தொழிலாளர்கள் இவர்களை வழிமறித்து நின்றார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இதனால் ஆத்திரமுற்ற ஆயுதம் தாங்கிய பாதுகாப்பு ஆட்கள் வேலைக்குச் செல்வதைத் தடுக்கின்றனர் என்ற ஆத்திரத்துடன் அத்தொழிலாளர்களை நோக்கி சரமாரி யாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். இதனால் சிதறுண்டு ஓடிய தொழிலாளர்களில் அழகர், ரெங்கசாமி ஆகிய இருவரும் துப்பாக்கிக் குண்டடிப்பட்டு பலியாகினார் கள். இத்துப்பாக்கிப் பிரயோகம் 28.5.64ல் இடம்பெற்றது.

இந்த இரண்டு தொழிலாளர்களின், உடல்கள் உடனடியாக மாத்தளை அரசாங்க மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிரேதப் பரிசோதனைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இச்செய்தி கேட்டு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் தோழர் பீட்டர் கெனமன் அவர்கள் முக்கிய உறுப்பினர்களுடன் கொழும்பிலிருந்து மாத்தளை அரசாங்க மருத்துவமனைக்குச் சென்று இரண்டு தியாகிகளுக்கும் இறுதி அஞ்சலி செலுத்தியதோடு பிரேதத்தையும் பொறுப்பெடுத்தனர். இக்காலம் இனக் குரோதம் வெளிப்படுத்தப்படாத காலமாதலால், இவர் களுக்கு அஞ்சலி செலுத்த தொழிலாளர்கள் என்ற உணர்வோடு ஆயிரக்கணக்கான தமிழ்— சிங்கள தொழிலாளர்கள் அங்கு அணி வகுத்து தோட்ட முதலாளிமார்களின் துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

இத்தியாகிகளின் பூதவுடல்களை இரண்டு லொறிகளில் வைத்து மலர் தூவி மாத்தளை நகரை தொழிலாளர்கள் புடைசூழ வலம் வந்து, பத்து மைல் தொலைவிலுள்ள கந்தநுவர தோட்டத்திற்கு ஊர்வலமாக எடுத்துச் சென்றனர். வழிநெடுகிலும், சிங்கள, தமிழ் மக்கள் இவர் களுக்கு அஞ்சலி செலுத்தினார்கள். இத்தியாகிகளின் பூத உடல்கள் பொது மக்களின் அஞ்சலிக்காக அவர்களின் இல்லத்தில் வைக்கப்பட்டன. அன்றுதான் அகிலமே அதிர்ச்சியடைந்த செய்தியும் வெளிவந்தது. ஆம்...



பாரதத்தின் முடிசூடா மன்னன் ஸ்ரீ ஜவகர்லால் நேரு காலமான செய்தியே அது. இச்செய்தி கேட்டு அகிலமே கண்ணீர் வடித்தது. தோட்டத் தொழிலாளர்கள் அனைவரும் வேலைக்குச் செல்லாது இத்துயர சம்பவத்தில் பங்கு கொண்டார்கள். ஸ்ரீ ஜவகர்லால் நேருவின் பூதவுடல் தகனம் செய்யப்பட்ட அதே தினத்தில்தான் கந்தநுவர தோட்டத்தில் துப்பாக்கி சூடுபட்டுப் பலியான அழகர், ரெங்கசாமி ஆகிய இரு தியாகிகளின் பூதவுடல் களும் நல்லடக்கம் செய்யப்பட்டன.

இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட தோழர் களான பீட்டர் கெனமன், கொல்வின் ஆர். டி. சில்வா போன்ற தலைவர்கள் அங்கு நடந்த அஞ்சலிக் கூட்டத்தில் தோட்ட நிர்வாகத்தின் அடக்கு முறையையும், துப்பாக்கிப் பிரயோகத்தையும் வன்மையாகக் கண்டித்தனர். இக்காலத் தில் இப்போராட்டத்திற்கு தலைமை வகித்த தோட்டத் தலைவர் தோழர் சுந்தரராஜ் தொழிலாள வர்க்க உணர்வுடைய ஒரு தலைவராகத்திகழ்ந்தார். இத்துப்பாக்கிப் பிரயோகத்தின் பின்பும் தொழிலாளர்கள் தொடர்ந்தும் இருபது நாட்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தினர்.

இப்போராட்டத்தில் தோட்ட நிர்வாகிகளான அம்சார், அமிர் ஆகிய இருவரும் தொழிலாளர்களால் தோட்டத்தைவிட்டு வெளியேற்றப்பட்டார்கள். இதன் பின்பு இது தொடர்பான வழக்கு மாத்தளைநீதிமன்றத்தில் ஒரு வருடத்திற்கு மேலாக நடைபெற்றது. அற்ப சலுகை களுக்காக நீதிமன்றத்தில் தொழிலாளர்களின் போராட்டத் திற்கு எதிராக சாட்சியம் அளிக்கப்பட்டதால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபர்களின் பேரில் இருந்த வழக்கை நீதிபதி தள்ளுபடி செய்து விடுதலை செய்தார். இதனால் தொழிலாளர்களின் போராட்டத்தைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. தொழிலாளர்களால் வெளியேற்றப் பட்ட தோட்ட நிர்வாகி அம்சார் திருமணம் முடித்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பின்பும் தோட்டத்திற்குள் வருவதற்கு தொழிலாளர்களின் ஒத்துழைப்பைக் கோரியதோடு, அவர்களின் ஒத்துழைப் போடு தோட்டத்திற்கு வந்தார்.

தோட்டங்கள் தனியாருக்குச் சொந்தமாக இருந்தக் காலத்தில் பொலிசாரும், தொழில் இலாக்காவும் முதலாளி மார்களுக்கு ஒத்துழைப்பை நல்கத் தவறியதே இல்லை என்பதை இப்போராட்டம் நன்கு உணர்த்துகின்றன.

**1967ம் ஆண்டு உத்தியோகஸ்தர்களின் பாகுபாட்டை எதிர்த்து நடத்திய ஆறு மாதகாலப் போராட்டம்**

முதலாளிமார்களின் அடக்கு முறைக்கெதிராக தொழிலாளர்கள் நடத்திய போராட்டம் வரலாற்றில் பெரும் பகுதி.

தோட்டங்களில் இரண்டு தொழிற்சங்கங்கள் இருந்தால் முதலாளிமார்கள் தங்களுக்கு வேண்டிய ஒரு தொழிற் சங்கத்தைப் பாதுகாத்து வருவார்கள். இதன் காரணமாக தோட்டங்களில் தொழிற்சங்கங்களுக்கிடையே போட்டிகள் ஏற்பட்டு தொழிலாளர்கள் மோதிக் கொள்வது வழக்கம். இத்தகைய தொழிலாளர்களுக்கிடையிலான மோதலின் காரணமாக தொழிலாளர்கள் தங்களின் உயிர்களைக்கூட தியாகம் செய்துள்ளனர். இதற்கு மடுல்கெல சின்ன கிளாப்போக்கு தோட்டப்போராட்டம் சான்றுபகர்கின்றது.

இத்தோட்டத்தில் இரண்டு தொழிற்சங்கங்கள் இருந்தன. "ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம்" என்பதுபோல. இத்தோட்டத்தில் இரண்டு தொழிற்சங்கங்கள் இருந்தாலும், தோட்ட உத்தியோகஸ்தர்கள் ஒரு தொழிற்சங்கத்தைத் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு மற்ற தொழிற்சங்க உறுப்பினர்களுக்குத் தொழில் பாகுபாட்டையும், பல தொந்தரவுகளையும் கொடுத்து வந்தனர்.



இதனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் இந்தப் பாகுபாட்டை எதிர்த்து ஆறு மாதகாலம் பல்வேறு நடவடிக்கைகளிலும், வேலை நிறுத்தப் போராட்டங் களிலும் குதித்தனர்.

இத்தோட்டத்தில் அங்கத்தினர் பலத்தைக் கொண்ட தொழிற்சங்கம் தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்காததன் காரணமாகவே தொழிற்சங்கம் உருவாக வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதன் காரணமாகத் தொழிலாளர்களும், உத்தியோகஸ்தர்களும் பலதடவை நேரடி மோதல்களைச் சந்திக்க வேண்டிய நிலை உருவாகியது. இதன்காரணமாக அடிக்கடி பன்விலை பொலிசில் புகார் செய்யப்பட்டு இருசாராரும் எச்சரிக்கை செய்யப்பட்டு வந்துள்ளனர். அத்தோடு, நீதிமன்றத்திலும் பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. கருத்து வேறுபாடுகளும், பாகுபாடுகளும், அதிகரிக்கவே இளைஞர் களுக்கும், உத்தியோகதஸ்தர்களுக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டு போராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்தது.

இந்தத் தோட்டத்தில் ஆண்—பெண் தொழிலாளர்கள் வேலைத் தளத்திலிருந்து கொழுந்து நிறுத்துவிட்டு பகல் உணவிற்காக வீடுகளுக்குச் செல்லும் போது கணக்கப்பிள்ளை (கே. பி.) வீட்டைக் கடந்துதான் செல்ல வேண்டும். ஒருநாள் (8-11-67) இவர்கள் அப்படிச் செல்லும் போது கணக்கப்பிள்ளை வீட்டு வாசலிலிருந்த நாய் ஒன்று ரோட்டுக்கு வந்து, அவ்வழியாகச் சென்ற தொழிலாளி ஒருவரைக்கடித்து விட்டது. இதனால் பக்கத்திலிருந்தவர்கள் கோபத்தால் அந்த நாயை அடித்துக் கொன்று விட்டார்கள். இதனால் ஆத்திரம் கொண்ட கணக்கப்பிள்ளையின்மனைவி வீட்டிலிருந்து வெளியே வந்து தொழிலாளர்களை தூசண வார்த்தைகளால் ஏசினாள். தொழிலாளர்களும் திரும்ப ஏசத் தொடங்கி விட்டனர். இந்த சத்தம் கொழுந்து நிறுத்துக் கொண்டிருந்த கணக்கப்பிள்ளையின் காதில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கேட்டது. தன் மனைவியோடு ஏதோ தகராறு செய்கிறார்கள் என்று நினைத்த கணக்கப்பிள்ளை ஆத்திரத்தோடு ஓடி வந்தார். வீட்டினுள் பின்புறமாக நுழைந்து தனக்கு சொந்தமான துப்பாக்கியை எடுத்துக் கொண்டு தொழிலாளர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்.

இத்துப்பாக்கிப் பிரயோகத்தை சற்றும் எதிர்பார்க்காத தொழிலாளர்கள் கணக்கப்பிள்ளையை நோக்கி கற்களை வீச முற்பட்டனர். அவர் மீண்டும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவே, சோனை என்ற பதினெட்டு வயதுடைய இளம் தொழிலாளி ஸ்தலத்திலேயே குண்டடிபட்டு மரணமடைந்தார். இவரின் சகோதரர் காளிமுத்து காலில் குண்டுபட்டு காயப்பட்டிருந்தார். இத்துப்பாக்கிப்பிரயோகம் போலிசாருக்குத் தெரிவிக்கப்பட்டது. உடனடியாக ஸ்தலத்திற்கு வந்த பொலிசார் விசாரணை நடத்தி இரு சங்கங்களையும் சேர்ந்த ஒன்பது தொழிலாளர்களைக் கைது செய்தனர். இச்செய்தி கேட்டு இந்தத் தோட்டத்தைச் சேர்ந்த எட்டு டிவிசன் தொழிலாளர்களும் துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டித்தும், சூடுபட்டு இறந்த சோனைக்கு அனுதாபம் தெரிவிக்கும் முகமாகவும் மூன்று நாட்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.

தொழிலாளர்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த சோனையின் பூதவுடல் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர் புடைசூழ தோட்டப் பொது மயானத்தில் 10-11-67 அன்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

இத்தியாகிகளின் இறுதிக் கிரியைகளில் தொழிற்சங்கத் தலைவர்கள் எவரும் கலந்து கொள்ளாமல் அவமதிப்பது போல் நடந்து கொண்டனர். அந்த சமயத்தில் தோட்ட முகாமையாளராக இருந்தவர் வெள்ளைக்காரர் ஈ.சீ. கொம்சார் என்பவராகும்.



இத்துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பாக பன்விலை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. சட்டத்தரணி மூலமாக கைது செய்யப்பட்டவர்களில் ஆறு பேர் மூன்று மாதத்தின் பின்பு பிணையில் விடுவிக்கப் பட்டனர். அதோடு, தேவன் கண்டெக்டர், செல்லத்துரை கே.பி., பூபதி ஆகிய மூவரும் ஒன்பது மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டு அதன் பின்பு பிணையில் அனுப்பப்பட்டனர்.

பன்விலை நீதிமன்றத்தில் தொடர்ந்த இந்த வழக்கின் இறுதியில் தேவன் கண்டெக்டர், செல்லத்துரை கே பி., பூபதி ஆகிய மூவரும் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டது.

இத்தீர்ப்பை எதிர்த்து எதிரிகள் கண்டி உயர்நீதிமன்றத்தில் அப்பீல் செய்தனர். அட்வகேட் சிவானந்தம், சட்டத்தரணி விஜேதுங்க இருவரும் தொழிலாளர்கள் சார்பில் வாதாடி மாவட்ட நீதிமன்றத் தீர்ப்பை ஏற்குமாறு செய்தனர். இத்தீர்ப்பை எதிர்த்து எதிரணிகள் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் அப்பீல் செய்தனர். இவ்வழக்கு மூன்று வருடங்கள் தொடர்ந்து நடந்தது. தொழிலாளர்கள் சார்பில் திரு. எஸ். நடேசன் கியூ. சி. ஆஜராகி வாதாடி வெற்றி பெற்றுக் கொடுத்தார். இதன் பின்பு எதிரணிகள் கவர்னர் ஜெனரல் அவர்களுக்கு கருணை மனு தாக்கல் செய்தார்கள். இதை பரிசீலனை செய்த கவர்னர் ஜெனரல் மன்னிப்பு வழங்க ஏற்பாடு செய்தார்.

மரணமான சோனை அழகன்-காளியம்மா தம்பதிகளின் மகனாவார். இவருக்கு செல்லையா, காளிமுத்து, ஆரோக்கியம் என்ற மூன்று சகோதரர்களும், சின்னகாளியம்மா, லெட்சுமி என்ற இரு சகோதரிகளும் இருக்கின்றனர். இந்தக் குடும்பத்தில் சோனை என்பவர் கடைசியாகப் பிறந்தவர். இத்தியாகியின் மரணத்தால் அந்தத் தோட்டத்தில் பாகுபாடு என்ற பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது. ஆனால் இவரின் இறுதிக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கிரியைகளில் தொழிற்சங்க மாவட்டப் பிரதிநிதிகள் மாத்திரமே கலந்து கொண்டார்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

தோட்டங்களில் தொழிலாளர்கள் பல்வேறுப்பட்ட பிரச்சினைகளை வென்றெடுப்பதற்காக மாத்திரம் போராட்டங்கள் நடத்தி உயிர்த் தியாகம் செய்யவில்லை. தோட்டங்களில் தொழிலாளர்களுக்கு ஊழியர்களாலும், மேற்பார்வையாளர்களாலும் காட்டப்படும் பாகுபாட்டை எதிர்த்தும் தொழிலாளர்கள்போராட்டம் செய்துள்ளார்கள் அத்தகையதோர் போராட்டத்தின் விளைவாகவே சோனை என்ற இளம் காளை பலியாகி உள்ளார். இவர் போல் இன்னும் எத்தனையோ தியாகிகள் தங்களின் உயிர்களைப் பறிகொடுத்துள்ளார்கள். இத்தியாகிகளின் வரிசையில் மடுல்கெல சின்ன கிளாப்போக்கு தோட்ட இளம் சிங்கம் சோனையின் நாமம் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது.

வாழ்க அன்னாரின் நாமம்.

**1968ம் ஆண்டில் வெள்ளைக்கார முதலாளியின் அடக்கு முறையை எதிர்த்து நடத்திய சரித்திரப் பிரசித்திப் பெற்ற போராட்டம்.**

1939ம் ஆண்டு தொழிற்சங்கம் ஸ்தாபித்ததாக சரித்திரம் இருந்தாலும், இரத்தினபுரி பகுதியில் தொழிற் சங்கத்தை அமைப்பதில் பலமான எதிர்ப்பும், அடக்கு முறையும் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்ததால், தொழிற் சங்கம் அமைப்பதற்கு எவரும் முன்வரவில்லை. தோட்டங் களில் வெள்ளைக்கார துரைமார்களின் கெடுபிடிகள், அடக்கு முறைகள் தலைவிரித்தாடியது. தொழிலாளி காலை ஆறுமணிக்கெல்லாம் தொழிலுக்கு வர வேண்டும் அப்படி வரப் பிந்தினால், வேலை இல்லை என்பது மாத்திரமல்ல, தொழிலுக்கு நேரத்தோடு வரவில்லை என்பதற்காக தண்டனையும் வழங்கப்பட்டு வந்த காலம் அது. இந்த அடக்கு முறையை எதிர்க்க 1945ம் ஆண்டுவரை எவருமே முன்வரவில்லை.



"இக்காலக் கட்டத்தில்தான் வெள்ளைக்கார துரை மார்களின் அடக்கு முறைக்கு முடிவு கட்ட வேண்டுமென்ற உறுதியோடு இந்தியாவிலிருந்து குட்டிப்பிள்ளை என்பவர் இலங்கைக்கு வந்தார். இங்கு தோட்டத் தொழிலாளர் களுக்கு நடக்கும் கொடுமைகளைக் கண்டு உள்ளம் குமுறினார். அத்தோடு நின்று விடாமல், இரகசிய ரகசியமாக இரத்தினபுரியைச் சேர்ந்த மயிலிட்டியா என்ற தோட்டத்தில் 1945ம் ஆண்டு பிற்பகுதியில் இலங்கை, இந்தியன் காங்கிரஸ் ஸ்தாபனத்தில் 800 தொழிலாளர்களை சேர்த்து அதன் மூலமாக தொழிற்சங்கத்தையும் அமைத்து அதற்கு அவரே தலைவராகவும் இருந்து செயல்பட ஆரம்பித்தார். தொழிற்சங்கம் அமைக்கப்பட்டதை கேள்விப்பட்ட மயிலிட்டியா தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களை மேலும் வதைக்க ஆரம்பித்தது. தொழிலாளர்களின் பிரச்சினைகளும் தீர்ந்தபாடில்லை.

வேலைக்குப் பிந்தினால் விரட்டு, கணக்கு முடிக்கா விட்டால் அரை பெயர் போடு, மருத்துவ வசதி, குடிதண்ணீர் வசதி, மலசலக்கூட வசதியின்மை, ஓவர்டைம் போன்றவைகள் இல்லாது ஒருநாள் கூலிக்கு காலை ஆறு மணி முதல் மாலை ஆறு மணிவரை உழைக்க வேண்டும்.

தொழிலாளர்களும் விடாப் பிடியாக தொழிற்சங்கப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தார்கள். முதலாளி மார்களும் அசைந்து கொடுப்பதாகத் தெரியவில்லை. ஆனால் பல தோட்டங்களில் தொழிற்சங்கம் ஸ்தாபித்து போராட்டத்தை தொடங்கினார்கள். அதன் மூலம் அடக்குமுறை பிடித்தளத்திலிருந்து தொழிலாளர்கள் சிறிது சிறிதாக விடுபட்டு உரிமைக்குப் போராடினார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1955ம் ஆண்டு இலங்கை—இந்தியன் காங்கிரஸ் இரண்டாகப் பிளந்தது. தொழிலாளர்களின் பிரச்சனைகளும் தலைதூக்கின. பிரிந்த காங்கிரஸ் மீண்டும் ஒன்றாகி அதே ஆண்டு பிற்பகுதியில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் என இரண்டாகப் பிளவுபட்டபோது, மயிலிட்டியா தோட்டத் தொழிலாளர்கள் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸில் அங்கத்துவம் பெற்றனர்.

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் நடத்திய பஞ்சப்படி போராட்டத்தில் தொழிலாளர்களின் வேறு சில பிரச்சினைகளையும் முன்வைத்து மயிலிட்டிய தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்தனர். இப்போராட்டம் தொடர்ந்து மூன்று மாத காலத்திற்கு நடந்தது.

வேலை நிறுத்தம் செய்த முதல் வாரமே ரேசன் அரிசி நிறுத்தப்பட்டது. இந்த தோட்டத்திலிருந்து வெள்ளைக்கார சின்னதுரையாகிய ஸ்கொட்டின் என்பவரை வேறு டிவிசனுக்கு இடமாற்றம் செய்துவிட்டு, குணதிலக்கா என்பவரை சின்னதுரையாக மயிலிட்டிய டிவிசனுக்கு கார்க்கின் என்ற வெள்ளைக்கார பெரியதுரை ஏற்பாடு செய்தார்.

இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தை முறியடிப்பதோடு, தொழிலாளர்கள் தொழிற்சங்கத்தில் அங்கம் வகிப்பதைத் தவிர்த்து நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் கொண்டுவர வேண்டுமென்ற நிபந்தனையோடுதான் இந்த ஏற்பாட்டை பெரியதுரை செய்திருந்தார்.

குணதிலக்க சின்னதுரையாகப் பொறுப்பேற்ற பின்பு வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர்கள் லயத்தை விட்டு வெளியில் வருவது அனுமதிக்கப்படவில்லை. தோட்டத்தைச் சுற்றியிருந்த கிராமத்தவர்கள் கைக்கூலிகளாக வேலைக்கு அழைத்து வரப்பட்டனர். இப்படி



வரவழைக்கப் பட்ட தொழிலாளர்களுக்கு பங்களாவில் காவல் வேலை, தோட்ட வேலை, தொழிற்சாலை காவல் வேலை, தேயிலை கன்று நாட்டுதல், தவரணையில் வேலை போன்றவைகள் வழங்கப்பட்டன. நாட்கூலிக்கு வந்த கிராம தொழிலாளர்கள் முறைப்படி வேலை செய்யாவிட்டாலும், ஒரே இடத்தில் கும்பலாகத் திரண்டு வேலை செய்தனர். வேலை நிறுத்தக் காரர்கள் லயத்தைவிட்டு வெளியில் போய் வருகிறார்களா என்பதைக் கண்காணிக்க உளவாளிகளும் நியமிக்கப்பட்டார்கள். துணிந்த ஒரு சிலரே அருகிலுள்ள நிலமை கடைக்குச் சென்று உணவுப் பொருட்களை வாங்கி வந்தனர்

அப்படித் துணிந்தவர்களில் முதன்மையானவர்தான் தோட்டக் கமிட்டித் தலைவராக இருந்த பத்தொன்பது வயது கட்டிளங்காளையான அந்தோனிசாமி என்ற இளைஞன். பட்டினியால் தொழிலாளர்கள் வாடுவது வெளியார்களுக்கும், தொழிற்சங்கத்திற்கும் தெரிவிக்க முடியாத நிலை. அடுத்த தோட்டத்திற்குப் போக முடியாத நிலை. இவைகள் காரணமாக தோட்டத் தொழிலாளர்கள் பெரிதும் கஷ்டப்பட்டார்கள். ஆனால் இவர்களின் கஷ்ட நிலை தோட்டத்தில்அமைந்திருந்ததேவாலயத்திற்குபூசைக்காக அடிக்கடி போய் வரும் இரத்தினபுரி கத்தோலிக்க தேவாலயகுருவானவர் வண பிதா ஜேக்கப் பெர்னாண்டோ அவர்களுக்கு மாத்திரமே தெரியும். தொழிலாளர்களின் நிலை கண்டு துவண்டு போன பிதா ஜேக்கப் அவர்கள், தோட்டத்து பெரியதுரைகார்க்கின் அவர்களைச் சந்தித்து ரேசன் உணவுப் பொருட்களையாவது வழங்குமாறு கேட்டுள்ளார்.

இதற்கு பெரியதுரை கார்க்கின் அவர்கள், ''நீங்கள் சொல்வதை நாங்கள் செய்கிறோம். ஆனால் அதற்குப் பிரதி உபகாரமாக நீங்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தைக் கைவிட்டு வேலைக்குப் போகும்படி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொழிலாளர்களிடம் சொல்லுங்கள்'' என்று கேட்டுக் கொண்டார். இதற்கு வண பிதா. ஜேக்கப் அவர்கள் மறுப்பு காட்டியதோடு, உடனடியாக இரத்தினபுரி கச்சேரியில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு தொழிலாளர்களுக்கு ரேசன் அரிசியை பெற்றுக் கொடுத்தார்.

வேலை நிறுத்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இரத்தினபுரி தொழில் காரியாலயத்தில் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இப்பேச்சுவார்த்தையில் தொழிற் சங்கமும் தோட்ட நிர்வாகமும் கலந்து கொண்டு பேசியதில் சுமூகமான நிலைமை ஏற்படாததால் வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்ந்தது.

1968ம் ஆண்டு அக்டோபர் 27ம் திகதி காலை 10-30 மணியளவில் தலைவர் அந்தோனிசாமி, மரியதாஸ், முத்தையா, கங்காணி மகன் கருப்பையா, பைப் மெக்கானிக் அந்தோனி ஆகியோர் கிராமத்திலுள்ள கடைக்குச் சென்று சாமான்களை வாங்கிக் கொண்டு திரும்பும்போது தேயிலை தொழிற்சாலையை காவல் வேலை புரிந்தவர்களில் ஒருவர் இவர்களோடு தகராறு செய்ததோடு துப்பாக்கிப் பிரயோகமும் செய்தார். இத்துப்பாக்கிப் பிரயோகத்தின் போது தலைவர் அந்தோனிசாமி இலக்காகி ஸ்தலத்திலேயே மரணமடைந்தார்.

இத்துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த மற்ற இருவரையும் மரியதாஸ் என்பவர், காட்டு வழியாக இரத்தினபுரி மருத்துவமனையை அடைந்து அங்கு ஒப்படைத்துவிட்டு, அந்தோனிசாமியின் மரணச் செய்தியை வண பிதா ஜேக்கப் பெர்னாண்டோ அவர்களிடம் அறிவித்தார். அதை கேள்விப்பட்ட வண, பிதா அவஸ்தைப் பூசைக்காக தோட்டம் வந்து சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு சென்று அவஸ்தை பூசை நடத்தினார். தொழிலாளர்கள் அந்தோனிசாமியைப் பார்க்க அனுமதிக்கப்படவில்லை. இச்செய்தியை



நிர்வாகம் பொலிசிற்கு அறிவித்தது. மாலை நான்கு மணியளவில் தோட்டத்திற்கு போலிஸ் வந்த பின்பே தொழிலாளர்கள் நடமாட்டம் இருந்தது. இதுவரை இவரின் தாய்-சகோதரர்கள் கூட அந்தோனிசாமியின் பூதவுடலைப் பார்க்க அனுமதிக்கப்படவில்லை.

மரண விசாரணை நடத்திய வைத்திய அதிகாரி அலவாங்கு குத்தி மரணமடைந்துள்ளதாகத் தீர்ப்பு வழங்கி விட்டார். இளைஞன் அந்தோனிசாமியின் பூதவுடல் வண. பிதா ஜேக்கப் பெர்னாண்டோ அவர்கள் தலைமையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. தோட்டத் தொழிலாளர்கள் மாத்திரமே இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டார்கள். தொழிற்சங்கப் பிரமுகர்கள் எவரும் சமூகமளிக்கவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது.

இக்கொலை தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு சந்தேகத்தின் பேரில் நாற்பத்தி மூன்று தொழிலாளர்கள் போலிசாரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள். தொழிலாளர்கள் தலைமை இன்றி அனாதைகளாகத்தவித்தனர். ஒரு சிலர் கிராம மக்களின் ஆலோசனைபடி (காலஞ் சென்ற) சட்டத்தரணி சரத் முத்தெட்டுவேகம அவர்களைச் சந்தித்து முறையிட்டனர். அவர் தொழிலாளர்கள் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட தொழிலாளர்களை விடுதலை செய்தார். தொழிலாளர்கள் அதன் பின்பு ஐக்கிய தோட்டத் தொழிலாளர் யூனியனில் சேர்ந்தனர். இக்கொலை தொடர்பான வழக்கு தொடர்ந்து நடந்தது.

அலவாங்கால் குத்தப்பட்டுத்தான் அந்தோனிசாமி மரணமடைந்தார் என்ற கூற்றை நேரில் பார்த்த சாட்சி மரியதாஸ் மறுத்து, துப்பாக்கியால் சுடப்பட்டே அந்தோனிசாமி மரணமடைந்தார் என்ற உண்மையைவெளியிட்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இதனால் வழக்கில் புதிய திருப்புமுனை ஏற்பட்டது. சரத் முத்தெட்டுவேகம வழக்கை நடத்தினார்.

நீதிமன்றத்தில் பல்வேறுபட்ட குறுக்கு விசாரணை மூலம் உண்மையான சாட்சியை பொய்யாக்கி விட்டார்கள். நிர்வாகத்தின் சார்பில் சாட்சியமளித்தவர், நிர்வாகத்தின் நன்மதிப்பைப் பெற்றவர். வழக்கு சாட்சியங்கள் நிரூபிக்கப்படாததால் வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. நிர்வாகத்திற்குச் சாட்சியாக மாறியவரை சகல மரியாதையோடும் நிர்வாகம் இந்தியாவுக்கு அனுப்பி வைத்தது.

வழக்கு முடியும்வரை பிணையில் எடுக்கப்பட்ட 45 தொழிலாளர்களுக்கும் வேலை கொடுக்க நிர்வாகம் மறுத்து விட்டது. இது தொடர்பாக இரத்தினபுரி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, வேலை வழங்காத நாட்களுக்கு சம்பளம் வழங்குவதோடு, உயர்நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டது.

துப்பாக்கிப் பிரயோகத்தின்போது இறந்த அந்தோனி சாமிக்கு தகப்பனார் இல்லை. தாய் அன்னம்மாள். மூன்று சகோதரர்கள் அருமைநாயகம், சிலுவைராஜ், கபரியல் ஆகியோரும் ஒரேயொரு சகோதரி பாக்கியம் இந்த ஐவருமே இருந்தனர். இந்த முழுக் குடும்பமும் அந்தோனி சாமியின் உழைப்பையே நம்பியிருந்தது. இவர்கள் பல கஷ்டங்களை அனுபவித்து பின்னால் பலரின் உதவியோடு சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் தாயகம் சென்று விட்டனர்.

இத்தகைய கொடுமையான போராட்டத்தில் மரணமடைந்த அந்தோனி சாமி உரிமைப் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகள் வரிசையில் சிறப்பான இடத்தைப் பெற்றுக் கொள்கின்றார்.



வாழ்க சின்னப்பன் அந்தோணிசாமி நாமம்.

**1970ஆம் ஆண்டில் பிரசவ வேதனைப்பட்ட ஒரு தாய்க்கு வாகனம் கொடுக்க மறுக்கப்பட்டதை எதிர்த்து எழுந்த போராட்டம்**

தோட்டத் தொழிலாளர்களின் உழைப்பை உறிஞ்சும் தோட்ட முதலாளிமார்கள் இந்த மனிதர்களை மனிதர்களாகக் கருதுவதே இல்லை. அவர்களின் உடல் நோய் வாய்ப்பட்டபோதும்கூட உதவி புரிவதில்லை. அந்தளவிற்குத் தொழிலாளர்களை இம்சித்து அடக்கி ஆண்டு வந்துள்ளார்கள்.

உதாரணத்திற்காக பிரசவ வேதனைப்படும் ஒரு பெண்ணை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லத்தோட்ட நிர்வாகத்திடம் வாகனம் கேட்பதென்றால், அதற்கு முன் அவர் குடியிருக்கும் தோட்டத்திலிருந்து ஆறு மைல்களுக்கு அப்பாலுள்ள தோட்ட வைத்தியரிடம் சென்று அனுமதி பெற்றுக் கொண்டுவர வேண்டும்.

இத்தகைய கெடுபிடிகள் பதுளை சீனாக்கொல தோட்டத்தில் நடைபெற்றது. இத்தோட்டத்தில் வாகனம் இருந்தும் நோயாளர்கள் மருத்துவமனை செல்ல வேண்டுமானால், ஆறு மைல்களுக்கு அப்பாலுள்ள குயின்ஸ்டவுன் தோட்டத்திற்குச் சென்று அங்குள்ள வைத்தியரிடம் அனுமதி பெற்று வந்தால் மாத்திரமே வாகனம் வழங்கப்படும். இந்தக் கெடுபிடியால் பல்வேறுபட்ட நோயாளர்கள் பெரும் சிரமத்தை மேற்கொண்டனர். பல பிரசவ தாய்மார்கள் உயிருக்காகப் போராடியிருக்கின்றனர்.

இந்தக் கொடுமையைத் தளர்த்தி அவசர நோயாளர்களுக்குத் தோட்டத்திலுள்ள வாகனத்தைக் கொடுத்துதவ வேண்டுமென்று தோட்டக் கமிட்டியினர் நிர்வாகத்திற்கு விடுத்த கோரிக்கைகள் யாவும் "செவிடன் காதில் ஊதிய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சங்கு'' என்ற கதைபோல் ஆகிவிட்டது. தொழிற்சங்க நடவடிக்கையும் பலனளிக்காமல் போய் விட்டது. இறுதியாக இந்த மனிதாபிமானப் பிரச்சினையைத் திர்க்க தங்கள் பலத்தைக் காட்ட வேண்டிய நேரம் வந்து விட்டதால் தொழிலாளர்கள் இந்த அநீதியை எதிர்த்து வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்தனர். இவ்வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். இவர்கள் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை தோட்டத் தொழிலாளர் (செங்கொடி) சங்கத்தைச் சேர்ந்தவர்களாவார்கள்.

இதன் பின்பும் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாக போராட்டத்தைத் தகர்க்க பல்வேறுபட்ட எதிர் நடவடிக்கைகளை தோட்ட நிர்வாகம் கையாள ஆரம்பித்தது.

தொழிலாளர்கள் எத்தகைய இடுக்கண் வந்தாலும் தைரியத்துடன் போராடி உரிமையைப் பெறுவது என்ற உறுதியோடு போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

இத்தோட்டம் பிரித்தானிய ரஜவல தேயிலை தோட்டக் கம்பெனிக்குச் சொந்தமாக இருந்தது.தோட்டத் துரையாக கடமையாற்றியவர் திரு. சமர்வில் என்பவராகும். பிரித்தானியரின் அடக்கு முறையையும், பிரித்தாளும் தந்திரத்தையும் கொள்கையாகக் கொண்ட இக் கம்பெனி அதிகாரிகளும் தொழிலாளர்களைக் கூறு போட பல திட்டமிட்ட கருங்காலி வேலைகளை செய்ய ஆரம்பித்தனர், என்றாலும் அவர்கள் திட்டம் தொழிலாளர்களின் பலத்தை அசைக்க முடியாது தோல்வி கண்டது.

கம்பெனிகளினதும், முதலாளிமார்களினதும் சுகபோகத்திற்காக உழைத்த தொழிலாளர்களை மனிதர்களாக மதித்து அவர்களுக்கு நோயுற்ற போது உதவ வேண்டியது கம்பெனிகளினதும், முதலாளிமார்களினதும் கடமையாகும். ஆனால் அதற்கு மாறாக கம்பெனி அதிகாரிகளும், முதலாளிமார்களும் மனிதாபிமான மற்ற முறையில் அடக்கு முறைகளையும், கெடுபிடிகளையும் ஏற்படுத்தி தொழிலாளர்களை நீண்ட தூரப் போராட்டத்திற்கு இட்டுச் சென்று பட்டினி போட்டு வதைக்கத் திட்டம் தீட்டினர். இதையெல்லாம் துச்சமென நினைத்து போராட்டத்தை நாளுக்கு நாள் பலப்படுத்தினார்கள் தொழிலாளர்கள்,



தொண்ணூறு நாட்கள் தொடர்ச்சியாகப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது இதை எப்படியும் பலவீனப்படுத்த வேண்டுமென்று கம்பெனி, போலிசாரின் உதவியை நாடியது. நிர்வாகத்தின் வேண்டுகோளிற்கிணங்க, போலீஸ் கோஸ்டியொன்று தோட்டத்திற்குள் நுழைந்தது. இதைக்கண்ட தொழிலாளர்கள் ஏதோ பாரதூரமாக நடக்கப் போகிறது என்ற அச்சத்தில் நாலாப் பக்கங்களிலிருந்தும் தொழிலாளர்கள் திரண்டு வந்து தேயிலைத் தொழிற்சாலைக்கு அருகில் ஒன்று கூடினர். திடீரென தொழிலாளர்கள் இப்படி ஒன்று கூடுவார்கள் என்பதை எதிர்பார்க்காத போலீசார் அதிர்ச்சியடைந்தார்கள். தொழிலாளர்கள் போலீசாரை முன்னேறிச் செல்ல விடாமல் தடுத்தனர். இதனால் ஆத்திரமுற்ற போலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதை தொழிலாளர்கள் கண்டித்து சத்தம் போட்டுள்ளனர். இதைக் கண்டு கொள்ளாத போலீசார் திரும்பத் திரும்ப பலமுறை துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இத்துப்பாக்கிப் பிரயோகம் 1970ம் ஆண்டு செப்டம்பர் மூதலாம் திகதி நடந்தது இத்துப்பாக்கிப் பிரயோகத்தின் போது இரு கட்டிளங்காளைகளான அழகர் சாமி, ராமையா என்ற இரு தொழிலாளர்களும் குண்டடிபட்டு படுகாயமுற்றனர். இவர்களை உடனடியாக பதுளை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று நான்கு நாட்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிகிச்சை அளிக்கப்பட்டு நாளாவது நாள் மரணமடைந்து விட்டார்கள்.

இவர்களின் பூதவுடல்களை தொழிற்சங்கத்தலைவர்கள் பொறுப்பெடுக்க முன்வர வில்லை. இது தொடர்பான மரண விசாரணையில் தொழிலாளர்களுக்குச் சார்பாக இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் ஊவா மாநில பிரதிநிதியும், சட்டத்தரணியுமான திரு. மார்சல் பெரேரா ஆஜராகி, விசாரிப்பதற்கு உதவியாக பணியாற்றினார். மரண விசாரணை முடிந்த பின்பு இவர்களின் பிரேதத்தை எடுத்துச் செல்வதற்கு மரண விசாரணை அதிகாரி உத்தர விட்டார். ஆனால் போலீசார் பிரேதத்தைக் கொடுக்க முடியாது என்று கூறியதோடு, தொழிலாளர்கள் கொண்டு வந்த பிரேதப் பெட்டிகளையும் திருப்பிக் கொண்டு போகச் சொல்லி விட்டனர். அதன் பின்பு போலீசாருடன் பேச்சு வார்த்தை நடத்தி பிரேதத்தை டெக்டரில் வைத்து முன்பும் பின்பும் ஒரு டசின் போலீசார் புடைசூழ பகல் 11.00 மணிக்கு தோட்டத்திற்கு எடுத்துச் செல்லப் பட்டது, பிரேத ஊர்வலத்தில் தொழிலாளர்களோ, தொழிற்சங்கப் பிரமுகர்களோ நகர, கிராம மக்களோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படவில்லை. தோட்டத் தொழிலாளர்களையும், உறவினர்களையும் நல்லடக்கம் செய்யும் மயானத்திற்கு வருமாறு போலிசார் உத்தரவு பிறப்பித்திருந்தனர். இத்தியாகிகளின் இறுதிக் கிரியைகளில் உறவினர்கள் உட்பட, மொத்தம் ஐம்பது பேர்களே கலந்து கொண்டனர்.

பதுளை சீனாக்கொல்லை மேற் பிரிவைச் சேர்ந்த லெட்சுமணன் — குப்புத்தாய் மகன் அழகர்சாமி. இவர் இறக்கும்போது வயது 22. திருமண மேடையை எதிர் நோக்கிப் பல கனவுகளைக் கண்டு கொண்டிருந்த கட்டிளங்காளை. இவருக்கு ராஜாமணி, தங்கவேல் என்ற இரு சகோதரர்களும் முத்தாலம்மா, கிரும்பாதேவி ஆகிய இரு சகோதரிகளும் இருக்கின்றனர்.



சீனாக்கொல்லை கீழ் பிரிவைச் சேர்ந்த பெருமாள்— ராமாய் ஆகியோரின் மகன் ராமையா. திருமணம் முடித்து ஒன்பதே மாதங்கள். வாழ்வில் எத்தனை கனவுகளைக் கண்டாரோ! வயிற்றில் எட்டு மாத பச்சிளம் குழந்தை தகப்பனின் முகத்தை அறியாப் பருவத்தில் மனைவி விஜயலெட்சுமி சுமந்திருக்க இந்த இருவரையும் தவிக்க விட்டு ராமையா சென்றது அந்த தோட்டத்து மக்களையே கலங்கச் செய்தது. இவர் மரணமடையும்போது இவருக்கு வயது 26.

கணவனின் வீரத்தைப் பெருமையோடு எண்ணி தான் ஈன்றெடுத்த ராமையாவின் வாரிசான மகன் யோகேஸ்வரனோடு கணவரல்ல மேற் பிரிவில் வாழ்ந்து வருகிறார் ராமையாவின் மனைவி விஜயலெட்சுமி. மகன் யோகேஸ்வரன் பசறை தமிழ் மகா வித்தியாலயத்தில் க. பொ. தர. சாதாரண தர பரீட்சையை முடித்துவிட்டு வேலை தேடும் படலத்தில் ஈடுபட்டுள்ளார்.

தந்தையின் வீரத்தையும், தாயாரின் தியாகத்தையும் மனதிற்கொண்டு எதிர்காலத்தில் சமூக மறுமலர்ச்சிப் பணியில் அக்கறை கொண்டு பணியாற்ற வேண்டுமென்று யோகேஸ்வரனை வாழ்த்துகிறோம்.

இந்த வீரத் தியாகிகளின் மரணம் ஊவாப் பகுதி தொழிலாளர் மத்தியில் புத்துணர்ச்சியை ஏற்படுத்தி உரிமைக்குப் போராடும் பக்குவத்தை அடைய வித்திட்டது.

போலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான இவர்களது பிரேதத்தை தொழிற்சங்கத் தலைவர்கள் முன்னின்று பொறுப்பெடுக்கவில்லை என்ற செய்தியை அறிந்த வீ. கெ. வெள்ளையன் அவர்கள் அட்டனில் நடந்த மாத்தளை நாளாந்ததோட்ட போராட்டத்தில் மரணமான நான்கு தியாகிகளுக்குத் தொழிற்சங்கங்கள் ஒன்று கூடி நடத்திய அஞ்சலிக் கூட்டத்தில் 25,000க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு மத்தியில் சொல்லிக் குமுறி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அழுததோடு, தனது கடுமையான கண்டனத்தையும் வெளிப்படுத்தினார். "இச்செயல் தொழிற்சங்கங்களின் பலவீனத்தைக் காட்டி விட்டது. நான் மாத்திரம் இலங்கையில் இருந்திருந்தால் நிச்சயமாக நானே சென்று பொறுப்பெடுத்திருப்பேன். துரதிஸ்டவசமாக இச்சம்பவம் நடைபெறும்போது நான் இந்தியாவில் இருந்தேன்" என்று தனது கண்டன செய்தியில் குறிப்பிட்டார்.

எது எப்படி இருந்தாலும், தொழிலாளர்களின் நீண்ட இரத்தக்கறை படிந்த வரலாற்றில் தியாகிகள் அழகர்சாமி, இராமையா பெயர்கள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டு விட்டன.

வாழ்க தியாகிகள் அழகர்சாமி-ராமையா நாமம்.

**1970ம் ஆண்டின் தொழிற்சங்கப் போராட்ட வரலாற்றில் புதிய திருப்புமுனையைத் தோற்றுவித்த கருங்காலி தோட்டத் தொழிலாளர்கள் போராட்டம்**

மாத்தளை நாளாந்த தோட்டம் (கருங்காலி தோட்டம்) தனியாருக்குச் சொந்தமாக இருந்தது. இத்தோட்ட முதலாளிகள் பலகாலமாக தொழிலாளர்களின் உரிமைகளை வழங்க மறுத்து அவர்களை அடிமைப் படுத்தி உழைப்பை மாத்திரம் உறிஞ்சி ஏப்பம் விட்டதோடு தொழிலாளர்கள் உரிமைக் குரல் எழுப்பின போதெல்லாம் காடையர்களைத் தோட்டத்து வாகனங்களில் ஏற்றி வந்து தொழிலாளர்களை இரவு வேலைகளில் அடிமைப் படுத்தினர்.

இந்த அடக்கு முறையையும், வெளியார் (காடையர்கள்) தோட்டத்திற்குள் வந்து தொழிலாளர்களைத் தாக்குவதையும் எதிர்த்து தொழிலாளர்கள் அப்பகுதி போலிசில் புகார் கொடுத்தும் வந்துள்ளார்கள்! ஆனால் போலிசாரை கைக்குள் போட்டுக் கொண்டு தொழிலாளர்



களை அடக்கி ஆட்சி புரிந்து வந்தனர் தோட்ட முதாலாளிமார்கள்.

இந்நிலையிலிருந்து தொழிலாளர்களை பாதுகாக்கவும், உரிமைகளைப் பெறவும் தோட்டத்திலுள்ள தொழிலாளர்களில் முக்கியஸ்தர்கள் ஒன்றுகூடி தொழிற்சங்கத்தில் இணைவது என்று முடிவு செய்தனர். இதன்படி தொழிலாளர்கள் அனைவரும் ஒரே நேரத்தில் தொழிலாளர் தேசியசங்கத்தில் இணைந்தனர். தொழிற்சங்கம் தோட்டத்திற்குள் புகுந்து விட்டதை தோட்ட நிர்வாகம் தெரிந்து கொண்டும் நிர்வாகம் கைக்கட்டிக்கொண்டிருக்குமா? இதற்கு முன்னோடியாக இருந்த தொழிலாளர்களைத் திட்டமிட்டு நசுக்கக் கைக் கூலிகளை ஏவி விட்டது. தொழிலாளர்களின் கட்டுக் கோப்பும், ஒற்றுமையும் இத்திட்டத்தைத் தவிடு பொடியாக்கின.

தொழிலாளர்கள் மன தைரியத்தோடும், உறுதியோடும் தங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் தொழில் இலாக்கா, தொழில் நீதிமன்றம் என்று சென்று தங்களின் உரிமைகளை வெற்றி கொண்டனர். இந்த வெற்றிக் களிப்பிலே 1970ம் ஆண்டு நவம்பர் 15ம் தேதி தொழிலாளர் தேசிய சங்கத்தின் கொடியை நாளாந்த தோட்ட பிரட்டுக் களத்தில் ஏற்றி வைத்து உரிமை முழக்கமிட்டனர். இந்த முதலாவது கூட்டத்தில் சங்கத் தலைவர் திரு. அய்யாத்துரை, மாவட்டப் பிரதிநிதி திரு. எஸ் ஏ. ரட்ணராஜா, திரு. எஸ். பி. நாகராஜா, மாவட்டத் தலைவர் திரு. எஸ். முனியாண்டி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதனால் தோட்ட நிர்வாகத்தினரின் ஆத்திரம் டு பிடித்தது. தொழிலாளர்களின் ஆர்ப்பாட்டத்தைக் கண்டு குமுறினார்கள். தொழிலாளர்களோ தொடர்ந்து உரிமைகளை வென்றெடுப்பதில் முன்னின்று உழைத்தனர். நிர்வாகம் தொடர்ந்து இரவு நேரங்களில் குண்டர்களை ஏவி தொழிலாளர்களை அச்சுறுத்தி வந்தது. போலிசாரும் அடிக்கடி தோட்டம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வந்து போய்க் கொண்டிருந்தனர். இறுதியாக முதலாளிமார்கள் 1970ம் ஆண்டு டிசம்பர் மாதம் 29ம் திகதி மாத்தளையில் தொழிலாளர்களை ஒழித்துக் கட்டவும், சங்கத்தை இல்லாதொழிக்கவும் திட்டம் தீட்டினார்கள். அதன்படி டிசம்பர் 30ம் திகதி இரவு தொழிலாளர்கள் வீடுகளை உடைத்து அவர்களின் உயிர்களையும், உடமைகளையும் சூறையாடிவிட வேண்டுமென்று ஓர் பெரிய குண்டர்கள் அடங்கிய கூட்டத்தை ஏற்பாடு செய்தனர். இந்த செய்தியை சாதுர்யமாக முதல் நாளே தெரிந்து கொண்ட தொழிலாளர்கள் அதற்கேற்றவாறு தயாராக இருந்தனர். வீடுகளில் பெண்களையும், பிள்ளைகளையும் இருக்க விடாது அவர்களை ரப்பர் காட்டுக்கு அனுப்பிவிட்டு ஆண்கள் மாத்திரமே குண்டர்களை எதிர்கொள்ளத் தயாராக இருந்தனர்.

குறிப்பிட்டபடி நடுசாமம் இரண்டு மணியளவில் தோட்டத்து காமன் பொட்டலில் இரண்டு லொறிகளில் நூற்றுக்கு மேற்பட்ட காடையர்கள் வந்து தடதடவென இறங்கினர். கையில் கத்தி, கம்பு போன்ற ஆயுதங்களுடன் வந்திருப்பதைக் கண்ட தொழிலாளர்கள் தாங்களும் அதை எதிர்கொள்ளத் தயாராக இருந்தனர். இறங்கிய காடையர்களும், குண்டர்களும் லயன்களை நோக்கிச் சென்று கதவுகளை உடைக்க முற்பட்டனர். இவர்களுக்கு வேலை வைக்காது தொழிலாளர்கள் எல்லோரும் கதவுகளைத் திறந்து கொண்டு ஆயுதங்களோடு வெளிப்பட்டனர். இரு சாராருக்குமிடையே கடுமையான மோதல். இதை எதிர்பார்க்காத காடையர்கள் திக்குமுக்காடினர். சிதறினர். பலர் காயமடைந்தனர், வந்தவர்கள் தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓட்டம் பிடித்து தாங்கள் வந்த வாகனங்களில் ஏறிச்சென்று விட்டனர்.

அன்று இரவு உறக்கமில்லாமல் பொழுது விடிந்தது. காலையில் தொழிலாளர்கள் முதல் நாள் இரவு நடந்த நிகழ்ச்சியை மறந்து விட்டதுபோல் எதுவுமே நடக்காதது



போல பிரட்டுக்களம் நோக்கிச் சென்றனர். தோட்டக் கண்டெக்டர் பிரட்டுக்களத்துக்குத் தொழிலாளர்களை வேலைக்கு அனுப்பினார். ஆனால் பிரட்டுக் களத்தைவிட்டு வந்த தொழிலாளர்கள் முதல்நாள் நிகழ்ச்சி காரணமாக இன்னும் ஏதாவது நடக்கலாம் என்ற எதிர்பார்ப்போடு வேலைக்குச் சென்றனர்,

காலை ஆறு மணிக்கெல்லாம் தோட்டத்திற்கு சொந்தமான ஜீப் வண்டியில் தோட்டத்துக் காவல்காரர்கள் குடிபோதையில் தோட்டத்து நாற்சந்தி காமன்பொட்டலில் வந்திறங்கி தொழிலாளர்களை நோக்கி சத்தம்போட்டனர். அக்காலக் கட்டத்தில் செயலாளராக இருந்த ஆறுமுகம் முன்னே வந்து ''என்ன'' என்று கேட்டார், அதை காதில் போட்டுக் கொள்ளாமலேயே துப்பாக்கியால் சுட்டபோது. தெய்வாதீனமாக ரோட்டின் மறுபக்கம் புரண்டு விழுந்து தப்பித்துக் கொண்டார் ஆறுமுகம்.

ஆனால் இந்த சத்தத்தைக் கேட்டு ரப்பர் பால் வெட்டிக் கொண்டிருந்த பார்வதி திரும்பிப் பார்த்த போது, ஆறுமுகத்திற்கு ஏவிய குண்டு பார்வதியின் இதயத்தைத் தாக்க, பார்வதி புரண்டு விழுந்து ஸ்தலத்திலேயே மரணமடைந்தாள் பதினெட்டு வயது பச்சிளம் குமரியான பார்வதி குண்டடிபட்டு விழுந்ததைக் கண்டு செய்வதறியாது திகைத்து நின்ற காவல்காரர்கள், தூரத்தில் ஆறுமுகம் லயத்தை நோக்கி தப்பித்து ஓடிக் கொண்டிருப்பதைக் கண்டு, எங்கே நம்மைக் காட்டிக் கொடுத்து விடுவானோ என்ற அச்சத்தில் மீண்டும் அவனை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்யவே, அந்த துப்பாக்கிக் குண்டு தற்செயலாக அவ்வழியே வந்த இருபத்திரண்டு வயதானஇளைஞர் கந்தையாவின் உயிரைப் பறித்தது. அத்தோடு அவர்கள் ஓய்ந்துவிட வில்லை. மீண்டும் ஓடிக் கொண்டிருந்த ஆறுமுகத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது, அது ஆறுமுகத்தின் உடலில் பட்டு, எதிரே ரப்பர்

www.tamilarangam.net



மரத்திற்கு அடியில் கக்கூஸ் இருந்து கொண்டிருந்த பத்து வயது ராமசாமி என்ற சிறுவனின் வயிற்றிலும் பட்டு இருவரும் ஸ்தலத்திலேயே மரணமடைந்தனர். மொத்தமாக இத்துப்பாக்கிப் பிரயோகத்தில் நான்கு பேர் பலியாகி விட்டனர்.

இச்செய்தி கேட்டு வேலைக்குச் சென்ற தொழிலாளர் அனைவரும் வீட்டுக்குத் திரும்பி விட்டனர். தோட்டமே அல்லோல கல்லோலப்பட்டது. தொழிலாளர்களின் அழுகை சத்தம் தோட்டத்தையே அதிர வைத்தது. ரத்த வெள்ளத்தில் கிடந்தவர்களைக் காணச் சென்றவர்கள் கண்ணீர் வெள்ளத்தில் மிதந்தனர். கருங்காலி தோட்டத்தில் நடந்த துப்பாக்கிப் பிரயோகச் செய்தி நாட்டின் நாலா பக்கமும் பரவியது. ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் கருங்காலி தோட்டத்தில் குழுமினர்.

இச்செய்தி காலை 7-30 மணியளவில் அட்டனில் இருந்த வீ. கே. வெள்ளையன் அவர்களுக்குக் கிட்டியது. அதே நேரத்தில் கம்பளை புசந்தன்னை தோட்டத்தில் இருந்த சங்கத் தலைவர் திரு. டி. அய்யாத்துரை அவர்களுக்கும் இச்செய்தி கிடைத்தது. உடனே அவர் நேராக கருங்காலி தோட்டத்திற்கு வந்து சேர்ந்தார். காலை பத்து மணிக்கெல்லாம் மரணமடைந்த தொழிலாளர்களின் பூதவுடலை வீ. கே வெள்ளையன் அவர்கள் பொறுப்பெடுத்துக் கொண்டார். ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் மத்தியில் போலிஸ் விசாரணை ஆரம்பமாகியது.

சாட்சிகளைப் பதிவு செய்த போலிசார் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்தனர். 1970ம் ஆண்டு டிசம்பர் 31ம் திகதி இச்சம்பவம் நடந்தது. 1-1-71ல் இவர்களை நல்லடக்கம் செய்வதற்கான ஏற்பாட்டை செய்தார்கள். போலிசார் மரண ஊர்வலம் செல்ல அனுமதி மறுத்தனர் வழமையாக பிரேதம் மயானத்திற்குக் கொண்டு போகும் வழியில் நகர்ப்புற, கிராமப்புற மக்கள் தோட்டத்



தொழிலாளர்கள் திரண்டு வந்து ஊர்வலத்தில் கலந்து கொண்டார்கள். இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட தொழிற்சங்கப் பிரமுகர்கள், முதலாளிமார்களின் அடக்கு முறைக்கு எதிராகக் குரல் எழுப்பினர்.

மலையகத்தில் எத்தனையோ போராட்டங்களில் முதலாளிமார்களின் துப்பாக்கிக் குண்டுக்கு தொழிலாளர்கள் பலியாகி உள்ளனர். அவற்றுக்கெல்லாம் முத்தாய்ப்பு வைத்தது போன்று இந்தப் போராட்டம் அமைந்தது. இந்த போராட்டத்திற்குக் காரண கர்த்தாவாக இருந்த தோட்ட முதலாளிமார்கள் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப் பட்டார்கள். மூன்றாண்டுகள் வழக்கு நடந்தது. இலங்கை சரித்திரத்திலேயே நிர்வாகத்தினர் குற்றவாளியாகக் காணப்பட்ட வழக்கு இதுவாகும். இச்செய்தி தொழிலாளர்களின் போராட்ட வரலாற்றில் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியது.

இந்த வழக்கை வெற்றியாக நடத்த வீ. கே. வெள்ளையன் அவர்கள் ஒவ்வொரு விசாரணையின் போதும் நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கை உன்னிப்பாக கவனித்து அடிக்கடி ஆலோசனைகளையும் வழங்கினார்.

1971ம் ஆண்டு ஜனவரி 7ம் திகதி இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டித்து மாத்தளை அவிவிஹார விளையாட்டுத் திடலில் தலைவர் திரு டி. அய்யாத்துரை அவர்கள் தலைமையில் சகல தொழிற்சங்கங்களும் ஒன்று திரண்டு முதலாளிமார்களின் அடக்கு முறைக்கெதிராக குரல் எழுப்பின.

அதே ஆண்டு பெப்ரவரி மாதம் 15ம் திகதி அட்டன் மாநகரில் சகல தொழிற்சங்கங்களையும் சேர்ந்த 25, 000க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வெள்ளையன் தலைமையில் ஒன்று திரண்டு அட்டன் டன்பார் விளையாட்டு மைதானத்தில் பிரமாண்டமான கண்டனக் கூட்டமொன்றை நடத்தினர். தொழிற்சங்கத் தலைவர்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கருத்து வேறுபாடுகளை மறந்து ஒரே மேடையில் தோன்றி அடக்குமுறையைக் கண்டித்தனர்.

இக்கூட்டத்தில் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஜனாப் ஏ. அஸீஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி, செங்கொடி சங்கத் தலைவர் திரு என். சண்முகதாசன், ஐக்கிய தோட்டத் தொழிலாளர் யூனியன் அமைப்புச் செயலாளர் திரு. எஸ். பாஸ்கரன், விவசாய தொழிலாளர் காங்கிரஸ் திரு. ஏ. கே. கந்தசாமி, தோட்ட சேவையாளர் சங்கத்தின் அட்டன் மாநிலத் தலைவர் திரு. வி. என். நேசமணி மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

இக்கண்டனக் கூட்டம் தொழிற்சங்க வரலாற்றில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தி, தொழிலாளர் ஒற்றுமைக்கும், தொழிற்சங்க ஒற்றுமைக்கும் வழி வகுத்தது.

## 1977ம் ஆண்டில் காணி சுவீகரிப்பின் விளைவாக எழுந்த போராட்டம்

மலையகத்தில் 1977ம் ஆண்டு மே மாதம் நுவரெலியா—மஸ்கெலியா தொகுதியில் 7000 ஏக்கர் தேயிலை காணியை சுவீகரித்து, நிலமற்ற கிராமவாசிகளுக்குப் பகிர்ந்தளிக்க அன்றைய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. இந்தக் காணியைச் சுவீகரித்து, கிராம மக்களைக் குடியேற்றுவதால், இத்தோட்டக் காணிகளில் காலம் காலமாகத் தொழில் புரிந்த பத்தாயிரம் தொழிலாளர்களும், அவர்களின் குடும்பத்தினரும் தொழில் இழந்து நடுரோட்டுக்குத் தள்ளப்படுவதை எதிர்த்து தொழிங்சங்கங்கள் போராட முன்வந்தன,

இப்போராட்டத்தில் இவ்விரு மாவட்டங்களைச் சேர்ந்த 1,25,000 தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.



அரசாங்கத்தின் இந்த திட்டத்தைச் செயற்படுத்த காணி சீர்திருத்த ஆணைக்குழு அதிகாரிகள் முதன் முதலில் டிக்கோயா பட்டல்களை தோட்டத்தில் காணியை சுவீகரிக்க போலிசாரின் உதவியுடன் வந்தனர். அங்குள்ள தொழிலாளர்கள் இதை ஆட்சேபணை செய்து காணியை அளப்பதற்கு (சர்வே பண்ணுவதற்கு) வந்த அதிகாரிகளை காணியை அளக்கவிடாது தடுத்தனர். இந்தப் பகுதியில் தான் முதன் முதலில் காணி சுவீகரிப்பை எதிர்த்து தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

காணியை சுவீகரிக்கும் திட்டத்தை அரசாங்கம் கைவிடாமல், வேறு சில தோட்டங்களில் காணியை சுவீகரிக்க முற்பட்டதை ஆட்சேபித்து, முழு மாவட்டத்தையும் சேர்ந்த தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் மே மாதம் முதலாம் நாள் தொடக்கம் ஈடுபட்டார்கள். தேர்தல் நடத்த நாட்டில் திட்டமிட்டுள்ள அவ்வேளையில் இப்போராட்டம் அரசாங்கத்திற்கு பெரும் தலையிடியாக இருந்தது. இதன் காரணமாக அரசாங்கம் மே மாதம் 11ம் திகதி சகல தொழிற்சங்கங்களையும் தொழில் திணைக்களத்தில் ஒரு பேச்சுவார்த்தைக்கு அழைத்தது. இப்பேச்சுவார்த்தை அப்போதைய தொழில் கமிசனர் திரு. டிமெல் தலைமையில் நடைபெற்றது. இப்பேச்சுவார்த்தையில் தோட்டத் தொழிற்துறை அமைச்சு அதிகாரிகளும், காணி சீர்திருத்த ஆணைக்குழு தலைவர் ஆகியோரும் கலந்து கொண்டனர், நீண்ட நேரம் நடத்தப் பட்ட இப்பேச்சுவார்த்தையில் தேயிலைக் காணிகளை சுவீகரிப்பதை அரசாங்கம் வாபஸ் பெற்றுக் கொண்டது.

இவ்வெற்றிச் செய்தியை ஏற்றுக்கொண்ட தொழிற்சங்கப் பிரமுகர்கள் தொழில் திணைக்களத்தைவிட்டு மகிழ்ச்சியோடு வெளியேற முற்பட்டபோது, எல்லோருக்கும் அதிர்ச்சி தரும் செய்தி தொலைபேசியில் தெரிவிக்கப் பட்டது. ஆம்... மே மாதம் 11ம் திகதி மாலை 4.00

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மணிக்கு டெவன் தோட்டத்தில் போலிசாரின் துப்பாக்கிக் குண்டுக்கு ஒருவர் பலியாகி விட்டார் என்ற செய்தி, வெற்றியுடன் திரும்பியவர்களுக்குப் பேரதிர்ச்சியைக் கொடுத்தது. தொழில் திணைக்களத்தில் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்த வேளையில், போலிசாரின் உதவியுடன் பத்தனை டெவன் தோட்டக் காணியை அதிகாரிகள் சர்வே செய்து சுவீகரிக்கச் சென்றனர். இதை தொழிலாளர்கள் ஒன்றுகூடி ஆட்சேபணை செய்ய முற்பட்டனர். இதை மறுபக்கமிருந்து பார்த்த வட்டக் கொடை தொழிலாளர்கள் டெவன் தோட்டத்தில் குழப்பம் என நினைத்து அதை அறிவதற்காக ஆற்றைக் கடந்து வந்தனர். அவர்களுடன் தொழிலாளர் தேசிய சங்கத்தைச் சேர்ந்த அங்கத்தவர்கள் சிவனு லெட்சுமணன் மற்ற தொழிலாளர்களுடன் வந்தார். இந்த நேரத்தில் போலிசாருக்கும், தோட்டத்து மக்களுக்குமிடையில் வாய் தகராறு முற்றியது. போலிசார் தொழிலாளர்களைப் பயமுறுத்தினர். தொழிலாளர்கள் அசையாது நின்றனர். அதனால் ஆத்திரமடைந்த பத்தனை போலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் இத்துப்பாக்கிப் பிரயோகத்தில் சிவனு லெட்சுமணன் குண்டடிபட்டு, கொட்டக்கொலை அரசாங்க மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானார்.

மலையகத்திலே தேயிலைக் காணிகளை சுவீகரித்து, சிங்கள மக்களைக் குடியேற்ற அரசாங்கம் எடுத்த நடவடிக்கையை தொழிலாளர்கள் தொழிற்சங்க கருத்து வேறுபாடுகளை மறந்து 1,25,000 பேர்கள் நடத்திய மாபெரும் போராட்டத்தின் மூலம் வெற்றி பெற்றனர். இப்போராட்டத்தின்போது போலிசாரின் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியான சிவனு லெட்சுமணன் தோட்டத் தொழிலாளர்கள் வரலாற்றில் ஒரு தியாகியாக இடம் பெற்றுள்ளார். இந்தப் போராட்டத்தை ஏறெடுத்துப



பார்க்காத தலைவர்களெல்லாம் இறுதி யாத்திரையில் வீர முழக்கமிட வந்து குவிந்தனர்.

இத்தகையதொரு மாபெரும் போராட்டத்தை தொழிற் சங்கங்கள் கூட்டாக நடத்த நடவடிக்கை எடுத்தவர் தொ. தே. சங்க நிதிச் செயலாளர் திரு. பி. பெருமாள் அவர்கள் என்பதை இன்று யாரும் அறிந்திருக்க முடியாது. இவர்தான் முதன் முதலில் அட்டனில் இயங்கி வந்த தொழிற்சங்க கூட்டுக் கமிட்டி செயலாளர் திரு. ஜி. ராஜகோபால் அவர்களிடம் அட்டன் காரியாலயத் தில் வைத்து காணி சுவீகரிப்புப்பற்றி பேசிக் கொண்டிருந்த போது, ''மயிலே மயிலே என்றால் மயில் இறகு போடாது. அதுபோல காணிசுவீகரிப்பை ஆட்சேபித்துவேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்துவதன் மூலமே இதைத் தீர்க்க முடியு''மென்றார். அதன் பின்பே தொழிற்சங்கக் கூட்டுக் கமிட்டி கூடி இப்போராட்டத்தை நடத்துவதற்கு முன் வந்தது இக்கூட்டுக் கமிட்டியில் தொழிலாளர் தேசிய சங்கமும் அங்கத்துவம் பெற்றிருந்தது.

இப்போராட்டத்தின் போது மரணமடைந்த சிவனு லெட்சுமணன் என்ற தொழிலாளியின் உடலை எங்கு வைப்பது என்ற பிரச்சினை ஏற்பட்டது. பத்தனையில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் மாவட்டக் காரியாலயம் ஒரு சிறிய இடமென்பதால், அட்டன் மாவட்ட தொழிற் சங்கக் கூட்டுக் கமிட்டி ஆலோசனைப்படி, இ. தொ. கா. ஆபீசில் வைப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. தேர்தல் பிரச்சாரக் காலமாதலால் அமைச்சர் தொண்டமான் இந்த இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டதோடு, இதை தனது தேர்தல் பிரச்சாரத்திற்கும் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டார்.

அமைச்சர் காமினி திஸ்ஸாநாயக்காவும் தனது தேர்தல் பிரச்சாரத்திற்கு இதைப் பயன்படுத்தினார். சிவனு லெட்சுமணன் குடும்பம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தேர்தல் மேடைகளில் இவர்களைப் பயன்படுத்தினார்கள். ஆனால் இத்தொழிலாளியின் மரணத்தின் பின் நடந்த சவப்பெட்டி முதல் அனைத்து செலவுகளையும் செய்தது தொழிலாளர் தேசிய சங்கம். இதை எல்லோரும் அச்சந்தர்ப்பத்தில் மறந்தனர். சிவனு லெட்சுமணனுக்கு கல்லறை கட்ட வட-கிழக்கு முதல், மலைநாடுவரை சில முக்கியஸ்தர்கள் நிதி திரட்டினார்கள். ஆனால் சிவனு லெட்சுமணன் மரணமடைந்து பதினொராண்டுகள் முடிவடைந்துவிட்டன. ஆனால் கல்லறைதான் இன்றுவரை கட்டப்படவில்லை. எங்கே கல்லறை? என்று மலையகம் கேட்கிறது. ஆனால் அதன் கேள்விக்கு விளக்கம் சொல்ல கல்லறைதான் இல்லை. அப்படியென்றால் வசூலித்த பணம் எங்கே? அதுவா அதை வசூலித்தவர்கள் தங்களின் சுயநலத்திற்காக பயன்படுத்திக் கொண்டனரோ என்னவோ. சிவனு லெட்சுமணன் மரணமடைந்து பதினொரு ஆண்டுகள் முடிவடைந்து விட்டன. ஆனால் இன்றுவரை அவரை நினைவுகூர கல்லறைதான் இல்லை. இவருக்கு கல்லறை ஒன்றை எழுப்ப தொழிலாளர்கள் நினைத்திருந்தால், அதன் அவசியத்தை உணர்ந்திருந்தால் என்றோ கல்லறை ஒன்றை உருவாக்கியிருப்பார்கள். ஆனால் இதிலிருந்து தெரிகிறது கடந்த பதினொரு ஆண்டு காலமாக மறைந்த தியாகி சிவனு லெட்சுமணனை யாருமே நினைத்துப் பார்க்கவில்லை என்பது

1977ம் ஆண்டு மே 12ம் திகதி நடந்த சிவனு லெட்சுமணனின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொள்ளப் புறப்பட்ட தொழிலாளர்கள் அட்டன் தலவாக்கொல்லை நகர்களில் வழிமறிக்கப்பட்டு தாக்கப்பட்டனர். அன்று காலை ஹை லண்ட்ஸ் கல்லூரி மாணவர்கள் நடத்திய அனுதாப ஊர்வலம் காடையர்களால் குழப்பப்பட்டு, மாணவிகள் தாக்கப்பட்டனர். சிவனு லெட்சுமணனின் பெயரைப் பாவித்து தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் இன்று இத்தியாகியின் பெயரையும், இச்சம்பவத்தையும்



மறந்து விட்டனர். வருகிற தேர்தல்களில் மீண்டும் இவர் பெயர் அடிபட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

உண்மைகள் என்றுமே சாகா வரம் பெற்றவை. இப்போராட்டத்தின்போது தொழில் திணைக்களத்தில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில், தொழிலாளர் தேசிய சங்கப் பொறுப்பாளர் திரு. ஸி வி. வேலுப்பிள்ளை, தலைவர் திரு. டி. அய்யாத்துரை, நிதிச் செயலாளர் திரு. பி. பெருமாள் ஆகியோர் கலந்து கொண்டனர். இறுதி ஊர்வலத்தின் ஏற்பாடுகளையும், சவ அடக்கத்திற்கு செய்ய வேண்டிய பணிகளையும் தொழிலாளர் தேசிய சங்கப் பொதுச் செயலாளர் திரு. பி. வி. கந்தையா ஏனைய கமிட்டி உறுப்பினர்களுடன் சேர்ந்து கவனித்தார். இந்த உண்மை நிலையை தொழிலாளர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் ஞாபகமூட்ட வேண்டியதாக உள்ளது. தொழில் திணைக்களத்தில் நடந்த பேச்சுவார்த்தையின்போது, வேலை நிறுத்தத்தை முடித்துக் கொண்டு வேலைக்குத் திரும்ப வேண்டுமெனத் துடிதுடித்த தொழிற்சங்கங்கள், இன்று மேடைகளில் சிவனு லெட்சுமணன் மரணத்தைப் பற்றி முழக்கமிடுவதைப் பார்க்க ஆச்சரியமாக இருக்கிறது

1940ல் முல்லோயா கோவிந்தனை சுட்ட போலிஸ் சார்ஜண்ட் சுரவராவுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது. அதேபோல, முப்பத்தியேழு ஆண்டுக்குக்குப் பின்பு நுவரெலியா மாவட்டத்தில் ஏழாயிரம் ஏக்கர் தேயிலைக் காணியை சுவீகரித்து கிராம மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதன் மூலம் பத்தாயிரம் தோட்டத் தொழிலாளர்கள் தொழில் இழக்க நேரிடுவதைத் தடுத்து நிறுத்த நடந்த போராட்டத்தில் 1977 மே 11ம் திகதி சிவனு லெட்சுமணன் என்ற இளம் காளையை டெவன் தோட்டப் போராட்டத்தில் போலிஸ் சார்ஜண்ட் துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தினார். அவருக்குப் பதவி உயர்வும், இடமாற்றமும் அரசாங்கத்தால் வழங்கப் பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆகவே மலையகத் தொழிலாளர் விசயத்தில் அதிகார வர்க்கம் இனபாகுபாடு கொள்கையையே கடைப்பிடித்து வருகிறது, என்பதற்கு இந்த வரலாறு ஓர் உதாரணம்

காணி சுவீகரிப்பை எதிர்த்து ஒரு இலட்சத்து இருபத்தையாயிரம் தொழிலாளர்கள் நடத்திய பத்துநாள் போராட்டத்தில் வெற்றிவாகை சூடும்போது அதன் மகிழ்ச்சியைக் கொண்டாட வேண்டிய வேளையில், சிவனு லெட்சுமணன் பலியாகி தியாகி பட்டியலில் இடம்பிடித்துக் கொண்டார். சிவனு லெட்சுமணன் நாமம் தொழிலாளர் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பதிக்கப்பட்டு விட்டன. வாழ்க அவரின் நாமம்.

வளர்க தொழிலாளர் சக்தி.
வாழ்க தியாகிகளின் நாமம்.

□□□

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஆசிரியரைப் பற்றி...

கம்பொல புசந்தன்னை தோட்டத் தொழிலாளியான இவர் 1966ம் ஆண்டு தொழிலாளர் தேசிய சங்கத்தில் இணைந்து தோட்டக் கமிட்டி, மாவட்டக் கமிட்டி என்று செயல்பட்டவர். 1968ம் ஆண்டு மத்தியக் கமிட்டி உதவிப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1970ம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெற்ற மாநாட்டில் இவர் சங்கத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு இன்று வரை ஸ்தாபனத்தின் தலைவராக செயல்பட்டு வருகிறார்.

ஆரம்ப காலம் முதல் எழுத்தாற்றல், பேச்சாற்றல் கொண்ட இவர், சிறுகதை, கட்டுரை, விமர்சனம் தொடர்கதை போன்றவற்றை ரோகிணி, மலைநாட்டான், மாத்தளை ரோகிணி போன்ற புனைபெயர்களில் எழுதி வந்துள்ளார்.

இவரின் இயற்கைப் பெயர் தவசிதேவர் அய்யாத்துரை என்பதாகும். ஆரம்பம் முதலே பொதுநல சிந்தனையுள்ள இவர், பல்வேறு இலக்கிய நண்பர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டு பல கவிஞர்களின் கவிதைகள் புத்தகமாக வெளிவர தனது பங்களிப்பைச் செய்து வந்துள்ளார்.

தொழிற்சங்கவாதியான இவர், எழுத்துத்துறையில் ஈடுபடுவதற்கும் ஆர்வம் கொள்வதற்கும் காரண மாயிருந்தவர் மலையக மூத்த கவிஞரும், எழுத்தாள ருமான ஸி.வி. வேலுப்பிள்ளை அவர்களே என்றால், அது மிகையாகாது. இதன் காரணமாகத்தான் இவர் தனது இலக்கியத்துறைக்கு அவரையே வழிகாட்டி யாகக் கொண்டு எழுதி வருகிறார்.

மலையகத்தில் நாவல்கள் எழுதுபவர்கள் இன்று இல்லை என்ற குறைபாட்டை நீக்க இவர் தினகரனில் இதுவரை நான்கு தொடர்கதைகளை எழுதியுள்ளார். அவை;

'வந்த துன்பம் போதும், பூங்கோதை புயலானாள், அவளுக்கு அவன் துணை, இதயத்தில் இணைந்த இரு மலர்கள்'' என்பனவாகும்.

— மாத்தளை கார்த்திகேசு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்